Registered as a News Paper in Sri Lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 | திருவள்ளுவர் ஆண்டு 2046 சித்திரை 06 ஞாயிற்றுக்கிழமை (19.04.2015) | பக்கங்கள் 20 | ஓசை – 201

# குடிநீரில் எண்ணெய்க்கசிவு; சந்திக்க மறுக்கும் முதல்வர்

## யாழ். மருத்துவர் சங்கம் குற்றச்சாட்டு

(சுன்னாகம்)

சுன்னாகத்திலுள்ள கிணறுகளில் கழிவு ஒயில் கலந்துள்ளமை தொடர்பாக வட மாகாண முதலமைச்சரை நேரடியாகச் சந்தித்து கலந்துரையாடுவதற்கு அனுமதி தருமாறு கோரிய போதிலும், அவர் எவ்வித பதிலையும் தரவில்லையென யாழ். மாவட்ட மருத்துவர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

சுன்னாகம் பிரதேசத்தில் உள்ள கிணறுகளில் கழிவு ஒயில் கலந்துள்ளமை சம்பந்தமான ஆவணப்பட இறுவட்டு வெளியிடும் நிகழ்வு நேற்று முன்தினம் சுன்னாகம் கதிரமலை சிவன் கோவில் மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் சிறப்புரையாற்றும் போதே யாழ்.மாவட்ட மருத்துவர் சங்கத்தலைவர் முரளி வல்லி புரநாதன் இந்தக் குற்றச்சாட்டை முன் வைத்தார். அவர் அங்கு தொடர்ந்து உரை யாற்றும்போது வலிகாமத்தில் உள்ள கிணறுகளில் கழிவு ஒயில் கலப்பது சம்பந்தமாக நாம் பல்வேறு தரப்பினரதும் கவனத்துக்கு கொண்டுவந்திருந்தோம். இதுகுறித்து வடக்கு மாகாண முதலமைச் சருக்கும் அறிவித்தோம். அத்துடன் அவரை நேரடியாகச் சந்தித்து கலந்துரை யாடவும் நேரம் கேட்டு கடிதம் எழுதியி ருந்தோம். நாம் கடிதம் அனுப்பி பல மாதங்கள் கடந்த நிலையிலும் அவர்

19 ஆம் பக்கம் பார்க்க



## சுன்னாகத்தில் ராடர் ஆய்வு

வடக்குமாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் சுன்னாகம் பகுதி நிலக்கட்டமைப்பை ஆராயும் நடவடிக்கைகள் நேற்று சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சுன்னாம் மின்சார நிலையப் பகுதியில் உள்ள பிரதேசத்தில் கழிவு ஓயில் நிலத்தில் கலந்துள் ளமை தொடர்பில் ஆராயும் பெருட்டு ராடர் கருவி மூலம் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்ட ராடர் கருவியின் உதவியுடன், தொழில் நுட்பவிய லாளர்களை உள்வாங்கி வடக்கு மாகாண சபை அமைத்த நிபுணர்குழு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுவருகிறது.

## இரட்டைப்பிரஜாவுரிமை இரண்டு வாரங்களுக்குள்

வெளிநாடுகளில் குடியுரிமை பெற்றுள்ள இலங்கைப் பிரஜை களுக்கான இரட்டைப் பிரஜாவு ரிமை இந்த மாத இறுதியில் அல்லது அடுத்த மாத ஆரம்பத் தில் வழங்கப்படும் என்று குடி வரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுவரையில் இரட்டைப் பிரஜாவுரிமை கோரி கிடைக்கப் பெற்றுள்ள விண்ணப்பங்களில், 300இற்கும் அதிகமான விண்ணப் பதாரிகளுக்கு இரட்டைப் பிரஜா வுரிமை வழங்கப்படவுள்ளது.

அவர்களின் விண்ணப்பங் களை இறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் தற்போது நடை

19 ஆம் பக்கம் பார்க்க

## கழிவு எண்ணெய் கலப்பு ஆய்வு நிபுணர் குழுவிற்கு அனுபவம் இல்லை

வலிகாமம் பகுதியில் உள்ள நிலத்தடி நீரில் கழிவு எண்ணெய் கலந்துள்ளமை சம்பந்தமான ஆய்வுகளை மேற்கொள்வதற் காக வடமாகாண சபையால் நியமிக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவில் இடம்பெற்றுள்ளவர் கள் இந்த விடயத்தில் முன் அனுபவமற்றவர்களென,களனி பல்கலைக்கழகத்தின் வைத் தியபீட விரிவுரையாளர் வைத் திய கலாநிதி குமரேசன் தெரி வித்துள்ளார்.

சுன்னாகம் சிவன் கோவில் மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இறுவட்டு வெளி யீட்டு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



நிலத்தடி நீரில் கழிவு எண் ணெய் கலந்துள்ளமை சம்பந்த மான ஆய்வினை வெளிநாட்டில் உள்ள முன்னனுபவம் வாய்ந்த வர்களை அழைத்து மேற்கொள் வதன் மூலமே இதனை முழு மைப்படுத்த முடியுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனைவிடுத்து, தற்போது வட மாகாண சபையால் நிய மிக்கப்பட்டுள்ள நிபுணர் குழு வில் இடம் பெற்றுள்ளவர்கள் ஒன்பது பேரின் தகமைகளை ஆராய்கையில், அவர்களில் எவரும் இத்தகைய அனுபவத் தைக் கொண்டவர்களாக இல்லை என்பது தெளிவாவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் இதனை மறு பரி

19 ஆம் பக்கம் பார்க்க

## பாரிய அரசியல் சக்தி ஒன்று மகிந்தவின் பின்னால் திரள்வு

### அனைவரும் புரியவேண்டும் என்கிறார் கெஹலிய

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பாரிய அரசியல சக்தி ஒன்று திரண்டுள்ளது என்ற விடயத்தை அனைத்து தீரப் புக்களும் புரிந்துகொள்ளவேண் டும் என முன்னாள் அமைச்சரும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷவை அம்பாந் தோட்டையில் உள்ள அவரது இல்லத்தில் 37இற்கும் மேற்பட்ட



நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி யிருந்தமை தொடர்பில் விபரிக் கையிலேயே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்:

தேர்தல் ஒன்றில் தோல்வி யடைந்தவர் மீண்டும் அரசியலில் ஈடுபட முடியாது என்று உலகில் எங்கும் சட்டம் இல்லை. எனவே மகிந்த ராஜபக்ஷவுக்கு இருக்கின்ற மக்கள் ஆதரவை அனைவரும் கருத்திற்கொள்ளவேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## அரசியலுக்கு வரும் எண்ணம் இல்லை என்கிறார் பசில்

முன்னாள் ஜனாதிப்தி மஹிந்தவின் சகோதரரும் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பசில் ராஜபக்ச மீளவும் அரசியலுக்கு வரும் எண்ணம் தனக்கு இல்லை என ஆங்கில ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் பாரிய ளவு ஊழல் மோசடிகள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் அவர் மீது சுமத்தப்பட்டன.

குறிப்பாக திவிநெகும திட்டத்தில் 6500 மில்லியன் ரூபாவினை தேர்தல் செலவுக்காக பயன்படுத்தியதாக இவருக்கு எதிராக நீதி மன்றில் குற்றம் முன்வைக்

19 ஆம் பக்கம் பார்க்க

## இந்தியா, சீனாவிற்கு சார்பானவன் நானல்ல

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

இந்தியாவிற்கோ அல்லது சீனா விற்கோ சார்பானவராக செயற்படவில் லையென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண் டிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவின் கேரள மாநிலத்தில் உள்ள குருவாயூர் ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொண்டிருந்தார். நேற்று இந்தியா வின் கொச்சின் விமான நிலையத்தை சென்றடைந்த பிரதமர் அங்கிருந்து நேரடியாக குருவாயூர்

19 ஆம் பக்கம் பார்க்க

## ஹெலிகொப்டர் கட்டணங்களை மகிந்தவிடமே பெறவேண்டும்

### கூறுகிறார் சுசில்


முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பிரசாரத்திற்காக பயன் படுத்தப்பட்ட ஹெலிகொப்டர்க ளுக்கான கட்டணங்களை செலுத்த முடியாது எனவும் அந்த கட்ட ணங்களை அவரிடமிருந்து பெற வேண்டுமெனவும் ஐக்கிய மக் கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரே மஜயந்த தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் பிரசார நடவடிக்கை களுக்காக ஹெலிகொப்டர்கள் பயன்படுத்தப்பட்டதாகத் தெரி விக்கப்படுகிறது.

அவ்வாறு பயன்படுத்தப்பட்ட ஹெலிகொப்டர்களுக்கு கட்ட

19 ஆம் பக்கம் பார்க்க

# தொலைத்தொடர்புக் கோபுரம் அமைக்குமாறு கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்.மண்டைதீவுப் பகுதியில் சீரான தொலைத்தொடர்பு சமிக்ஞை இன்மையால் மக்கள் பல அசௌகரியங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

மண்டைதீவுப் பகுதியில் இருந்து ஏனைய இடங்களுக்கு தொலைத்தொடர்பினை மேற் கொள்வதற்கும் ஏனைய இடங் களிலிருந்து மண்டை தீவுக்கு அழைப்பினை ஏற்படுத்துவதற்கும் சிரமமாக உள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். குறிப்பிட்ட சில பகுதிகளில் மாத்திரமே முழுச் சமிக்ஞை பெறக்கூடி யதாக இருப்பதாகவும் ஏனைய பகுதிகளில் சமிக்ஜை கிடைத்தா லும் அங்கிருந்து தொடர்பினை ஏற்படுத்திக் கதைக்க முடியாமல் இருப்பதாகவும் மக்கள் தெரி விக்கின்றனர்.

விஞ்ஞானம் மிக வளர்ச்சி யடைந்த நிலையில் யாழ்.மாவட் டத்தில் இப்படியொரு பகுதி இருப்பது வருத்தமளிப்பதாகவும் அவசர தேவை கருதி தொலை பேசி அழைப்பை ஏற்படுத்த முடியாத நிலை காணப்படுவதா கவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மண்டைதீவுப் பகுதியில் தொலைத்தொடர்பு கோபுரம் இன்மையே இதற்கு காரணம் மண்டைதீவிலிருந்து 12 கிலோ மீற்றர் தொலைவில் பண்ணைத தொலைத்தொடர்புக்கோபுரம் அமைந்துள்ள போதிலும் சீரான சமிக்ஜையைப் பெற முடியா துள்ளது.

தமது பகுதிக்கான தனியான தொரு தொலைத்தொடர்புக் கோபுரத்தினை அமைப்பதன் மூலம் இப் பிரச்சினையைச் சீர் செய்ய முடியும் எனவே உரிய தரப்பினர் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# வான்களை துப்புரவு செய்து கடற்றொழில் செய்ய உதவுங்கள்

## வளலாயில் மீள்குடியேறிய மீனவர்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு வளலாய் கடற்கரைப் பகுதிகளில் கற்கள் மண்டி காணப்படுவதனால் படகுகளில் செல்ல முடியாது கட்டுமரங்களிலேயே தாம் கடற்றொழிலுக்குச் செல்வதாகவும் இதனால் பல சிரமங்களை எதிர்நோக்குவதால் வான்களை துப்புரவு செய்து தந்து தாம் படகுகளில் தொழிலுக்கு செல்லும் நிலைமையை ஏற்படுத்தித் தருமாறு அப்பகுதி மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 25 வருடகாலமாக உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த வலி.கிழக்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட வளலாய் ஜே/284 கிராம சேவையாளர் பிரிவில் 232 ஏக்கர் காணியில் மக்கள் மீள் குடியேற கடந்த மாதம் 13ஆம் திகதி அனுமதிக்கப்பட்டது.

அதனை அடுத்து அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் மீள் குடியேறி வருகின்றார்கள். மீள் குடியேறியவர்கள் தாம் கடற்றொழிலுக்கு வளலாய் கடலில் இருந்து செல்ல முடியாத நிலை காணப்படுவதாகத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

நாம் தற்போது இப்பகுதியில் மீள் குடியேறி உள்ளோம். ஆனால் கடந்த 25 வருடகாலமாக இப்பகுதியில் இருந்து கடற்தொழிலுக்குச் செல்லாமையால நம் வான்கள் மிக மோசமாக கற்கள் மண்டி காணப்படுகின்றது.

இதனால் எமது படகுகளை கடலுக்குள் இறக்க முடியாத நிலை உள்ளது. நாம் தற்போது கட்டு மரங்களை பயன்படுத்தியே தொழிலில் ஈடுபடுகின்றோம்.

எனவே இந்த வான்களை துப்புரவு செய்து தந்தால் நாம் படகுகளில் தொழிலுக்குச் செல்ல முடியும் என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## இரண்டாம் தவணை ஆரம்பம்

இரண்டாம் தவணைக்காக அரச பாடசாலைகள் எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை கற்றல் செயற்பாட்டுக்காக திறக்கப்படும் எனத் தெரிவிக் கப்படுகின்றது. (66)

# 771 இலக்க சேவை நீடிக்கப்பட வேண்டும்

(யாழ்ப்பாணம்)

நீண்ட கால இடைவெளிக்கு பின்னர் ஆரம்பிக்கப்பட்டுள்ள 771 ஆம் இலக்க இலங்கைப் போககுவரத்து பஸ் சேவை தெல்லிப்பளை வரை நடத்தப்படுவேண்டும் என வலி.தென் மேற்கு மக்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ்.நகரில் இருந்து கே.கே. எஸ். வீதியுடனான தாவடி, சுதுமலை, மானிப்பாய், உடுவில், மருதனார்மடம் ஊடாக சுன்னாகம் மத்திய பஸ் நிலையம் வரையே இச்சேவை புதுவருட தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

குறித்த சேவை தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை வரை நீடிப்பதன் மூலம் தெல்லிப்பளை, யூனியன் கல்லூரி மாணவர்கள் தெல்லிப்பளை வைத்தியசாலை செல்வோர் துர்க்கை அம்மன் ஆலயம் செல்வோர் தற்போது மீள் குடியேற்ற மக்கள் ஆகியோருக்கு பேருதவியாக அமையும் எனத்தெரிவிக்கப்படுகிறது.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (66)

# போக்குவரத்துக்கு உதவாத நிலையில் கரவெட்டி வேலகாட்டு வீதி

கரவெட்டி பிரதேச சபைக்கு சொந்தமான கம்பர்மலை (பாரதி சனசமூக நிலையமூடாக) செல்லும் வேலகாட்டு சந்தி வரையான வீதி படுமோசமாக அழிவடைந்துள்ளது.

மேற்படி வீதியை மீள்புனரமைப்பு செய்து தருமாறு இது வரை 10 இற்கும் மேற்பட்ட கடிதங்கள், மகஜர்கள் வழங்கப் பட்டும் தலைவர், செயலாளர் பாராமுகமாக உள்ளதாக அப்பிரதேச மக்கள் கவலை தெரிவித் துள்ளனர்.

கடந்த 40 வருடங்களுக்கு மேலாக மேற்படி கம்பர்மலை -பாரதி சனசமூக நிலைய வீதி ஊடான வேலகாட்டு சந்தி வரையான வீதியே இவ்வாறு மீள்புனரமைப்பு இன்றி உள்ளன.

கரவெட்டி பிரதேச சபையானது ம்க்களின் முன்னுரிமை தெரிவுகளுக்கு இதுவரை மதிப் பளிக்கவில்லை.

பொது அமைப்பின் பிரதிநிதி கள் சார்பில் நேரில் சென்று கதைத போது 2015 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட நிதி, அல்லது புறநெகும அபிவிருத்தி நிதியில் மீள்புனரமைப்புச் செய்து தருவ்தாகத் தெரிவிக்கப்பட்டது.

எனினும் இதுவரை எமது கோரிக்கை நிறைவேற்றப்பட வில்லை. எனவே கம்பர்மலை- வேலகாட்டு சந்தி வரையான வீதி மீள்புனரமைப்பு என்பது ஜூன் மாதத்திற்கு முன்னர் இடம் பெறவேண்டும்.

இல்லாவிடில் பொது அமைப புக்களின் பிரதிநிதிகள், சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கள் மற்றும் மக்களை திரட்டி பிரதேசபை முன்பாக மக்கள் சக்தி போராட்டத்தை முனனெடுப்போம் எனத் தெரிவித் துள்ளனர். (92)



வருடாந்த புத்தாண்டு தினத்தில் காரைநகர் வாரிவளவு கற்பகவிநாயகர் சித்திரத்தேர் வீதியுலாவின் போது விநாயகப் பெருமான் தேரில் அமர்ந்து வீதியுலா வரும் காட்சி. (50)

# இ.போ.ச பேருந்திலிருந்து சாராயப் போத்தல்கள் மீட்பு

இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்றிலிருந்து நேற்று பிற்பகல் உரிமை கோரப்படாத நிலையில் 50 சாராயப் போத்தல்கள் மீட் கப்பட்டதாக யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மொனராகல-யாழ்ப்பாணம் ஊடாக சேவையில் ஈடுபட்டிருந்த பேருந்தினுள் உரிமை கோரப்படாத நிலையில் பொதி ஒன்று காணப்பட்டதாகவும் தொடர்ந்து பேருந்தின் நடத்துநர் பொலிஸாரிடம் முறையிட்டார்.

அங்குவிரைந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தியுள்ளனர்.

# DD TV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | ஞாயிற்றுக் கிழமை |
|---|---|
| Am 05.00-07.00 | ஒளிமயமான வாழ்வு |
| Am 07.00-08.00 | MORNING SONG |
| Am 08.00-09.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00-10.00 | புதுயுகம் |
| Am 10.00-10.30 | தமிழ் பேசு தமிழா (R) |
| Am 10.30-11.30 | அதிர்வுகள் (R) |
| Am 11.30-12.00 | காதல் கீதங்கள் |
| Am 12.00-12.30 | Hello சிரிக்க சிரிக்க DD |
| PM 12.30-01.00 | ஆரோகணம் |
| PM 01.00-04.00 | சிறப்பு திரைப்படம் |
| PM 04.00-05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 05.00-06.00 | அதிர்வுகள் (R) |
| PM 06.00-07.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00-07.30 | IT.Com |
| PM 07.30-08.00 | மக்கள் முகம் |
| PM 08.00-08.20 | பிரதான செய்தி |
| PM 08.20-08.30 | Song |
| PM 08.30-09.00 | இதய ஊஞ்சல் |
| PM 09.00-11.30 | ஆங்கிலத்திரைப்படம் தமிழாக்கம் |
| PM 11.30-12.00 | நீங்காத நினைவுகள் |

# இளைஞர் சம்மேளன நிர்வாகத் தெரிவு

தேசிய இளைஞர் சேவைகள மன்றத்தின் கிளிநொச்சி இளைஞர் கழக மாவட்ட சம்மேளன நிர்வாகத் தெரிவுக்கூட்டம் நேற்று காலை தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கிளிநொச்சி மாவட்ட் காரியாலய மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

மாவட்ட இளைஞர் கழக சம்மேளன செயலாளர் திருமதி துசியந்தி தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் இதுவரை காலமும் ஆற்றப்பட்ட சேவைகள் மற்றும் புதிய அமைப்பு எவ்வாறு செயற்படவேண்டும் என்பது தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டதைத் தொடர்ந்து நிர்வாகத் தெரிவுகள் இடம்பெற்றன.

இதில் தலைவராக த.சங்கர் செயலாளராக நா.குகேந்திரா





பொருளாளராக அய்னா சிறீ சுதர்சன் ஆகியோரும்,

அமைப்பாளராக யோ.தர்சன், உபதலைவ்வராக அ.கிசான், உப செயலாளராக தி.அகிலா ஆகியோரும்,

துறைசார் செயலாளர்கள், ஒழுக்கக்குழு உறுப்பினர்கள், ஆலோசனை சபை ஆகியவற்றுக்கான நிர்வாகத் தெரிவுகளைத் தொடர்ந்து 2015 ஆம் ஆண்டிற்கான வேலைத்திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வடமாகாணப் பணிப்பாளர் சரத் சந்திரபால, தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரிகள், இளைஞர்கள் யுவதிகளெனப் பலரும் கலந்துகொண்டனர்.



# ‘தேவையற்ற போராட்டங்களால் பயன் கிட்டப்போவதில்லை’

‘தேவையற்ற போராட்டங்களால் பயன்கிட்டப் போவதில்லை’ என்று டொக்ரர் சிவசங்கர் துணிந்து ஒரு உண்மையைச் சொல்லியிருக்கிறார்.

இப்படியொரு உண்மையைத் தமிழ்ச் சமூகத்தில் துணிந்து கூறியதற்காக டொக்ரர் சிவசங்கருக்கு ஒரு சபாஷ் சொல்லவேணும். ஆனால், சிவசங்கரின் கணிப்புத்தான் பிழைத்து விட்டது. அதைப்பற்றித்தான் இங்கே பேசுகிறேன்.

சிவசங்கர் சொல்கிறார், “யாழ்ப்பாணக் குடாநாட்டின் குடிநீர் மாசடைந்திருப்பதையிட்டு நடந்த – நடந்து கொண்டிருக்கிற தண்ணீர்ப்போராட்டம் தேவையற்றது. அவசரப்பட்டு இந்தப் போராட்டக்காரர்கள் இதை முன்னெடுத்திருக்கிறார்கள். இது தவறு. தண்ணீர்ப்பிரச்சினையைக் குறித்து ஆய்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன. அப்படி ஆய்வுகள் நடந்து கொண்டிருக்கும்போது அதற்கான கால நீடிப்போ கால அவகாசமோ தேவைப்படும். அந்த அவகாசத்தைப் புரிந்து கொள்ளாமல் அதற்கிடையில் அவசரம் காட்டுவது பொருத்தமானதல்ல... ஆகவே தான் இந்தப் போராட்டத்தை இப்பொழுது நடத்தியிருக்கத்தேவை யில்லை. இதேவேளை பாதிக்கப்பட்ட மக்களுக்குக் குடிநீர் விநியோகம் நடைபெறுகிறது. இப்படியெல்லாம் இருக்கும்போது எதற்காக மாகாணசபைக்கு நெருக்கடியைக் கொடுக்க வேண்டும்..?” என்று.

நல்லாய்த்தானிருக்கு டொக்ரரின் இந்த ஆலோசனைகள்.

யாழ்ப்பாணத்தின் குடிநீர்ப்பிரச்சினை நீண்டது. பல வகையிலானது. குடிநீர்ப்பிரச்சினை மற்றும் நிலப்பிரச்சினை போன்ற காரணங்களினால்தான் கடந்த நூற்றாண்டில் யாழ்ப்பாண மக்கள் (தீவுப்பகுதி உள்ளடங்கலாக) யாழ்ப்பாணத்துக்கு வெளியே குடியேற்றப்பட்டார்கள் – குடியேறினார்கள். யாழ்ப்பாணத்தவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வெளியே சென்று உழைக்கவும் வாழவும் முற்பட்டார்கள்.

இது ஒரு தூரநோக்குப் பார்வையில் அமைந்த நடவடிக்கை. இந்த நடவடிக்கையை மேற்கொண்டவை அவ்வக் காலங்களில் இருந்த அரசாங்கங்கள். ஆனால், தமிழ் அரசியல்வாதிகள் இத்தகைய தூரநோக்குப் பார்வையைக் கொண்டு செயற்படவில்லை. அவர்கள் யாழ்ப்பாணத்துக்குள்ளேயே பனங்கொட்டையைப் பொறுக்கினாற்போதும் என்று சிந்தித்துக் கொண்டிருந்தவர்கள்.

இந்தத் தமிழ் அரசியலின் வாரிசுகள்தான் இப்பொழுது யாழ்ப்பாணத்துக்குள் மாகாண சபையைக் கொண்டு வந்ததும் யாழ்ப்பாணத்திற்கு வெளியே சென்று குடி–யேறியோரையும் (குறிப்பாக வன்னிப்பகுதியில் இருப்போரையும்) யாழ்ப்பாணத்துக்குள் அழைப்பவர்கள். இவர்கள்தான் தண்ணீர்ப் பிரச்சினையைப் போட்டுப் பினைந்து கொண்டிருப்பவர்களும்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு, “யாழ்ப்பாணத்தின் குடிநீர் மாசடைந்து விட்டது. இந்த மாசடைதலால் ஆண்மைக்குறைவு ஏற்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்துப் பெடியளை பெண்கள் விரும்புகிறார்கள் இல்லை...” என்றெல்லாம் மாகாணசபையில் உறுப்பினர் கஜதீபன் தொடக்கம் அனைவரும் குய்யோ முறையோ என்று முறையிட்டார்கள். ஒரு முழுநாள் விவாதம் இந்தத் தண்ணீர்ப் பிரச்சினைக்காகவே நடந்தது.

இதைவிட யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீர்ப்பிரச்சினையைப் பற்றி மாகாணத்தின் விவசாய – நீர்ப்பாசன – நீர்விநியோக அமைச்சர் பொ. ஐங்கரநேசன் எச்சரிக்கை ஒலி, அபாய மணி போன்றவற்றை எல்லாம் எழுப்பியிருக்கிறார்.

இந்தத் தண்ணீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் முகமாகத்தான் பல திட்டங்களை மத்திய அரசாங்கம் மேற்கொண்டது. அதில் ஒன்று இரணைமடுக் குளத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு தண்ணீரைக் கொண்டு செல்லும் திட்டம்.

இரணைமடுத் திட்டத்தைக் குழப்பியதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான். அதற்கு மாற்றுத்திட்டம் ஒன்று – அதாவது கடல்நீரைச் சுத்திகரித்து வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தப் போகிறோம் என்றார்கள்.

ஆசிய அபிவிருத்தி வங்கியும் இதற்கான கடனு–தவியை மத்திய அரசின் ஊடாக வழங்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆனால் அதுவும் கிடப்பில் போடப்பட்டுள்ளதைப் போலத் தெரிகிறது.

ஆகவே யாழ்ப்பாணத்தின் தண்ணீர்ப்பிரச்சினை நீண்டகாலப் பிரச்சினையாக மட்டுமல்ல இதைப்பற்றிப் பேசுவதே இனப்பிரச்சினையைப் போல நீண்டு கொண்டு போகும் பிரச்சினையாக மாற்றப்பட்டுள்ளது.

இந்த நிலையில்தான் சுயாதீனமாக – தன்னெழுச்சியாக மக்கள் போராடத் தலைப்பட்டனர்.

இந்தப் போராட்டம் எந்த வகையிலும் அரசியல் உள்நோக்கமுடையதல்ல. வெளிப்படையானது. நியாயமானது. சம்மந்தப்பட்ட தரப்புகளின் மீது அழுத்தத்தை உண்டு பண்ணும் நோக்கிலானது.

ஆகவே இதைத் தேவையற்ற போராட்டம் என்று யாரும் சொல்ல முடியாது. மன்னிக்க வேணும் டொக்ரர் சிவசங்கர். இந்தப் போராட்டத்தின் தார்மீக நிலைப்பாட்டை நீங்கள் புரிந்து கொண்டு இதற்கு ஆதரவளிக்க வேணும்.

குறித்த பிரச்சினையைப் பற்றி ஆய்வறிக்கை சமர்ப்பிப்பதற்கான கால எல்லையோ, இனப் பிரச்சினையைப் போல தமிழரசுக் கட்சியினால் – தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் தீர்த்து வைக் கப்பட முடியாத ஒன்று.

மிக இலகுவாகவே தீர்த்து வைக்கப்பட வேண்டிய – செய்யக்கூடிய ஆசிரிய வளப்பகிர்வு, விவசாய சேவைகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மரநடுகை போன்ற பல திட்டங்களைச் செய்ய முடியாமல் திணறிக்கொண்டிருக்கிறது மாகாணசபை.

இந்த நிலையில் மாகாணசபையைப் பாதுகாப்பதாக எண்ணிக்கொண்டு அதன் செயற்றிறனில்லாத தன்மையை நாம் ஆதரிக்கக் கூடாது.

மாகாணசபை செயற்றிறனோடு செயற்பட்டால் அதை ஆதரிக்கலாம். அதைப் பாதுகாத்து வளப்படுத்தலாம்.

இதைத் தவிர்த்து நீங்கள் குறிப்பிட்ட ‘தேவையற்ற போராட்டங்களால் பயன்கிட்டப்போவதில்லை’ என்பது கூட்டமைப்பினர் நடத்திய – நடத்திவரும் ‘நிலத்தை மீட்கிறோம், காணாமற் போனோரைத் தேடுகிறோம் என்றமாதிரியான ஏமாற்றுப் போராட்டங்களையே குறிக்கும்.

ம. அய்யம்பிள்ளை

# வளலாய் அ.மி.த.க. பாடசாலை தற்காலிகமாக ஆரம்பிக்க ஏற்பாடு

(அச்சுவேலி)

அச்சுவேலி வளலாய் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை தற்காலிகமாக இயங்கவுள்ளதாக வலி காமம் வலயக் கல்விப் பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பாடசாலை நாட்டில் ஏற்பட்ட போர் வன்முறைகளைத் தொடர்ந்து இயங்காது கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது.

இதனை மீள ஆரம்பிக்க வேண்டும் என அப்பிரதேச மக்கள் விடுத்த வேண்டு கோளுக்கிணங்க இந்தப் பாடசாலை யினை தற்காலிகமாக ஆரம்பிப்பதற் கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட் டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நீண்ட காலங்களின் பின்னர் பொது மக்களின் அயராத முயற்சியாலும் கல்விசார் உயரதிகாரிகளின் கடின உழைப்பாலும் மீண்டும் தற்காலிகமாக இப்பாடசாலை நாளை மறுதினம் முதல் வளலாய் பொது நோக்கு மண்டபத்தில் இயங்கவுள்ளது.

இதற்கென ஆசிரியர் ஒருவரையும் சம்பந்தப்பட்ட தரப்பினர் நியமித்துள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இப்பாடசாலை மீள ஆரம்பிக்கப்படவிருப்பதென்ற செய்தி எங்களை பெரு மகிழ்ச்சியில் ஆழ்த்தி யிருக்கின்றது. இதற்கான முயற்சிகளை மேற்கொண்ட அனைவருக்கும் எங்கள் நன்றிகள், பாராட்டுக்கள். இப்பாடசாலை நிரந்தமாக தொடர்ந்தும் இயங்கவேண்டும் என்றே நாங்கள் விரும்பு கின்றோம். அதற்காக எங்களாலான உதவி கள் மற்றும் ஒத்துழைப்புக்களை வழங்க என்றும் தயாராக உள்ளோம் என இப் பாடசாலையின் பழைய மாணவர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(85)

# முத்துமாரி அம்மன் ஆலயத்தின் புனருத்தாண வேலைகள் ஆரம்பம்

(வேலணை)

வேலணை பெருங்குளம் அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயத்தினது புனருத்தாண கட்டட வேலைகள் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டு ஆலயத்தின் வீதிகள் மற்றும் சுவர்கள் எல்லாம் திருத்தப்பட்டும், உள்வீதி அகலப்படுத்தும் வேலைகள் நடைபெற்றும் வருவதுடன் ஆலயத்தின் உள்ளக வீதிகளின் மேற் பரப்புகள் முற்று முழுதாக சிமெந்தினால் கொங்கிறீட் போடப்பட்டு வருகின்றது. அத்துடன் ஆலயத்தின் தெற்கு வாசலில் சுமார் இரண்டு கோடி ரூபா செலவில் மூன்று தளம் கொண்ட கோபுரமொன்றும் அமைப்பதற்கான அத்திபாரக் கல் இடும் பணியானது கடந்த புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் தொழிலதிபர் எஸ்.பி. சாமியால் போடப்பட்டுள்ளது. அத்திவாரக் கல் நாட்டி வைக்கப்பட்டதைத் தொடர்ந்தும் கட்டட வேலைகள் வெகுவேகமாக நடைபெற்று வருகின்றன. (05)

# நூல் அறிமுக விழா சாவகச்சேரியில் இன்று

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் முன்னாள் உப அதிபர் சரசையூர் ம.கங்காதரத்தின் நூல் அறிமுகவிழா இன்று யாழ். நகரில் இடம்பெறவுள்ளது.

கணிதத் துறைப் பட்டதாரியாகிய இவர் கைரேகை நிபுணராகவும் விளங்கு கின்றார். சரசாலை சரஸ்வதி வித்தியால யம் மற்றும் மட்டுவில் கமலாசனி வித்தியாலயம் என்பவற்றின் பழைய மாணவரான இவர் தமிழின் மேல் கொண்ட தீராக் காதலினால் பிரயோக கணிதத்தையும் தூய தமிழிலேயே பல ருக்கு கற்பித்தார்.

ஏ, பி, சி ஒரு முக்கோணம் என்பதற்குப் பதிலாக அ. ஆ. இ ஒரு முக்கோணம் எனக் கணக்குக் கற்பித்தார். அவர் எழுதிய இளநிலைப் பிரயோக கணிதம் என்ற நூலில் இத் தூய தமிழ்ப் பிரயோகத்தை இன்றும் காணக்கூடியதாகவுள்ளது.

இந்நிகழ்வில் ஆர்வலர்களைக் கலந்து கொள்ளுமாறு நூல் அறிமுக விழாக்குழு அறிவித்துள்ளது. (90)

சிரிக்கத் தெரியாதவனும், சிந்திக்கத் தெரியாதவனும் வாழ்வில் சிறப்புப் பெறுவதே இல்லை. -புல்லர்.,

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## கழுதை மேய்க்க வருகிறார்கள்!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் தலைமையில் தீர்வை எடுப்பதற்காக தமிழர்கள் எல்லோரும் ஒற்றுமையைக் காண்பித்து நிற்கவேண்டும் என்று சொன்னார்கள். மக்களும் நாலைந்து தேர்தல்களில் வாக்களித்து ஒற்றுமையைக் காண்பித்தார்கள்.

பிறகு வடக்குக்கான தலைமையாக சட்டங்கள் தெரிந்த, ஒபாமாவுடன் நேரடியாகப் பேசக்கூடிய, சிங்கள உறவும் கொண்ட உயர்குடித் தமிழர் ஒருவரே வேண்டும் என்று அந்தக் கூட்டமைப்பின் தலைவரே தீர்மானித்து, முதலமைச்சராக சி.வி.விக்னேஸ்வரனைக் கொண்டுவந்தார்கள்.

அவர், தமிழின அழிப்பைச் செய்தவர்களுடன் கைகுலுக்குவதில்லை என்றொரு கடும்பிடித் தீர்மானத்திற்கு வந்து, “தீர்வென்ன தீர்வு, இந்த நாட்டில் எந்தத் தலைவருடனும் பேசப்போவதில்லை” என்று தமிழ்வீரத்தை நிலைநாட்டி மக்களைப் புல்லரிக்க வைத்துள்ளார்.

இவ்வாறாக தமிழ் மக்கள் பெருவாரியாக வாக்களித்துத் தெரிவு செய்த மேற்படி இரு தலைவர்களுக்கும் அப்பால், இப்போது முதலமைச்சர் சொல்கிறார்: “மன்னார் ஆயரின் தலைமையில் தீர்வைக் கண்டறியுங்கள்” என்று.

அப்போ, அந்தத் தீர்வுத் திட்டத்தை மன்னார் ஆயர்தான் இது நாள்வரை ஒளித்து வைத்திருக்கிறாரா? மக்களுக்குத் தலைமை அளிப்பதாக தேர்தலில் வாக்குகளைப் பெற்று முதலமைச்சராக வந்தவர் தனது பொறுப்பை யார் தலையில் கட்டிவிடுகிறார் பாருங்கள்!

அதுமட்டுமல்ல, மன்னார் ஆயரால்தான் தமிழ்மக்களுக்குத் தீர்வு வரும் என்பதற்கு மகிந்த ராஜபக்ஷவையும் விட விஞ்சிய சாத்திரக் கணிப்பொன்றையும் சொல்கிறார் முதலமைச்சர்.

“ஆயர் எமக்கு இறைவன் அளித்த பெரும்சொத்து. ஏனென்றால் அவர் பிறந்த எண்ணும் ஏழு. கூட்டல் தொகையும் ஏழு. இத்தகையவர்கள் எடுத்த காரியத்தை திடமாக ஆற்றி முடிக்கக் கூடியவர்கள். எனவே தமிழ் மக்களுக்கு நீதியான நியாயமான தீர்வு கிடைக்க ஆயரே உதவ வேண்டும்” என்றுள்ளார் முதலமைச்சர் விக்னேஸ்வரன்.

என்ன கொடுமை சரவணா இது? தமிழர்களின் இத்தனை வருடகாலப் போராட்டமும் கடைசியில் எண்சாத்திரத்தில் வந்து நிற்கவேண்டுமா?

அடக்கோதாரி விழுவாரே... நீங்கள் தலைவர்களாகவும் முதலமைச்சராகவும் வருவதற்கு முன்பே உதைச் சொல்ல வேண்டியதுதானே.... எனது பிறந்த எண்ணும் ஏழில்லை, கூட்டெண்ணும் ஏழில்லை, என்னை மாதிரியான ஆட்களாலெல்லாம் தமிழர்களுக்குத் தீர்வு வராது, ஏழாம் நம்பர்காரரைத் தேடிப்பிடியுங்கள் என்று சொல்லியிருக்க வேண்டியதுதானே!

நேற்றைய தமிழரசுக் கட்சிப் பத்திரிகையின் கொட்டை எழுத்துச் செய்தியைப் பார்த்தவர்களுக்கு மண்டை விறைக்காதிருந்திருக்குமா? இதுதான் அந்தத் தலைப்புச் செய்தி: “தீர்வு என்னவென மன்னார் ஆயர் தலைமையில் கண்டறியுங்கள் – வலியுறுத்துகின்றார் வடக்கு முதலமைச்சர்”.

தமிழ் மக்களின் தலைவிதி கடைசியாக இப்படி வந்து முடிந்திருக்கிறது! தேரர்களிடமும், ஆயர்களிடமும், சைவக்குருக்கள்மாரிடமும் போயெல்லாம் அரசியல் தலைமை வழங்கும்படி கெஞ்ச வேண்டியிருக்கிறது.

அந்தளவுக்கு இந்த நாட்டின் அரசியல் தலைவர்கள் என்போர் நொம்பலப்பட்டுப் போயிருக்கிறார்கள். இனங்களை ஒற்றுமைப்படுத்தி இந்த நாட்டைக் காப்பாற்ற இவர்களால் முடியவில்லை. குரங்கிடம் அப்பம் பிரித்துத் தரக்கேட்டுச் சென்ற பூனைகள் போல சர்வதேசத்திடம் போய் நிற்கிறார்கள்.

இந்தத் தலைவர்களின் அரசியல் மற்றும் நாட்டுப்பற்றின் வங்குரோத்தைத் தெரிந்துகொண்டு, அவர்களும் இங்கு வந்து கழுதை மேய்க்கிறார்கள். மக்களை அந்த நிலைக்குத்தான் கொண்டுபோகிறார்கள் நாட்டின் எல்லாத் தலைவர்களும்! - *ஆசிரியர்*

# தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள்

# ஜனநாயகமும் இல்லை வெளிப்படைத்தன்மையும் இல்லை

## உள்ளிருந்து கிளம்புகிறது கண்டனம்

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள் ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்காத நிலையே காணப்படுகின்றது. கூட்டமைப்பின் தலைவிதியை ஒரு சிலரே நிர்ணயிக்கின்றனர். வெளிப்படைத் தன்மை இல்லை. கிராம அபிவிருத்தி சங்கம், ஆலய பரிபாலன சபைகளுக்கே யாப்புகள் இருக்கும் நிலையில் வட்க்கு, கிழக்கில் வாழும் தமிழினத்தின் இருப்பைத் தீர்மானிக்கும் அரசியல் சக்தியான கூட்டமைப்புக்கென எந்த யாப்பும் இல்லாதிருப்பது வாக்களித்த மக்களின் உணர்வுகளை அவமதிப்பதாகும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கடுமையாக சாடியிருக்கிறார் அக்கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சிவசக்தி ஆனந்தன். இன்று வெள்ளிக்கிழமை துணுக்காய் பரதேச செயலர் பிரிவின் தென்னியன்குளம், புத்துவெட்டுவான் கிராமங்களின் அபிவிருத்தி சங்கங்களுக்கு தனது பன்முகப்படுத்தப்பட்ட் நிதியில் இருந்து தளபாடங்களை வழங்கிய அவர் அப்பகுதி மக்களின் குறைகளையும் கேட்டறிந்தார்.

இதன்போது அவர் தெரிவித்த விடயங்கள் வருமாறு: பல ஆயிரம் போராளிகள், பொதுமக்களின் தியாகங்களின் பலனாக இன விடுதலை, கௌரவமான அரசியல் தீர்வு என்பவற்றை பெறுவதற்காக உருவாக்கப்பட்டதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகும். கடந்த 13 வருட காலமாக தமிழ் மக்களின் ஆணையைப் பெற்றுள்ள கூட்டமைப்புக்கு இன்றுவரை எவ்வித யாப்போ, புரிந்துணர்வு ஒப்பந்தமோ கிடையாது. சாதாரணமாக ஒரு கிராமத்தில் இருக்கக்கூடிய மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கிராம அபிவிருத்திச் சங்கம், ஆலய பரிபாலன சபைக்கே யாப்புகள் இருக்கின்ற நிலையில், வடக்கு கிழக்கில் இருக்கக்கூடிய தமிழ் இனத்தின் இருப்பை தீர்மானிக்கின்ற அரசியல் சக்தியான தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு எவ்வித யாப்பும் இல்லை என்பது வாக்களித்த மக்களின் உணர்வுகளை அவமதிப்பதாகும்.

எவ்வித யாப்பும், புரிந்துணர்வு ஒப்பந்தமும் இல்லாத நிலையிலேயே கூட்டமைப்பு இயங்கி வருகின்றது. இன்று கூட்டமைப்பின் தலைவிதியை ஒருசிலரே நிர்ணயிக்கின்றனர். வெளிப்படத்தன்மை இல்லை. ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்கப்படாத நிலைமை காணப்படுகின்றது.

மிகநீண்ட காலமாக கூட்டமைப்புக்குள் இருக்கும் ஏனைய அங்கத்துவக் கட்சிகளும் இந்த விடையங்களைக் கூடிப்பேசி, பல தடைவைகள் விவாதித்து தீர்வு காணமுடியாத நிலையிலேயே மக்களாகிய உங்களிடம் இந்த பிரச்சினையை முன்வைக்கின்றோம். கடந்தகாலத் தேர்தல்களில் நீங்கள் மிகவும் அவதானிப்புடன் வாக்களித்தது போன்று, இனிவரும் காலங்களிலும் செயற்படவேண்டும் இன்று கூட்டமைப்பை பதிவு செய்ய முடியாது என்று கூறுபவர்கள், தேர்தல் வந்ததும் கூட்டமைப்பு என்று கூறிக்கொண்டு வாக்கு கேட்டு வந்து உங்களின் வாக்குகளை பெற்ற பின்னர், மறுபடியும் கூட்டமைப்பை கைவிட்டுவிட்டு தமது தனிக்கட்சியை மட்டும் வளர்க்கும் வேலைகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கு இனியும் நீங்கள் அனுமதிக்கக்கூடாது. ஏனெனில் கூட்டமைப்பின் உருவாக்கத்தின் பின்னால் ஒவ்வொரு குடும்பங்களினதும் அளப்பரிய தியாகங்கள் இருக்கின்றன. எனவே உங்கள் உறவுகளின் இரத்தம், கண்ணீருடன் எவரும் விளையாடுவதை அனுமதிக்கக்கூடாது. இதுவரை காலமும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு வாக்களிக்குமாறு உங்களிடம் கேட்ட நாங்கள், இப்போது கூட்டமைப்பின் ஒற்றுமையை வலியுறுத்துமாறு உங்களிடம் கேட்க வேண்டிய நிலையில், கூட்டமைப்புக்குள் இருப்பவர்கள் ஒருசிலரதும், அவர்களது கட்சியினதும் அரசியல் செயற்பாடுகள் இருப்பது வேதனையளிக்கிறது.

யாப்பு, புரிந்துணர்வு ஒப்பந்த அடிப்படையில் கூட்டமைப்பு பதிவு செய்யப்பட்டு பலப்படுத்தப்பட்டால் மாத்திரமே அரசுக்கும், சர்வதேசத்துக்கும் அழுத்தம் கொடுத்து தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுககும் தீர்வைக்காண முடியும். நாம் அனைவரும் ஒன்றுபட்டு மாபெரும் சக்தியாக உருவெடுக்கும் போதே, அன்றாட பிரச்சினைகளிலிருந்து அரசியல் தீர்வு வரைக்கும் எதனையும் சாதிக்க முடியும் என்றார்.

# பராமரிப்பு எதுவுமின்றி கிடக்கும் இரணைமடு பொதுச்சந்தை

கிளிநொச்சி, இரணைமடு பொதுச்சந்தை தொடர்பில் கரைச்சி பிரதேச சபை பொறுப்புடன் செயற்படுவதில்லை என வியாபாரிகளும் மக்களும் குற்றம் சுமத்தியுள்ளனர்.

கடந்த 11 ஆம் திகதி குறித்த பகுதியில் வீசிய பலத்த காற்றினால் 15 கடைகள் வரை சேதமடைந்ததுடன், இவற்றில் 3 கரைசசி பிரதேச சபைக்கு சொந்தமானது எனவும், ஏனையவை வியாபாரிகளால் அமைக்கப்பட்டது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சேதமடைந்த கூரைகளை மீள அமைத்துக் கொடுப்பது தொடர்பில் இன்றுவரை எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை எனவும், வீசப்பட்ட தகரம் உள்ளிட்ட பொருட்களை பாதுகாப்பான முறையில் அகற்றப்படாததனால் பாரிய இடர்களைத்தாம் சந்திப்பதாகவும மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். நீண்ட நாட்களாக இவ்வாறு காணப்படுகின்ற நிலையில் தமது வியாபாரத்திற்கு பாதிப்பு ஏறபட்டுள்ளதுடன், போக்குவரத்து, பாதுகாப்பு என்பவற்றில் பாரிய நெருக்கடிகள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக கரைச்சி பிரதேச சபை விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வர்த்தக நிலையங்களில் பிரத்தியேக நிறுத்தல் கருவி

## அடுத்த மாதம் முதல் புதிய நடைமுறை

பொருட்களின் நிறைகளை நுகர்வோர் சரியாக தெரிந்து கொள்ளும் வகையில் நாடளாவிய ரீதியில் இயங்கும் ஒவ்வொரு விற்பனை நிலையம் மற்றும் பேக்கரிகளிலும் பிரத்தியேகமாக தராசு ஒன்று கட்டாயம் வைக்கப்படல் வேண்டும் என நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை அறிவித்துள்ளது.

இந்த நடைமுறைச்சட்டம் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் கட்டாயமாக்கப்படும் என அதிகார சபையின் தலைவர் ரூமி மர்சூக் தெரிவித்தார்.

நுகர்வோரினால் கொள்வனவு செய்யப்படும் பொருட்கள் அவர்களினால் வழங்கப்படும் பணத்திற்கு ஏற்றவாறு இல்லை என்றும் அவைகளின் நிறை மிகக் குறைவாகக் காணப்படுவதாகவும் நுகர்வோரினால் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்தே இந்த நடைமுறை அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

முதற்கட்டமாக வர்த்தகர்களும் நுகர்வோரும் இது தொடர்பில் தெளிவுபடுத்தப்பவுள்ளதோடு இரண்டாம் கட்டமாக பிரத்தியேகமாக தராசு ஒன்று வைப்பதைக் கட்டாயப்படுத்தும் வகையில் வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்படவுள்ளது.

# தமிழ் மக்களின் விமோசனத்துக்கு புதிய அணியொன்று தேவை

**சங்கர சிவன்**

**தமிழரசுக் கட்சித் தலைவர்கள் என்ன பெயரில் வந்தாலும் இன்று வரை சிங்களவர்களுக்கு எதிரான உணர்வலையைத் தமிழ் மக்களிடம் வளர்ப்பதிலேயே கூடுதலான கவனம் செலுத்துகின்றார்கள். தேர்தல் காலங்களில் அந்த உணர்வலையைத் தட்டியெழுப்புவதன் மூலம் உண்மையான பிரச்சினைகளிலிருந்து மக்களைத் திசை திருப்பித் தங்கள் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்கின்றார்கள். அரசியல் பதவிகளை அடைவதே அவர்களின் நோக்கம்.**



சமஷ்டிக் கோரிக்கை தான் இனப்பிரச்சினைக்கான தீர்வாக முதலில் முன்வைக்கப்பட்டது. இக்கோரிக்கையை முன்வைத்த தமிழரசுக் கட்சி ஏறக்குறைய முப்பது வருட காலம் இந்தக் கோரிக்கையை வைத்து அரசியல் செய்த போதிலும் தமிழ் மக்களின் எந்தப் பிரச்சினையையும் தீர்த்து வைக்கவில்லை. தீர்வை நோக்கிய நகர்வுகள்கூட ஆரம்பிக்கவில்லை. காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகம், கறுப்புக்கொடிப் போராட்டம், கச்சேரிக்கு முன்னால் தொடர் சத்தியாக்கிரகம் என்று இவர்கள் தங்கள் கெட்டித்தனங்களைப் பட்டியல் போடலாம். இவை சலசலப்புகளேயொழியச் சாதனைகளல்ல. இனப்பிரச்சினைக்கு ஓரளவாவது தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடிந்திருக்குமேயானால் அது தான் சாதனை.

பதின்மூன்றாவது திருத்தம் தங்கள் போராட்டத்தின் விளைவு என்று ஒருவேளை இவர்கள் சொல்லக் கூடும். மேற்கத்திய நாடுகளின் பக்கம் சரிந்துகொண்டிருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் அரசாங்கத்தை வழிக்குக் கொண்டு வருவதற்காக இந்தியா திணித்ததுதான் பதின்மூன்றாவது திருத்தம். இந்தத் திருத்தத்தை இன்று வரை தமிழரசுக் கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படியிருக்க இதைத் தங்கள் சாதனை என்று எப்படிச் சொல்லலாம்?

முப்பது வருடங்களாக சமஷ்டிக் கோரிக்கையைச் சரியான முறையில் முன்னெடுக்கத் தவறியதன் விளைவுதான் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தோற்றமும் வட்டுக்கோட்டை மகாநாட்டில் தனி நாட்டுத் தீர்மானமும். சமஷ்டிக் கோரிக்கை தோற்றுவிட்டது என்பதே இதன் அர்த்தம். ஏன் தோற்றது?

தமிழரசுக் கட்சித் தலைவர்கள் சமஷ்டிக் கோரிக்கையைத் தங்கள் அரசியல் ஆதாயத்துக்காகப் பயன்படுத்தினார்களேயொழிய அதைச் சரியான முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கு உருப்படியான திட்டம் எதுவும் அவர்களிடம் இருக்கவில்லை. தமிழரசுக் கட்சி அரசியல் அரங்குக்கு வந்த வேளையில் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் தமிழ்க் காங்கிரஸ் கட்சியே தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்கியது. தமிழ்க் காங்கிரஸ் கட்சியிடம் இனப்பிரச்சினையின் தீர்வுக்கு எந்தக் கொள்கையும் இருக்கவில்லை. காங்கிரஸ் கட்சியை வீழ்த்துவதற்குத் தமிழரசுக் கட்சி சமஷ்டிக் கோரிக்கையைப் பயன்படுத்தியது. அதில் வெற்றியும் கண்டது. அதன் பின் தங்கள் அரசியல் இருப்புக்காக மக்களை உசுப்பேற்றுவதற்குச் சமஷ்டிக் கோரிக்கையைப் பயன்படுத்தினார்களேயொழிய ஆக்கபூர்வமான முறையில் அதை முன்னெடுக்கவில்லை. இந்த உசுப்பேற்றலில் சிங்கள மக்களும் பிழையான சமிக்ஞைகளையும் வெளிப்படுத்தினார்கள். கச்சேரியடிச் சத்தியாக்கிரகத்தின்போது தமிழரசுக் கட்சி தபாற் சேவையை ஆரம்பித்ததன் மூலமும் தமிழ் நாட்டுக்காணிக் கச்சேரி நடத்திக் காணிகளை விநியோகித்ததன் மூலமும் தனிநாடு தான் சமஷ்டிக் கோரிக்கையின் உண்மையான நோக்கம் என்ற அபிப்பிராயத்தைச் சிங்கள மக்களிடம் தோற்றுவித்தார்கள்.

இனப்பிரச்சினையின் தீர்வுக்கான எந்தக் கோரிக்கையும் சிங்கள மக்கள் மத்தியிலிருந்து கிடைக்கும் ஆதரவுடனேயே நடைமுறைச் சாத்தியமாக முடியும். அந்த ஆதரவைப் பெறுவதற்குத் தமிழரசுக் கட்சி முயற்சிக்கவில்லை. சமஷ்டிக் கோரிக்கைக்கு ஆதரவளிக்கக்கூடிய இடதுசாரி மற்றும் முற்போக்கு சக்திகளைப் பகைக்கும் வகையில் முதலாளித்துவத் தலைவர்களுடனேயே தமிழரசுக் கட்சித் தலைவர்கள் உறவாடினார்கள். தமிழரசுக் கட்சியின் தலைமை கொண்டிருந்த இடதுசாரி விரோத உணர்வின் வெளிப்பாடாக இது அமைந்தது.

இக்காரணங்களால் சமஷ்டிக் கோரிக்கை தோற்றுப்போன நிலையில் தமிழர் விடுதலைக் கூட்டணி அரங்குக்கு வந்தது. இதிலும் தமிழரசுக் கட்சியின் மேலாதிக்கமே நிலவியது. தமிழரசுக் கட்சி எடுக்கும் முடிவுகள் தான் கூட்டணியின் முடிவுகளாகின. கூட்டணி நிறைவேற்றிய தனிநாட்டுத் தீர்மானத்துக்குப் பின்னாலும் தமிழரசுக் கட்சியே இருந்தது.

வட்டுக்கோட்டைத் தொகுதியில் அமிர்தலிங்கத்தின் கிராமமான பண்ணாகத்தில் இடம்பெற்ற மகாநாட்டிலேயே தனிநாட்டுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் மோசமான துய்ர நிகழ்வு என்று இதைக் கூறலாம். இத்தீர்மானம் எந்த விதத்திலும் நடைமுறைச் சாத்தியமற்றது என்று இதை நிறைவேற்றிய தலைவர்களுக்குத் தெரியும். அதனால்தான் பொதுத் தேர்தல் முடிந்தவுடன் மாவட்ட சபைகளை ஏற்றார்கள். ஆனால், தேர்தல் பிரசாரத்தின்போது தனிநாடு கதவைத் தட்டுகின்றது என்ற பாணியிலேயே பேசினார்கள். தனிநாட்டுச் சிந்தனையைத் தமிழரசுக் கட்சியே மக்களிடம் வளர்த்துவிட்டதென்பதால் அக்கோரிக்கை காரணமாகத் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கும் அழிவுகளுக்கும் தமிழரசுக் கட்சியே பொறுப்பேற்க வேண்டும்.

இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரங்குக்கு வந்திருக்கின்றது. என்ன பெயரில் வந்தாலும் தமிழரசுக் கட்சியின் அரசியலே நடக்கின்றது. கூட்டமைப்பின் சார்பில் தமிழரசுக் கட்சியே முடிவுகளை எடுக்கின்றது. தேசியப் பிரச்சினையிலும் தமிழ் மக்களின் பிரச்சினையிலும் தமிழரசுக் கட்சி எடுக்கும் முடிவுகளை மற்றைய கட்சிகள் ஏற்றுக் கொள்கின்றன. அவற்றுக்கு வேறு வழி இல்லை.

தமிழரசுக் கட்சியின் மற்றைய அவதாரங்களிலும் பார்க்கக் கூட்டமைப்பு என்ற அவதாரம் மோசமான அரசியலை நடாத்துகின்றது. தமிழரசுக் கட்சியும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் சமஷ்டி என்றும் தனிநாடு என்றும் கோரிக்கைகளை முன்வைத்துத் தமிழ் மக்களை ஏமாற்றின. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தக் கோரிக்கையையும் முன்வைக்காமலே தமிழ் மக்களை ஏமாற்றுகின்றது. ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வு என்று சம்பந்தனும் சுமந்திரனும் வாய்ப்பாடு போலக் கூறுகின்றபோதிலும் மற்றைய தலைவர்கள் மறந்தும் இதைச் சொல்வதில்லை. ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வு என்பது வழுவழுத்த கதை. உண்மையிலேயே அவ்வாறான ஒரு தீர்வைக் கூட்டமைப்பு விரும்புகின்றதென்றால் அதற்கான தீர்வுத் திட்டத்தைத் தயாரித்து முன்வைக்க வேண்டும். அதைச் செய்ய இவர்கள் விரும்பவில்லை. ஏன் விரும்பவில்லை என்ற கேள்வியை விடுவோம். அதற்கு இவர்கள் ஒருபோதும் பதில் சொல்லப்போவதில்லை. அது இவர்களின் சுயநல அரசியல்.

**தனிநாட்டுத் தீர்மானம் எந்த விதத்திலும் நடைமுறைச் சாத்தியமற்றது என்று அதை நிறைவேற்றிய தலைவர்களுக்குத் தெரியும். அதனால்தான் பொதுத் தேர்தல் முடிந்தவுடன் மாவட்ட சபைகளை ஏற்றார்கள். ஆனால், தேர்தல் பிரசாரத்தின்போது தனிநாடு கதவைத் தட்டுகின்றது என்ற பாணியிலேயே பேசினார்கள். தனிநாட்டுச் சிந்தனையைத் தமிழரசுக் கட்சியே மக்களிடம் வளர்த்துவிட்டதென்பதால் அக்கோரிக்கை காரணமாகத் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கும் அழிவுகளுக்கும் தமிழரசுக் கட்சியே பொறுப்பேற்க வேண்டும்.**

இனப்பிரச்சினையின் தீர்வை அடையும் செயற்பாட்டில் இரண்டு அத்தியாவசியமான விடயங்கள் இருக்கின்றன. ஒன்று தீர்வுத் திட்டம். மற்றது சிங்கள மக்களின் ஆதரவு. தீர்வுத் திட்டமொன்றை தயாரித்து அதன் அடிப்படையில் தீர்வை அடைவதற்கான செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும். கூட்டமைப்பு அதைச் செய்யாமல் அரசாங்கம் தீர்வை முன்வைக்க வேண்டும் என்றும் சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்றும் கதை சொல்லிக் காலங்கடத்துகின்றது. தீர்வைப் பெற்றுத் தருவதற்காகத் தமிழ் மக்கள் வாக்களித்துத் தெரிவு செய்தது தமிழ்த் தலைவர்களையேயொழிய அரசாங்கத்தையோ சர்வதேச சமூகத்தையோ அல்ல.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு சர்வசன வாக்கெடுப்பில் அங்கீகாரம் பெறவேண்டும். சர்வசன வாக்கெடுப்பில் சிங்கள மக்களின் ஆதரவு முக்கியமானது. சிங்கள மக்களின் ஆதரவை வென்றெடுப்பதற்கான முயற்சியும் அரசியல் தீர்வுக்கான செயற்பாட்டில் முக்கியத்துவம் பெறுகின்றது. தமிழ்த் தலைமை இவ்விடயத்தில் சிறிதளவேனும் அக்கறை செலுத்தவில்லை.

இந்த இரண்டு விடயங்களையும் கூட்டமைப்புத் தலைமை தவிர்த்து வருவது இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைப்பதை இவர்கள் விரும்பவில்லை என்பதையே காட்டுகின்றது. ஆரம்பத்திலிருந்தே தமிழ்த் தலைவர்கள் இனப்பிரச்சினை பற்றிப் பேசிப்பேசித் தங்கள் அரசியல் பதவிகளைக் காப்பாற்றினார்களேயொழியத் தீர்வுக்காக முயற்சிக்கவில்லை. தமிழரசுக் கட்சி முதல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரை இத்தலைவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுத் தருவதாக வேஷம் போடுகின்றார்களேயொழிய உருப்படியான எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

அறுபது வருடங்களுக்கு மேல் மக்களை ஏமாற்றுகின்றார்கள் என்ற குற்றச்சாட்டை முன்வைக்கும்போது எல்லாத் தேர்தல்களிலும் மக்கள் எங்களைத் தானே ஆதரிக்கின்றார்கள் என்று தமிழ்த் தலைவர்கள் கூறுவது வழக்கமாகிவிட்டது. மக்களுக்கு இவர்கள் எதுவுமே செய்யாத நிலையில் மக்கள் இவர்களை ஏன் ஆதரிக்கின்றார்கள் என்ற கேள்வியில் நியாயம் இருக்கின்றது.

தமிழரசுக் கட்சித் தலைவர்களின் தேர்தல் பிரசாரம் அன்று முதல் இன்று வரை சிங்களவருக்கு எதிரான உணர்வலையை வளர்க்கும் இனவாதப் பிரசாரமாகவே இருந்து வருகின்றது. மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் தேர்தல் மேடைகளில் பாடிய பாடல்கள் மாத்திரமன்றித் தலைவர்களின் உரைகளும் சிங்கள விரோத உணர்வையே வளர்த்தன. தமிழரசுக் கட்சித் தலைவர்கள் என்ன பெயரில் வந்தாலும் இன்று வரை சிங்களவர்களுக்கு எதிரான உணர்வலையைத் தமிழ் மக்களிடம் வளர்ப்பதிலேயே கூடுதலான கவனம் செலுத்துகின்றார்கள். தேர்தல் காலங்களில் அந்த உணர்வலையைத் தட்டி யெழுப்புவதன் மூலம் உண்மையான பிரச்சினைகளிலிருந்து மக்களைத் திசை திருப்பித் தங்கள் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்கின்றார்கள். அரசியல் பதவிகளை அடைவதே அவர்களின் நோக்கம்.

இந்தத் தலைமை எந்தக் காலத்திலும் மாறப்போவதில்லை. இனப்பிரச்சினையின் தீர்வுக்காக ஒருபோதும் முயற்சிக்கப்போதில்லை. இனப்பிரச்சினை எப்போதும் பிரச்சினையாக இருப்பதுதான் தங்கள் பதவிகளுக்கு உத்தரவாதம் என்று இவர்கள் நினைக்கின்றார்கள். இந்தத் தலைவர்கள் பின்னிய இனவாத வலையை மக்கள் அறுத்துக் கொண்டு வெளியேறித் தீர்வுக்குச் சாத்தியமான வழியில் செயற்படுவதன் மூலமே விமோசனத்தை அடைய முடியும்.

நடைமுறைச் சாத்தியமான தீர்வுத் திட்டமொன்றைத் தயாரித்துத் தென்னிலங்கையிலுள்ள நட்பு சக்திகள் மூலம் அதை எல்லா இன மக்களிடம் எடுத்துச் சென்று அவர்களின் ஆதரவைவென்றெடுப்பதே நின்று நிலைக்கும் அரசியல் தீர்வை அடைவதற்குச் சாத்தியமான ஒரே வழி. தமிழரசுக் கட்சியின் வழி வந்த தலைவர்கள் இந்த வழியில் ஒருபோதும் செயற்படப் போவதில்லை. எனவே, இந்த வழியில் தீர்வை நோக்கிச் செல்வதற்குத் தயாரான புதிய அணியொன்று உருவாக வேண்டும். இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வில் அக்கறையும் கருத்தீடுபாடும் உள்ள தனிநபர்கள், அமைப்புகள் மற்றும் கட்சிகளின் கூட்டாகப் புதிய அணியொன்று உருவாகுவது தமிழ் மக்களின் விமோசனத்துக்கான இன்றைய தேவை.

# தெற்கில் மையம் கொள்ளும் அரசியல் சூறாவளி

## மைத்திரிக்கு தலைவலி வெளிநாட்டு பயணம் இரத்து



(கொழும்பு)

அரசியல் அமைப்புத் திருத்தம் உட்பட நாடாளுமன்ற கலைப்பு விவகாரம் மற்றும் நூறு நாள் செயற்றிட்டம் போன்ற பல்வேறு விவகாரங்களால் தெற்கு அரசியலில் இப்போது சூடு கிளம்பியுள்ளது.

இதனால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தவாரம் இந்தோனேசியாவுக்கு மேற்கொள்ளவிருந்த பயணத்தைக் கைவிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

60 ஆவது ஆசிய-ஆபிரிக்க உச்சி மாநாடு இந்தோனேசியத் தலைநகர் ஜகார்த்தாவிலும், பன்டுங் நகரிலும் இன்று தொடக்கம், 24 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பங்கேற்பார் என்றும், அவர், இந்த மாநாட்டில் பங்கேற்பதை உறுதிப்படுத்தியுள்ளதாகவும், இந்தோனேசிய அரசாங்கம் ஏற்கனவே அறிவித்திருந்தது.

ஆனால், நேற்றுமுன்தினம் இந்தோனேசிய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள தகவலின் படி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த மாநாட்டில் பங்கேற்கமாட்டார் என்று தெரியவந்துள்ளது.

இன்று ஆரம்பமாகவுள்ள இந்த மாநாட்டில், ஆசிய-ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த 27 நாடுகளின் தலைவர்கள், 9 நாடுகளின் துணை அதிபர்கள், 3 நாடுகளின் பிரதிப் பிரதமர்கள் பங்கேற்கவுள்ளனர்.

ஏனைய நாடுகளின் சார்பில், அமைச்சர்கள் கலந்துகொள்ளவுள்ளதாக இந்தோனேசிய வெளிவிவகார அமைச்சு கூறியுளளது.

அமைச்சர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடுகளின் பட்டியலிலேயே இலங்கை இடம்பெற்றுள்ளது. எனினும், இலங்கையின் சார்பில் எந்த அமைச்சர் பங்கெடுக்கவுள்ளார் என்று அறிவிக்கப்படவில்லை.

இந்த மாநாட்டில் பங்கேற்குமாறு ஆசிய-ஆபிரிக்காவைச் சேர்ந்த 109 நாடுகளின் தலைவர்களுக்கும், வெளியிலுள்ள 17 நாடுகளைச் சேர்ந்த பார்வையாளர்களுக்கும் இந்தோனேசியா அழைபபு அனுப்பியிருந்தது.

இலங்கையில் தற்போதைய அரசாங்கத்தின் 100 நாள் செயற்றிட்டம் முடிவுக் கட்டத்தை நெருங்கியுள்ள நிலையில், 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் நாளை நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படவுள்ளது.

அத்துடன், தற்போதைய அரசாங்கம் நாடாளுமன்றத்தைக் கலைப்பதாக வாக்குறுதியளித்த ஏப்ரல் 23 ஆம் நாளும் நெருங்கியுள்ளது.

இந்த நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் கடுமையான இழுபறி நிலையும் தோன்றியிருக்கிறது.

உள்நாட்டில் ஜனாதிபதி எதிர்கொள்ளும் பலமுனை அழுத்தங்களினால் தான், ஆசிய-ஆபிரிக்க நாடுகளின் தலைவர்களின் உச்சிமாநாட்டில் அவர் பங்கேற்பதை தவிர்த்துக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தேசிய ஐக்கியம் உருவாக்க புதிய செயலகம்

தேசிய ஐக்கியத்திற்கான செயலகமொன்றை அமைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்கான யோசனையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்வைத்திருந்தார்.

சகல பிரஜைகளுக்கும் சமூக, பொருளாதார, கலாசார மற்றும் அரசியல் பிரிவினைகள் இன்றி ஐக்கியத்துடன் வாழும் வகையிலும் மற்றும் எந்தவொரு பிரிவினரும் பிரதான பிரிவு என்ற வரையறையின்றி செயற்படும் மக்களை உருவாக்கும் நோக்கிலும் இந்தச் செயலகம் அமைக்கப்படவுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் யோசனைக்கமையவே இந்தச் செயலகம் அமைக்கப்படவுள்ளதுடன் இதற்கு அமைச்சரவை அனுமதியளித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## ரணில் இந்தியாவில்

நேற்று காலை 07.40 மணியளவில் இந்தியாவின் கொச்சின் நகர் நோக்கி ரணில் புறப்பட்டுச் சென்றதாக, தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதமருடன் மேலும் சில பிரதிநிதிகளும் இந்த விஜயத்தில் கலந்து கொண்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதேவேளை குருவாயூர் ஸ்ரீ கிருஷ்ணர் கோவிலுக்கு ரணில் விக்கிரமசிங்க சாமி தரிசனம் செய்ய வருகை தரவுள்ளதாக கோவில் நிர்வாகத்தை மேற்கோள்காட்டி இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## நாடாளுமன்றம் கலைப்பு கிளம்புகிறது கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

விரைவில் நாடாளுமன்றைக் கலைப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தேசித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும், நாடாளுமன்றம் அவசரமாக கலைக்கப்படுவதனை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் விரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

19 ஆவது திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதன் பின்னர் நாடாளுமன்றம் கலைக்கப்படும் என அண்மையில் பொலனறுவையில் வைத்து ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையின் அதீத அதிகாரங்கள் நீக்கப்படுவதில் எவ்வித முரண்பாடுகளும் கிடையாது என்ற போதிலும், அத்துடன் தேர்தல் முறைமையிலும் மாற்றம் அவசியம் என சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும், சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று நடைபெறவுள்ளது.

## பொதுத் தேர்தலில் வாய்ப்பை இழக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள்

### கடிவாளம் இப்போது சந்திரிக்காவிடம்



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டிய சுமார் 40 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இம்முறை வேட்புமனு வழங்கப்படமாட்டாது என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் 36 உறுப்பினர்களுக்கு இம்முறை தேர்தலில் கட்சியின் சார்பில் போட்டியிட சநதர்ப்பம் அளிக்கப்படக் கூடாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆலோசகர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க யோசனை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் அறிவித்துள்ளார்.

வேட்பு மனு மறுக்கப்பட உள்ளதாக பட்டியலிடப்பட்டுள்ள அனைவரும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு மிகவும் நெருக்கமானவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கு மேலதிகமாக ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வேட்பு மனு வழங்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

## இராணுவத் தளபதியுடன் சீனத் தூதுவர் சந்திப்பு



இலங்கைக்கான -சீன மக்கள் குடியரசின் தூதுவர் யி ஜியான்லியாங், நேற்று முன்தினம் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் கிரிசாந்த டி சில்வாவைச் சந்தித்துப் பேச்சு நடாத்தியுள்ளார்.

இராணுவத் தலைமையகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இதன் போது, பல்வேறு இருதரப்பு ஈடுபாடுள்ள விவகாரங்கள் குறித்தும், மற்றும் சீன இராணுவத்துக்கும் இலங்கை இராணுவத்துக்கும் இடையில், தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் பயிற்சித் திட்ட-ஒத்துழைப்புகள் குறித்தும் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது. இந்தச் சந்திப்பில், இராணுவத் தளபதியுடன், இராணுவச் செயலாளர் மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்கவும், சீனத் தூதுவருடன், சீனத் தூதரக பாதுகாப்பு ஆலோசகர் மூத்த கேணல் லி செங்லினும் கலந்து கொண்டனர்.

## விமலின் கட்சிக்கு கதவடைப்பு

முன்னாள் வீடமைப்பு அமைசசரும் ஜே.என்.பி கட்சியின் தலைவருமான விமல் வீரவன்சவிற்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைபபின் கதவு மூடப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் கீழ் அமைச்சுப் பதவிகளை விமல் வீரவன்ச வகித்துள்ளார். மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் வமல் வீரவன்ச வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சராக கடமையாற்றியிருந்தார். எனினும் கூட்டமைப்பில் உத்தியோகபூர்வமாக விமல் வீரவண்சவின் ஜே.என்பி. அங்கம் வகிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, விமல் வீரவன்சவின் ஜே.என்பி கட்சியை சுதந்திரக் கூடடமைப்பின் செயற்பாடுகளில இணைத்துக் கொள்வதில்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின ஆலோசகர் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் யோசனைக்கு அமைய இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.


## 100 நாள் திட்டம் மக்களுக்கு பெரும் விமோசனம்



புதிய அரசின் நூறு நாள் வேலைத்திட்டத்தின் மூலம் மக்களுக்கு பெருமளவு பொருளாதார நிவாரணமும் - சுதந்திரமும் கிடைத்துள்ளது என்று கொள்கை திட்டமிடல் பொருளாதார விவகார அமைச்சர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

மக்களின் வாழ்க்கைச் செலவு சுமையைக் குறைப்பதே அரசின் பிரதான நோக்கமாகும். அதன்படி இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் பொருள் விலை குறைப்பு, சம்பள அதிகரிப்பு ஆகியன மூலம் வருமான அதிகரிப்பிற்கு அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஊழல் ஒழிப்பு ஆகிய நடவடிக்கைகளும் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளன.

மாபெரும் அபிவிருத்தித் திட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட பாரிய இலஞ்ச ஊழல், மோசடிகளைக் குறுகிய காலத்தில் முறியடிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. மக்களின் நிதியை மோசடி செய்தவர்களிடமிருந்து அவற்றை மீட்க தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. நிதிப் புலனாய்வுப் பிரிவும், பொலிஸாரும் இணைந்து இந்த மோசடி நபர்களுக்கு எதிராக விசாரணை நடாத்துகின்றனர்.



தாவடி ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகர் ஆலய தேர் உற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றபோது சுவாமி எழுந்தருளுவதையும், தேர் வீதி வலம் வருவதையும் காணலாம். (137)

# தூர நோக்கற்ற சிந்தனைகளே பாரிய அழிவுகளை ஏற்படுத்தியுள்ளன

## வடமாகாணசபை உறுப்பினர் தவநாதன் தெரிவிப்பு



தழிழரசுக்கட்சியின் தூரநோக்கற்ற சிந்தனைகளே தமிழ்மக்களுக்கு பாரிய அழிவுகளை ஏற்படுத்தியுள்ளன. ஆனாலும அவர்கள் தமது சிந்தனைகளை மாற்றிக் கொள்ள முயற்சிக்கவில்லை. இன்றும் அவர்களின் ஒவ்வொரு செயற்பாடுகளும் ஏதோ ஒரு மூலையில் தமிழ்மக்களுக்கு பாதிப்புக்களையே ஏற்படுத்திக்கொண்டிருககின்றன. என வடக்குமாகாணசபை உறுப்பினர் வை.தவநாதன் தெரிவித்துள்ளார்.

ஸ்கந்தபுரம் விநாயகர் குடியிருப்பில் பைந்தமிழ் முன்பள்ளிக்கட்டட திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது, அக்கராயன் பிரதேசத்தை ஒரு தனிப் பிரதேச செயலர்பிரிவாக உரு வாக்குவதற்காக எமது நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் அரும்பாடுபட்டார். 2011 ஆம் ஆண்டு அதற்காக பாரிய முயற்சிகள அவரால் முன்னெடுக்கப்பட்டன அதற்கமைவாக அத்திட்டம் நிறைவேறும் தருணத்தை எட்டியது அத்தருணத தில் இங்கு இயங்கும் மாற்று அரசியல் கட்சியினரின் மக்கள் நலன்களுக்கு அப்பாற பட்ட அரசியல் சார்ந்த சிந்தனையால் அந்த வாய்ப்பை மக்கள் இழந்துவிட்டனர்.

ஆனால் இங்கு ஒரு பிரதேச செயலகம் உருவாகியிருக்குமாயின் இப்பகுதியின் அபிவிருத்தியில் மேலும் பல முன்னேற றங்களும் மாற்றங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கும். பிரதேச ரீதியாக நிதிஒதுக்கீடுகளை இப்பிரதேசமும் பெற்றிருக்கும் அத்தோடு மேலுமொரு மாகாண சபை உறுப்பினரைக்கூட இம் மாவட்டம் பெற்றிருக்கும் அந்த வெற்றி வாய்ப்பைக்கூட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரே பெற்றிருப் பாரகள். அதுமட்டுமன்றி அதனை அடிப் படையாகக் கொணட பல நிதிவளங்களையும் ஏனைய வாய்ப்புக்களையும் அக்கராயன் பிரதேசம் பெற்றிருக்கும்.

இவை அனைத்திற்கும் அப்பால் பிரதேச செயலகத்தின் சேவையைப் பெறுவதற்காக பல கிலோமீற்றர்தூரம் பயணிக்கும் மக்களின் சிரமங்களுக்கு தீர்வு கிட்டியருக்கும். ஆனால் அக்கராயனுக்கான தனியான பிரதேச செயல்கம் உருவாகுவதற்கு தடையாக செயற்பட்டதனூடாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் அக்கராயன்பிரதேச மக்களுக்குக் கிடைக்கவிருந்த நன்மைகளுக்கு சாவுமணியடித்து விட்டனர்.

தமிழ் மக்களின் அழிக்கமுடியாத சொத்தாகத் திகழும் கல்வியை தொடர்ந்தும் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டுவருகின்றோம் கடந்த ஐந்து வருடங்களாக மாவட்டத்தின் கல்வி வளரச்சிக்காக நாம் பாடுபட்டிருக்கின்றோம. அதில் ஒரு முக்கிய அங்கமாக கடந்த மூன்று வருடங்களாக கிளிநொச்சி மாவட்டத்திலே தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குத்தோற்றும் அனைத்து மாணவர்களுக்கும் யாழ்.மாவட்டத்தில் பிரபல ஆசிரியர் அன்பழகனால் தயாரிககப்படும் மாதிரி வினாத்தாள்களை எமது நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தனது த்னிப்பட்ட செலவில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அனுசரணையுடன் மாவட்ட கல்வி அபிவிருத்திக் குழுவினூடாக வழங்கி வருகின்றார்.

அத்தோடு அவ் ஆசிரியரினூடாக செயலமர்வுகளையும் நடாத்தி வருகின்றார். அதன் விளைவாக கடந்த வருடம் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் யாழ்.மாவட்டத்திற்கு இணையா முன்னேற்றம் கண்டிருந்தமை யாவரும் அறிந்த உண்மை.கரைச்சி பிரதேசசபை உறுப்பினர் சபாநாயகம் மற்றும் கிராம சேவையாளர்கள் மற்றும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கிராமமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் பொதுமக்கள் முன்பள்ளிச்சிறார்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

# மணிவிழா மலர் அறிமுக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கலாநிதி. நா.தர்மராஜா அகளங்கனுடைனான இலக்கிய சந்திப்பும் அவ்ரின் மணிவிழா மலர் அறிமுகமும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 04.00 மணிக்கு திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (90)

# வேலணை பிரதேச செயலகத்தின் சித்திரைப் புத்தாண்டு விழா

(வேலணை)

இந்து கலாசாரத் திணைக்களம் வேலணைப் பிரதேச செயலகத்துடன் இணைந்து கடந்த புதன்கிழமை வேலணை வங்களாவடி முருகன் ஆலயத்தில் சித்திரைப் புதுவருடத்தை சிறப்பாக கொண்டாடும் முகமாக பொங்கல் விழாவொன்றினை நடாத்தியது.

வேலணைப் பிரதேச செயலகததில் இயங்கி வருகின்ற இந்து கலாசாரத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் ஏற்பாட்டில் இந்தப் பொங்கல் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

வேலணைப் பிரதேச செயலர் திரும்தி மஞ்சுளாதேவி சதீஷன் உட்பட பிரதேச செயலகத்தில் கடமையாற்றி வருகின்ற உத்தியோகத்தர்கள் சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள், பொதுமக்கள் எனப் பலதரப்பட்ட மககள் கலந்து கொணடிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# மஹோற்சவம்

(அச்சுவேலி)

கரவெட்டி கிழக்கு தேனீர் புளியடி ஞானவைரவர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. அன்று இரவு மஹோற்சவத்தையொட்டி இரவு இன்னிசை நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

எனவே பக்த அடியார்கள் ஆலயத்திற்கு வருகை தந்து வைரவப் பெருமானின் அருளைப் பெறுமாறு ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (85)

# முஸ்லிம் பிரதிநிதிகளுடன் ஆளுநர் கலந்துரையாடல்



1990 ஆம் ஆண்டு இரண்டு மணிநேர அவகாசத்தில் யாழ். முஸ்லிம்களை வெளியேற்றியமை அநியாயமான செயலாகும். உங்களின் வேதனைகளையும் கவலைகளையும் நான் நன்கறிந்துள்ளேன். LLRC யில் இரண்டு வருடமாக சேவையாற்றியபடியினால் யாழ். முஸ்லிம்களின் வெளியேற்றம், இழப்புகள் யாவையும் நன்கு அறியும் வாய்ப்பு ஏற்பட்டது. அதற்கான பரிந்துரைகளும் எம்மால் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன. என வடமாகாண ஆளுநர் ஆர்.டி.பள்ளியகார தெரிவிததார்.

நேற்றுமுன்தினம் யாழ். கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் தலைவர் ஏ.எச்.ஜமால் மொஹிடீன் தலைமையில் ஆளுநரை ஆளுநர் வாசஸ்தலத்தில் சந்தித்தபோது கூறினார்.

தொடர்ந்து உரையாற்றும் போது ஆளுநர் தற்போது மீள்குடியேறி வாழும் மக்களுக்கான வீடமைப்பு பிரச்சினை காணிப்பிரச்சினை, சுயதொழில் வாய்ப்பு, நஷ்டஈடு, ஒஸ்மானியாக் கல்லூரியின் அதிபர் நியமனம், மஸ்ஜித் அபூபக்கர் பள்ளிவாசல் காணி உறுதி பிரச்சினை சம்பந்தமான விடயங்களை பற்றி ஆராயப்பட்டு இதற்கான தீர்வுகளை உரிய அமைச்சுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி நிவர்த்தி செய்வதாக உறுதியளித்தார்.


இச்சந்திப்பில் யாழ். பள்ளிவாசல்களின் தலைவர்கள், சமூக சேவைகள் நிறுவன பிரதிநிதிகள், யாழ். உலமா சபைத் தலைவர் மௌலவி ஏ.அனிஸ், முன்னாள் பிரதி மேயர் எம்.ஜி.பஷீர் மற்றும் யாழ். கிளிநொச்சி முஸ்லிம் சம்மேள னத்தின் பிரதிநிதிகள் அடங்கிய 15 பேர் கொண்ட குழுவினர் ஆளுநர் ஆர்.டி. பள்ளியகாரவைச் சந்தித்தனர். (105)

# உதவி வழங்கும் நிகழ்வு



பேசாலையில் உள்ள 03 மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களைச் சேர்ந்த கணவனை இழந்தவர்கள், மற்றும் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வரும் குடும்ப அங்கத்தவர்கள் சுமார் 150 பேருக்கு வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் உடுபுடவைகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 7 மணியளவில் பேசாலை கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் இடம்பெற்றது. (160)

# ஹோல்டர் சதம்; முதல் டெஸ்டை சமன் செய்தது தீவுகள்



(அன்டிகுவா)

ஹோல்டரின் அபாரமான துடுப்பாட்டத்தின் மூலம் இங்கிலாந்து அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியை மேற்கிந்தியத்தீவுகள் அணி சமன் செய்தது.

மேற்கிந்தியத்தீவுகளுக்கு சென்றுள்ள இங்கிலாந்து அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்ட் போட்டி அன்டிகுவாவில் நேற்று முன்தினம் நிறைவடைந்தது.


முதல் இனிங்ஸிற்காக ஆடிய இங்கிலாந்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து 399 ஓட்டங்களைப் பெற்றது. இதில் இயன் பெல் 143, ரூத் 83 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரெய்லர் மூன்று, ரோச் நான்கு, ஹோல்டர் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய மே.தீவுகள் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 295 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிளைக்வூட் 112 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் அண்டர்சன் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

104 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய இங்கிலாந்து அணி ஏழு விக்கெட்டுக்களை இழந்து 333 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டத்தை நிறுத்தியது. இதில் வலன்ஸ் 122, ருத், பட்லர் ஆகியோர் தலா 59 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் ரெய்லர், பென் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 438 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி ஆரம்பத்தில் விக்கெட்டுக்களை வேகமாக இழந்ததுடன் தோல்வி உறுதி என்ற நிலையில் தள்ளாடியது. இந்நிலையில் கப்டன் ராம்டீன், ஹோல்டர் இணை தளராமல் போராடி அணியின் மானம் காத்தது. குறிப்பாக ஹோல்டர் சதமடித்து அசத்தியதுடன் போட்டியில் திருப்புமுனையையும் ஏற்படுத்தினார். இறுதியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி இரண்டாவது இனிங்ஸிற்காக ஏழு விக்கெட்டுக்களை இழந்து 350 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் போட்டி நிறைவுக்கு வந்தது. இதில் ஹோல்டர் 103, பிளாக்வுட் 31, சாமுவேல்ஸ் 23, டரன் பிராவோ 32, ராம்டீன் 57 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அண்டர்சன் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். போட்டியின் ஆட்டநாயகனாக ஹோல்டர் தெரிவு செய்யப்பட்டார்.

## டெஸ்டில் அதிக விக்கெட் அண்டர்சன் சாதனை



(அண்டிகுவா)

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இரு இனிங்ஸிலும் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் அண்டர்சன் அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய இங்கிலாந்து வீரர் என்ற சிறப்பைப் பெற்றுக் கொண்டார்.

வேகப்பந்து வீச்சாளரான அண்டர்சன் நேற்று முன்தினம் ராம்டீனின் விக்கெட்டை வீழ்த்தி இங்கிலாந்து அணியின் முன்னாள் கப்டனும், வேகப்பந்து வீச்சாளருமான இயன் போத்தமின் சாதனையை முறியடித்தார். டெஸ்ட் அரங்கில் 100 போட்டிகளில் பங்கேற்று 187 இனிங்ஸில் விளையாடியுள்ள அண்டர்சன் 384 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். மாறாக இயன் போத்தம் 102 போட்டிகளில் பங்கேற்று 161 இனிங்ஸில் மட்டுமே விளையாடி 383 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

ராம்டீனின் விக்கெட்டை அவர் வீழ்த்தி சாதனை படைத்ததும், இப்போட்டியை காண வந்திருந்த அண்டர்சனின் குடும்பத்தினர் கைதட்டி ஆரவாரம் செய்து வாழ்த்து தெரிவித்தனர்.



## சங்காவுக்கு விருது

லண்டனில் இடம்பெற்ற ஆசிய விருது வழங்கல் விழாவில் இலங்கை அணியின் குமார் சங்கக்காரவிற்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. 5ஆவது ஆசிய விருது வழங்கல் விழா நேற்று முன்தினம் லண்டனிலுள்ள Grosvenor House விடுதியில் இடம்பெற்றது.

இவ்விழாவில், இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னணி வீரர் குமார் சங்கக்கார, விளையாட்டுத்துறைக்கு சிறந்த பங்களிப்பாற்றியவருக்கான விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். இவ்விருதினை 2011ஆம் ஆண்டில் முத்தையா முரளிதரன் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.


## பாகிஸ்தானைப் பந்தாடிய பங்களாதேஷ்

(டாக்கா)

பாகிஸ்தான் அணிக்கு எதிரான முதலாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் பங்களாதேஷ் அணி அபார வெற்றி பெற்றது.

பாகிஸ்தான், பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதல் போட்டி நேற்று முன்தினம் பங்களாதேஷின் டாக்காவில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய பங்களாதேஷ் அணி தமிம் இக்பால், முஷ்பிகுர் ரஹிம் ஆகியோரின் அபாரமான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் பங்களாதேஷ் அணி 50 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 329 ஓட்டங்களைக் குவித்தது. ஒரு நாள் போட்டியில் பங்களாதேஷ் அணி பெற்றுக் கொண்ட அதிகபட்ச ஸ்கோர் இதுவாகும். இதில் தமிம் இக்பால் 135 பந்துகளை எதிர்கொண்டு மூன்று சிக்ஸர்கள், 15 பவுண்டரிகள் அடங்கலாக 132 ஓட்டங்களைப் பெற்றார். ஒரு நாள் அரங்கில் இக்பால் பெற்றுக் கொண்ட ஐந்தாவது சதமாக இது அமைந்தது. மற்றும் முஷ்பிகுர் ரஹிம் 77 பந்துகளை எதிர்கொண்டு 13 பவுண்டரிகள், இரண்டு சிக்ஸர்கள் அடங்கலாக 106 ஓட்டங்களைப் பெற்றார். ஒரு நாள் அரங்கில் ரஹிம் பெற்றுக் கொண்ட மூன்றாவது சதமாக இது அமைந்தது.



பதிலுக்கு 330 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி 45.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 250 ஓட்டங்களைப் பெற்று படுதோல்வியடைந்தது. இதில் அசார் அலி 72, அறிமுக வீரர் மொகமட் ரிஸ்வான் 67 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் தஸ்கின் அகமட், அராபத் சன்னி ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

## இன்றைய ஆட்டம்

PEPSI IPL

ராஜஸ்தான் எதிர் சென்னை

இடம் : அஹமதாபாத்


நேரம் : மாலை 4.00 மணி

பெங்களூர் எதிர் மும்மை

இடம் : பெங்களூர்

நேரம் : இரவு 8.00 மணி

## அதிக தொகை; அழுத்தமில்லையாம்



ஐ.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரில் மிகவும் அதிக விலை கொடுத்து டில்லி டேர்டெவில்ஸ் அணிக்காக வாங்கப்பட்ட யுவராஜ் சிங், தனக்கு எந்த அழுத்தமும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

8ஆவது ஐபில் தொடரில் டில்லி டேர் டெவில்ஸ் அணி இந்திய அணியின் முன்னணி வீரர் யுவராஜ் சிங்கை 16 கோடி கொடுத்து வாங்கியது. ஐ.பி.எல் வரலாற்றில் அதிக தொகைக்கு ஏலம் போனதால், யுவராஜ் சிங் மீது கிரிக்கெட் இரசிகர்கள் பார்வை மொத்தமும் விழுந்தது.

இதனால் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும் என்ற அழுத்தம் அவருக்கு இருப்பதாக கூறப்பட்டது. ஆனால், யுவராஜ்சிங் தனக்கு அது போன்ற எந்த அழுத்தமும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

ஹைதராபாத் அணிக்கு எதிரான போட்டிக்கு முந்தைய பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்டு யுவராஜ் பேட்டி அளித்தார். அப்போது அவரிடம் 16 கோடி கொடுக்கப்பட்டுள்ளதால் உங்கள் மீது அழுத்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்று செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு பதிலளித்த யுவராஜ், "உண்மையில் அப்படி எதுவும் இல்லை. ஏலம்நடைபெற்ற அன்று நான் தூங்கிக் கொண்டிருந்தேன். இந்த தொகையை கொடுக்குமாறு நான் யாரையும் கேட்கவில்லை. என்ன தொகை எனக்கு கொடுக்கப்பட்டிருந்தாலும் நான் ஐ.பி.எல். போட்டியில் விளையாடி இருப்பேன்" என்று தெரிவித்தார்.

## வர்ணனையில் கலக்கும் மங்கையர்கள்



அஞ்சும் சோப்ரா



மெலோனி ஜோன்ஸ்



இஷா குஹா

களைகட்டியுள்ள ஐ.பி.எல். சீசன் 8 போட்டித்தொடரில் நான்கு பெண் வர்ணனையாளர்கள் கலக்கி வருகின்றனர்.

நடப்பு ஐ.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரில் வர்ணனை பணியில் 26 பேர் அடங்கிய குழு இறங்கியுள்ளது. இந்தக் குழுவில் வழக்கமான பிரபல வர்ணனையாளர்களுடன், சற்று நீண்ட நாளைக்குப் பின் ரவிசாஸ்திரி இடம் பெற்றுள்ளார்.

அதைவிட விசேஷம், இந்தக் குழுவில் 4 பெண்களும் இடம்பெற்றிருப்பது தான். அஞ்சும் சோப்ரா, இஷா குஹா, லிசா ஸ்தலேகர், மெலோனி ஜோன்ஸ் ஆகிய நான்கு பெண் வர்ணனையாளர்களுமே கிரிக்கெட் வீராங்கனைகள்.

அஞ்சும் சோப்ரா, இந்திய பெண்கள் கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன்.

இந்திய வம்சாவளிப் பெண்ணான இஷா குஹா, இங்கிலாந்துக்காக ஆடிய முன்னாள் வேகப்பந்து வீச்சாளர்.

மற்றொரு இந்திய வம்சாவளிப் பெண்ணான லிசா ஸ்தலேகர், அவுஸ்ரேலிய பெண்கள் அணிக்காக ஆடியவர். மெலோனி ஜோன்ஸும் முன்னாள் அவுஸ்ரேலிய வீராங்கனைதான்.

பொதுவாக, ஐ.பி.எல். என்றாலே, அதிரடி தொடக்கவிழா, அணி வீரர்களின் அசத்தும் ஆடைகள், ஆட்டம் போடும் சியர் லீடர்கள், பார்ட்டிகள் என்று தனிக் கவர்ச்சிதான்.

அந்தவரிசையில் இந்த பெண் வர்ணனையாளர்களும் கூடுதல் சுவாரசியம் சேர்க்கின்றனர். முதன்முதலாக கிரிக்கெட் நிகழ்ச்சித் தொகுப்பு பணிக்கு மந்திரா பெடி வந்தபோது அவரும், அவரது ஆடைகளும் ஏற்படுத்திய பரபரப்பு ஞாபகம் வருகிறதா?

# அராலி அண்ணாவின் மாபெரும் கால்பந்து அரையிறுதி ஆட்டங்கள் நாளை மறுதினம்

(அராலி)

அராலி அண்ணா விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் நாளை மறுதினம் அராலி மாவத்தை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அராலி அண்ணா விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் கால்பந்தாட்டத் தொடரின் இரு லீக் ஆட்டங்கள் நேற்று முன்தினம் நடைபெற்றன.

முதலாவது போட்டியில் தெல்லிப்பளை நாகம்மாள் அணியும் மானிப்பாய் சில்வஸ்ரார் அணியும் மோதின. இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் முட்டி மோதிக் கொண்டமையால் இப்போட்டி பரபரப்புக்குக் குறைவில்லாதவாறு அமைந்திருந்ததுடன் இரசிகர்களுக்கும் பெரு விருந்தாகவும் இருந்தது. வெற்றியைப் பதிவு செய்ய இரு அணிகளும் இறுதி வரை போராடியும் ஒவ்வொரு கோலையே பெற்றுக்கொள்ள முடிந்தது. இந்நிலையில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் நாகம்மாள் அணி 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

மற்றுமொரு போட்டியில் இளவாலை யங்ஹென்றீஸ் அணியும் இளவாலை சென். லூட்ஸ் அணியும் மோதின. இப்போட்டியும் இரசிகர்களுக்கு விருந்து படைக்கும் வகையில் அமைந்தது. இரு அணிகளும் கோலைப் பெற்றுக் கொள்ளும் முனைப்புடன் செயற்பட்ட போதிலும் பிற்கள வீரர்களின் பெரும் அரண்களைத் தாண்டி கோல் கம்பத்திற்குள் உள்நுழைய முடியவில்லை. இதன் காரணமாக இரு அணிகளாலும் இறுதி வரை கோல் எதனையும் பெற்றுக் கொள்ள முடியாமற்போனது. நிறைவில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் யங்ஹென்றீஸ் அணி 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இப்போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் நாளை மறுதினம் மாலை நடைபெறவுள்ளது. முதலாவது அரையிறுதிப் போட்டியில் சில்வஸ்ரார் அணியும் யங்ஹென்றீஸ் அணியும் மோதவுள்ள அதேவேளை, இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் இளவாலை சென். லூட்ஸ் அணியும் தெல்லிப்பளை நாகம்மாள் அணியும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (93)

## விளையாட்டுச் செய்திகள்

# கரவெட்டியில் இன்று மென்பந்து கிரிக்கெட்

(கரவெட்டி)

கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியில் மாபெரும் மென்பந்து கிரிக்கெட் தொடரை இன்று நடாத்தவுள்ளது.

அணிக்கு எட்டு பேர் கொண்ட இம் மென்பந்து கிரிக்கெட் தொடர் இன்று காலை 8.00 மணிக்கு கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டித் தொடரில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த முன்னணி அணிகள் பல பங்குகொள்கின்றது எனவும். இப்போட்டித் தொடரில் கிண்ணத்தை வெல்லும் அணிக்குப் பெறுமதி வாய்ந்த பரிசில்களும், ஆட்டநாயகன், தொடர் நாயகன் விருது உள்ளிட்ட பல விருதுகளும் வழங்கப்படவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.(93)

# மயூரன் அபாரப்பந்துவீச்சு வென்றது சென்றலைட்ஸ்

(சுன்னாகம்)

மயூரனின் அபாரமான பந்து வீச்சின் மூலம் சென்றலைட்ஸ் அணி பெரு வெற்றிபெற்றது.

இலங்கை கிரிக்கெட் சங்கத்தின் பிரிவு மூன்றின் மாவட்ட அணிகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டியை நடாத்தி வருகின்றது. யாழ். மாவட்ட அணிகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதில் சென்றலைட்ஸ் ஜொலிஸ்ரார் அணிகளுக்கிடையிலான ஆட்டம் கடந்த வாரம் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சென்றலைட்ஸ் அணி செல்டனின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. நிறைவில் சென்றலைட்ஸ் அணி 37.4 ஓவர்கள் முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 221 ஓட்டங்களைப் பெற்றது. இதில் செல்டன் 61, மயூரன் 27, வினோத்குமார் 25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சிவலக்ஷன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 222 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஜொலிஸ்ரார் அணி மயூரனின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் தீபன், மதுஷன் ஆகியோர் சிறிது தாக்குப் பிடித்து ஆடியபோதிலும் அணியின் தோல்வியைத் தவிர்க்க முடியவில்லை. இறுதியில் ஜொலிஸ்ரார் அணி 30.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 137 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தீபன் 44, மதுஷன் 37, கஜானந் 32 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மயூரன் ஆறு, கோகுலன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

# திக்கம் இளைஞர், பொம்மர்ஸ் பெருவெற்றி

(கம்பர்மலை)

கம்பர்மலை யங்கமன்ஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் கால்பந்துத் தொடரின் நேற்று முன்தினம் நடைபெற்ற இரு போட்டிகளில் திக்கம் இளைஞர் மற்றும் பொம்மர்ஸ் அணிகள் பெரு வெற்றிபெற்றன.

வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கம்பர்மலை யங்கமன்ஸ் விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் அணிக்கு ஏழு பேர் கொண்ட கால்பந்தாட்டத் தொடர் யங்கமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் இருபோட்டிகள் நடைபெற்றன. முதல் போட்டியில் திக்கம் இளைஞர் அணியும் நவாலி சென். பீற்றர்ஸ் அணியும் மோதின. வலுவான இரு அணிகளும் மோதியதால் இப்போட்டி விறுவிறுப்பு மிக்கதாக இருக்கும் என இரசிகர்களால் எதிர்பார்க்கப்பட்டது. இதனைப் பொய்யாக்கும் வகையில் திக்கம் இளைஞர் அணி ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்தியதுடன் கோல்களையும் இடைவிடாது போட்டவண்ணமிருந்தது. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையிலும் கோல் எண்ணிக்கையை குறைக்கும் முனைப்புடனும் செயற்பட்ட நவாலி சென். பீற்றரிஸின் முயற்சிகள் அனைத்தும் திக்கம் இளைஞர் அணியின் அபார ஆட்டத்திற்கு முன் எடுபடவில்லை. நிறைவில் திக்கம் இளைஞர் அணி 6-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

மற்றுமொரு போட்டியில் கரவைச் சுடர் அணியும் வதிரி பொம்மர்ஸ் அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே விஸ்வரூபம் எடுத்த பொம்மர்ஸ் அணி கோல் மழை பொழிந்து உள்ளூர் இரசிகர்களை மகிழ்வித்தது. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் செயற்பட்ட கரவைச்சுடர் அணியால் ஒரு கோலை மட்டுமே பெற்றுக்கொள்ள முடிந்தது. நிறைவில் பொம்மர்ஸ் அணி 6-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதிபெற்றது. (93)

# நல்லூர் பிரதேச விளையாட்டு விழா

(நல்லூர்)

நல்லூர் பிரதேச செயலகத்தின் வருடாந்த விளையாட்டு விழா எதிர்வரும் 27ஆம் திகதி. யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. நல்லூர் பிரதேச செயலர் . பி. செந்தில் நந்தனன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் பத்மநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

இப்போட்டி நிகழ்வில் பிரதேசத்திற்குட்பட்ட அனைத்து பதிவு செய்யப் பட்ட கழகங்களைச் சேர்ந்த வீர.வீராங்கனைகளை கலந்து கொள்ளுமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

# வலய எறிபந்து; நெல்லியடி மத்தி இரு பிரிவில் சம்பியன்

(நெல்லியடி)

வடமராட்சி வலய மட்ட எறிபந்துப்போட்டியில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி இரு பிரிவுகளிலும் சம்பியன் பட்டம் வென்று அசத்தியுள்ளது.

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதில் 19 வயதுப் பிரிவு ஆண், பெண் அணிகளுக்கிடையிலான எறிபந்துப் போட்டி நேற்று முன்தினம் நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை நெல்லியடி மத்திய கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை கலட்டி றோமன் கத்தோலிக்க வித்தியாலய அணியும், மூன்றாமிடத்தை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியும் பிடித்துக் கொண்டன.

பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை நெல்லியடி மத்திய கல்லூரி அணியும் இரண்டாமிடத்தை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும், மூன்றாமிடத்தை வடமராட்சி மகளிர் கல்லூரி அணியும் பிடித்துக் கொண்டன. ஏனைய போட்டிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும், வலய மட்ட மெய்வல்லுநர் போட்டிகள் அடுத்த மாத முதல் வாரத்தில் நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)





சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் கற்சிலைமடு பாடசாலையில் தமிழர் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்பட்டன. இதில் கயிறு இழுத்தல், கோலம் போடுதல், தேங்காய் துருவுதல் போன்ற பல பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்பட்டது. இதில் வெற்றியீட்டியோருக்குப் பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்பட்டன. வடமாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் கலந்து கொண்டார். (40)

# ஊடகங்களுக்கு சம்பந்தன் விடுத்த எச்சரிக்கை!

இலங்கையின் தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும், வடக்கு மாகாண சபை முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கும் இடையில் "பனிப்போர்" ஒன்று நிலவி வருவதாக ஊடகங்கள் சிலாகித்து வருகின்றன. இந்தப் பிரச்சினை வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்றுவது சம்பந்தமாக ரணில் தெரிவித்த ஒரு கருத்துச் சம்பந்தமாக உருவானது என்பது எல்லோருக்கும் தெரியும்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் வடக்கிலிருந்து இராணுவத்தைப் பெருமளவு குறைத்து, அவர்கள் வசம் இருக்கும் பொதுமக்களின் காணிகளை உரியவர்களிடம் கையளிக்கப் போவதாக ரணில், இன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உட்பட எதிரணியினர் மக்களுக்கு வாக்குறுதி அளித்தனர். இதுவும் இன்ன பிற காரணங்களுக்காகவும்தான் தாம் மைத்திரியை ஆதரிப்பதாகச் சொல்லியே முதலமைச்சர் விக்னேஸ்வரனின் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் ஜனாதிபதித்தேர்தலில் மைத்திரியை ஆதரித்தது.

ஆனால் வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்றுவது நடைமுறைச் சாத்தியமில்லாதது என்பதை இந்த இரண்டு பகுதியினரும் நன்கு அறிவார்கள். அதைத் தெரிந்து கொண்டே மக்களை ஏமாற்றப் பொய் வாக்குறுதிகளை அள்ளி வீசினர்.

ஆனால் இப்பொழுது ரணில் சிங்கள மக்களையும், இராணுவத்தையும் தம்மை நம்ப வைக்கவும், எதிர்க்கட்சிகளின் தாக்குதல்களில் இருந்து தப்பவும் வடக்கிலிருந்து இராணுவத்தை அகற்ற முடியாது என்கிறார்.

அதேபோல, "மைத்திரியை தமிழ் மக்களுக்கு எந்தவிதமான பிரயோசனமும் இல்லாமல் ஏன் ஆதரித்தீர்கள்?" என்ற தமிழ் மக்களின் கோபாவேசமான கேள்வியிலிருந்து தப்புவதற்காக ஏதாவது ஒரு நாடகம் போட வேண்டிய தேவை முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கும் இருக்கிறது.

அதற்கும் அப்பால் "நீங்கள் முதலமைச்சராக நான்கு வருடங்கள் இருந்து என்னத்தை வெட்டிக் கிழிச்சனீங்கள்?" என்ற தமிழ் மக்களின் இன்னொரு கேள்விக்கு நான்கு வருடங்களுக்குப் பின்னர் பதில் சொல்ல வேண்டிய தேவையும் விக்னேஸ்வரனுக்கு இருக்கிறது.

இந்தக் கேள்வியை விக்னேஸ்வரனுடன் இன்னொரு "பனிப்போரை" நடாத்தி வரும் மாவை சேனாதிராசா கூட சில வேளைகளில் கேட்கக்கூடும்! அதுமட்டுமின்றி, சம்பந்தனுக்குப் பின்னர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பதவியை சுவீகரிப்பதற்கு காத்துக் கொண்டிருக்கும் விக்னேஸ்வரன் தன்னை ஒரு "பயில்வான்" எனத் தமிழ் மக்களுக்குக் காட்ட வேண்டிய தேவையும் இருக்கிறது.

இந்த இரு பக்கத் தேவைகளையும் மனதில் கொண்டு உருவாக்கப்பட்ட நாடகம்தான் ரணில் - விக்னேஸ்வரன் இடையிலான "பனிப்போர்" என்பதை இந்த இரு தரப்பினரதும் வரலாற்றை நன்கு அறிந்தவர்கள் புரிந்து கொள்வர்.

இது ஒருபுறமிருக்க, இவர்களது "பனிப்போர்" குறித்து அண்மையில் ஊடகவியலாளர் ஒருவர் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தனிடம் கேள்வி எழுப்பிய போது, அவர் கொடுத்த பதில் சம்பந்தனின் உண்மையான சுயரூபத்தை அம்பலத்துக்குக் கொண்டு வந்திருக்கிறது.

அவர் தனது பதிலில் ஊடகங்களுக்கு கடுமையான எச்சரிக்கை ஒன்றை விடுத்திருக்கிறார். இது தங்களுடைய உட்கட்சிப் பிரச்சினை என்றும், இதில் ஊடகங்கள் தேவையில்லாமல் மூக்கை நுழைக்கக்கூடாது என்றும் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்!

"என்னய்யா, நாட்டின் பிரதமருக்கும், தமிழ் மக்களின் முக்கியமான ஒரு பகுதியின் முதலமைச்சருக்கும் இடையில் உருவாகியுள்ள "மோதல்" உட்கட்சி விவகாரமா? கடந்த காலத்தில் மகிந்த அரசின் கீழ் ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் நசுக்கப்படுகிறார்கள் என ஐ.தே.க அணியினருடன் சேர்ந்து கூப்பாடு போட்ட நீங்கள், இப்பொழுது உங்கள் பிரச்சினையில் மட்டும் ஊடகங்கள் மௌனமாக இருக்க வேண்டும் என எச்சரிக்கை விடுவது என்ன விதமான ஊடக தர்மம் அல்லது சுதந்திரம்?" என்றுதான் கேட்கத் தோன்றுகிறது.

அத்துடன் ரணிலுக்கும் விக்னேஸ்வரனுக்கும் அப்படி ஒரு பிரச்சினையும் இல்லையென்று ஒருபுறத்தில் மறுக்கும் சம்பந்தன், மறுபுறத்தில் இந்தப் பிரச்சினைக்கு என்ன செய்வது என்று கூட்டமைப்பு தலைவர் என்ற முறையில் தனக்குத் தெரியும் எனவும் அகங்காரத்துடன் கூறியிருக்கிறார்.

இங்கும் கூட 4 கட்சிகள் அங்கம் வகிக்கும் கூட்டமைப்பில் ஆலோசித்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று அவர் சொல்லவில்லை. "நானே எல்லாம்" என்ற அகங்காரத்துடனும், சர்வாதிகாரத்தனத்துடனும்தான் பதில் இறுத்திருக்கிறார். இதிலிருந்து தெரிகிறது இவர்கள் ஊடகங்களை மதிக்கும் விதமும், உட்கட்சி ஜனநாயகத்தைப் பேணும் முறையும்! தமிழ் மக்கள் ஏமாந்த "சோணகிரிகளாக" இருக்கும் வரை அவர்கள் இதுவும் செய்வார்கள், இன்னமும் செய்வார்கள்.



(நன்றி: வானவில் 52)





# மைக்ரோசொப்ட் 40

கல்லூரியில் தங்களின் படிப்பை முடிக்காமல் வெளியேறிய இரண்டு மாணவர்கள் தொடங்கிய சொப்ட்வெயார் நிறுவனம் இன்று உலகையே மாற்றி, தனி மனிதர்களின் வாழ்க்கையின் ஓர் அங்கமாக மாறி, தொடர்ந்து இயங்கி, சென்ற வாரம் (ஏப்ரல் 4) தன் 40 ஆவது ஆண்டினைத் தாண்டியது.

ஆம், மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் வயது 40. அதனைத் தொடங்கிய பில் கேட்ஸ் மற்றும் போல் அலன் ஆகியோர் தான், அந்த இரண்டு மாணவர்கள். நிறுவனத்தைத் தொடங்கிய போது, பில் கேட்ஸ் வயது 19, அலன் வயது 22.

இன்று, மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் நேரடி ஊழியர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 25 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. சியாட்டில் நகருக்கு வெளியே, 80 இலட்சம் சதுர அடி பரப்பளவில் தன் அலுவலகத்தைக் கொண்டுள்ளது. உலகெங்கும் இதன் கிளைகள் இயங்குகின்றன. இந்நிறுவனம் வழங்கும் சொப்ட்வேர், உலகில் பயன்படுத்தப்படும் 90% கம்ப்யூட்டர்களை இயக்குகிறது. உலகில் இயங்கும் நிறுவனங்களில் அதிக மதிப்பு கொண்டவற்றில் மூன்றாவது இடத்தை மைக்ரோசொப்ட் கொண்டுள்ளது.

இதன் நிறுவனர் பில் கேட்ஸ், 2000 ஆண்டில், இதிலிருந்து ஓய்வு பெற்று, ஆலோசகராக உள்ளார். 40 ஆண்டு கால நிறைவை ஒட்டி, மைக்ரோசொப்ட் ஊழியர்களுக்கு செய்தி அனுப்பியுள்ளார். அதில், "வரும் ஆண்டுகளை, இந்தப் புவியில் வாழும் ஒவ்வொருவருக்கும் தொழில் நுட்பத்தின் சக்தி கிடைத்திடப் பயன்படுத்தும்படி" கேட்டுக் கொண்டுள்ளார். மக்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ளவும், தனிநபர் கம்ப்யூட்டர் பயன்பாடு பரவவும், சொப்ட்வேர் பயன்பட வேண்டும் என்று தன் இலக்கை மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால், தான் கண்ட கனவு நிறைவேறி வருவதாகத் தெரிவித்துள்ள பில் கேட்ஸ், இந்த உலகை சொப்ட்வேர் தான் வலிமை கொண்டதாக மாற்ற முடியும். வாழ்வின் பரிமாணங்களைச் சிறப்பானதாக்கும் இலக்கை மைக்ரோசொப்ட் என்றும் மறந்துவிடக் கூடாது என்றும் கேட்டுக் கொண்டுள்ளார். "அடுத்து நாம் செயற்படுத்தப் போவதுதான் மிக முக்கியமானதாகும்" என்று தன் செய்தியில் எடுத்துரைத்துள்ளார்.

மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் அன்றாட பணிகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட பில் கேட்ஸ், தொடர்ந்து அதன் தலைமை நிர்வாகியான சத்ய நாதெள்ளாவிற்கு ஆலோசனைகளை வழங்கி வருகிறார். தற்போது "பில் மற்றும் மெலிண்டா பவுண்டேஷன்" என்னும் அறக்கட்டளை அமைப்பின் மக்களுக்கான உதவிகளை வழங்கும் பணிகளைக் கவனித்து வருகிறார். அவருடைய தனிப்பட்ட வருமானம், அவரைக் கடந்த 21 ஆண்டுகளில், 16 முறை, உலகின் முதல் பணக்காரர் என்ற இடத்தில் வைத்துள்ளது. அவர் மரணத்திற்குப் பின்னால், தன் சொத்தின் 95% பணம் தரும காரியங்களுக்கு வழங்கப்படும் என உறுதி அளித்துள்ளார். இதுவரை தன் அறக்கட்டளைக்கு 2,800 கோடி டொலர் நிதி அளித்துள்ளார். தன் ஒவ்வொரு குழந்தைக்கும் (இரண்டு மகள், ஒரு மகன்) தலா ஒரு கோடி டொலர் மட்டுமே பில் கேட்ஸ் ஒதுக்கி வைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.



## இவர்தான் பில் கேட்ஸ்!



அமெரிக்காவில், கம்ப்யூட்டரைக் கொண்டிருந்த ஒரு சில பள்ளிகளில் ஒன்றான "லேக்சைட்" (Lakeside School) பாடசாலையில் பில் கேட்ஸ் மாணவனாகச் சேர்ந்தார். அதுவே அவருக்குக் கம்ப்யூட்டர் மேல் ஆர்வம் கொள்ள, காரணமாய் இருந்தது.

பில் கேட்ஸ் எழுதிய முதல் புரோகிராம் டிக் டேக் கேம் என்ற விளையாட்டுக்கானது. தன் 17 ஆவது வயதில், தன் பள்ளிக்காக டைம் டேபிள் தயாரிப்பதற்கான புரோகிராம் ஒன்றை வடிவமைத்து வழங்கி, 4,200 டொலர் பெற்றார். இதுவே அவர் விற்பனை செய்த முதல் புரோகிராம்.

ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் படிக்கும்போது தன் பேராசிரியர்களிடம், தான் 30 வயதை அடைவதற்குள், ஒரு லட்சாதிபதியாகி விடுவேன் எனக் கூறி இருந்தார். 31 வயதில் அவர் கோடீஸ்வரனானார்.

1975 ஆம் ஆண்டில், பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறி, தன் நண்பருடன் இணைந்து மைக்ரோசொப்ட் நிறுவனத்தைத் தொடங்கினார்.

மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் மூலம் பில் கேட்ஸ் பெறும் வருமானம் பற்றிக் கீழ்வருமாறு கூறப்படுவதுண்டு. ஒரு விநாடியில் 250 டொலர், ஒரு நிமிடத்தில் 15,000 டொலர், நாள் ஒன்றுக்குக் கிட்டத்தட்ட 2 கோடி டொலர் வருமானம் பெறுகிறார்.

பில் கேட்ஸை ஒரு நாடாக எண்ணினால், உலகத்தின் 37 ஆவது பணக்கார நாடாக அவர் இருப்பார்.


1994 ஆம் ஆண்டில், தான் பல ஆண்டுகளாகக் காதலித்து வந்த மெலிண்டாவைத் திருமணம் செய்தார் பில் கேட்ஸ். இவர்களுக்கு இரு மகள்களும், ஒரு மகனும் உள்ளனர்.

# குளிரும் நெருப்பு

- ஜெயமோகன் -

முன்பு என ஆசிரியர் நித்ய சைதன்ய யதியிடம் பேசிக்கொண்டிருந்தேன். அவர் அப்போது சாமவேதம் ஆக்னேய காண்டத்துக்கு உரையளித்துக் கொண்டிருந்தார். அக்னியின் அழகிய சித்திரங்கள் நிறைந்த கவிதைப்பகுதி அது. மலரிலும் இலைத்தளிரிலும் உறையும் அக்னியைப் பற்றி சொல்லப்பட்டபோது என் முகக்குறி கண்டு நித்யா சொன்னார். வேதம் சொல்லும் அக்னி, பருப்பொருளான அக்னி இல்லை. அக்னி என்ற பருப் பொருளில் இருப்பது அக்னி என்ற நிகழ்வு. அந்த நிகழ்வை நிகழ்த்துவது அக்னி என்ற கருத்து. கருத்து வடிவில் அக்னி இப்பிரபஞ்சத்தில் எங்கும் நிறைந்திருக்கிறது. விண்மீன்களில் அது எரிகிறது. பசியில் சுடுகிறது. ஒளியில் மின்னுகிறது.

"எரியும் ஒரு மரத்துண்டை அணைப்பதற்கு எவ்வளவு நீர் தேவையோ



அதைவிட அதிக நீர் ஓர் இலைத்தளிருக்குத் தேவை அல்லவா? அதற்குள் எரியும் தீ அல்லவா அந்த நெருப்பை உண்கிறது?" என்றார் நித்யா. ஆம் மலரிதழ்களுக்குள்ளும் நெருப்பு வாழ்கிறது. தொட்டால் குளிரும் நெருப்பு அது.

ஒரு சீனக்கதை. சீனச்சக்கரவர்த்தி ஒருவர், ஒரு சிம்மாசனம் செய்ய விரும்பினார். தீயில் எரியாத, கடும் வெம்மையில் உருகாத, அமிலத்தால் அரிக்கப்படாத உடைக்கவும் அழிக்கவும் முடியாத ஒரு பொருளால் அது அமையவேண்டும் என்று அவர் ஆணையிட்டார். இருபது வருடங்கள் மாபெரும் வேதியல் அறிஞர்களும் இயற்கை நிபுணர்களும் ஞானியரும் கூடி ஆலோசித்து தேடி ஒரு மரத்தைக் கண்டு கொண்டனர். அந்த மரத்தால் அமைந்தது அவரது சிம்மாசனம்.

அந்த சிம்மாசனம் நெருப்பில் எரியவில்லை. கடும் வெம்மையில் கருகவில்லை. அமிலத்தில் அரிக்கப்படவில்லை. எந்த எடையும் எந்த விசையும் அதை எரிக்கவும் உடைக்கவும் முடியவில்லை. அந்த மன்னரின் இருபது வாரிசு வரிசைகள் அந்தச் சிம்மாசனத்தில் அமர்ந்து நாடாண்டனர்.

பின்னர் அவர்கள் அகங்காரம் கொண்டனர். அழியாத சிம்மாசனத்திற்கு உரியவர்கள் என எண்ணி அறம் மறந்தனர். அநீதிகளுக்குத் தங்கள் நாட்டையும் மக்களையும் விட்டுக்கொடுத்தார்கள். தீமையில் திளைத்தனர்.

அப்போது ஒருநாள் ஓர் எளிய இடையன் அரச சபைக்கு வந்தான். அந்த சிம்மாசனத்தை அவனால் எரித்துவிட முடியும் என்றான். அரசன் ஆச்சரியத்துடன் "சரி, செய் பார்க்கலாம். ஆனால் எரியாவிட்டால் உன்னைக் கழுவேற்றுவேன்" என்றான். அந்த எளிய இடையன் செக்கச்சிவந்த காட்டு மலர் ஒன்றை அந்தச் சிம்மாசனம் மீது வைத்தான். அந்த இதழ்கள் நெருப்பாக மலர்ந்தன. அந்த மலர் சிம்மாசனத்தை எரித்தது.

சிம்மாசனங்களை எரிக்கும் சின்னமலர் என்று நான் கவிதையைச் சொல்வேன். நெருப்பை உள்ளூரக் கொண்ட மலர். அதனால்தான் உலகமெங்கும் சர்வாதிகாரிகள் கவிதையை அஞ்சினார்கள். விடுதலைப் போர்களில் கவிஞர்கள் முதலில் தூக்கிலேறினார்கள். ஏனென்றால் தன் அழகால், தன் எளிமையால் கவிதை தன்னை ஓர் அடையாளமாக ஆக்கிக்கொள்கிறது. மானுடத்தின் மாறாத சில மதிப்பீடுகளின் அடையாளம். மனிதகுலத்தை இந்தக் கணம் வரை கொண்டுவந்து சேர்த்த சிலவற்றின் அடையாளம். ஆகவே அது தன்னளவிலேயே ஓர் எதிர்ப்புக்குரலாக, ஓர் ஆயுதமாக இருக்கிறது. எரிக்கவேண்டியதை அது எரிக்கும். குளிரவேண்டிய இடத்தில் அது குளிரும்.

என் தொலைதூரம் நீ
நம் இடைவெளிகளில்
மரங்கள்
மலைகள்
அருவிகள்

உன் அழைப்பு
மேக அடுக்குகளில்
பிரசவித்த பறவை போல
மறுகுகிறது

முழுவுறாக் காலத்தை இசைக்கும்
புல்லாங்குழல் துளைகளில்
விழுந்து எழும்
அலைவிரல்கள் நாம்

எத்தனை கடல் மைல்கள்
எத்தனை ஒளியாண்டுகள்

இடையில்
தொடமுடியாத ஒன்று
தொட்டுச் செல்கிறது
மழை போல

- பழநிபாரதி



# சினிமா சினிமா

✽ இதுவரை தான் இசையமைத்துள்ள 1,000 படங்களின் ஓடியோ உரிமையை, அந்தந்த படங்களை தயாரித்தவர்களுக்கே எழுதிக் கொடுத்துள்ளார் இளையராஜா. மேலும், தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர் சங்கத்திற்கு நிதி திரட்டும் வகையில், விரைவில், தமிழ்நாட்டின் நகரங்கள் மற்றும் சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளிலும் இசை நிகழ்ச்சிகளை நடத்திக் கொடுக்க இருக்கிறார்.

✽ தனுஷுடன், மாரி படத்தில் நடித்துக் கொண்டிருக்கும் காஜல் அகர்வால், அரிமா நம்பி இயக்குனர் ஆனந்த் சங்கர், விக்ரமை வைத்து இயக்கும் படத்திலும் ஒப்பந்தமாகியுள்ளார். இது, விக்ரமுடன், அவர் இணைந்து நடிக்கும் முதல் படம். தெலுங்குப் படங்களில் நடிப்பது போன்று அதிரடியாக நடிக்கவும் முடிவு செய்துள்ளார்.

✽ நடிகர் கவுண்டமணிக்கு தற்போது, 75 வயது. ஆனாலும், 49ஓ என்ற படத்திலும், "எனக்கு வேறு எங்கும் கிளைகள் கிடையாது" என்ற படத்திலும் கதாநாயகனாக நடித்து வருகிறார்.

✽ ஒளிப்பதிவாளர் ராஜீவ்மேனன் "மைண்ட் ஸ்கிரீன்" என்ற திரைப்படக் கல்லூரியை 2006 ஆம் ஆண்டு முதல் நடத்தி வருகிறார். இங்கு ஒளிப்பதிவு தொடர்பான அனைத்துப் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. இந்த ஆண்டு மே மாதம் முதல் நடிப்புக்கான தனிப்பயிற்சி வகுப்புகளும் தொடங்கப்படுகின்றன. தேவந்தி நாத் சங்கரநாராயணன் தலைமையில் பிரதாப் போத்தன், "தலைவாசல்" விஜய், நடிகை அர்ச்சனா ஆகியோர் பயிற்சி அளிக்கிறார்கள்.

✽ கணவர் சூர்யாவின் 2 டி நிறுவனத்தின் தயாரிப்பில் "36 வயதினிலே" படத்தின் மூலம் மீண்டும் திரைக்குத் திரும்பியிருக்கிறார் ஜோதிகா. மலையாளத்தில் ஹிட்டான "ஹவ் ஓல்ட் ஆர் யூ" படத்தின் ரீமேக்காக உருவாகியுள்ள இப்படத்தை மலையாளத்தில் இயக்கிய ஆண்ட்ரூஸ் தமிழிலும் இயக்கியுள்ளார்.

✽ என் ராசாவின் மனசிலே படத்தின், இரண்டாம் பாகத்தில், மீண்டும் மீனாவை நடிக்க வைக்கிறார் ராஜ்கிரண்.

✽ பிரகாஷ்ராஜ் இயக்கி நடித்த, ஒன் படத்தில் நாயகியாக நடித்த ராதிகா ஆப்தே, ஒரு ஹொலிவுட் படத்தில் ஆடை எதுவுமின்றி ஒரு காட்சியில் நடித்துள்ளார்.

✽ கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற சச்சின் டெண்டுல்கரின் வாழ்க்கை வரலாறு, ஹிந்தியில் திரைப்படமாகிறது. டுவிட்டரில், தன் வாழ்க்கை கதை படத்துக்கு



பொருத்தமான தலைப்பு சொல்லுமாறு, ரசிகர்களை கேட்டுக் கொண்டுள்ளார் சச்சின்.

✽ ஏ.ஆர்.முருகதாஸ் தமிழில் வெளியான, மௌனகுரு படத்தை, ஹிந்தியில் ரீ-மேக் செய்து கொண்டிருக்கிறார். அப்படத்தில் அருள்நிதி நடித்த கதாபாத்திரத்தில், ஹிந்தியில் சோனாக்‌ஷி சின்ஹா நடிக்கிறார். ஒரு மாறுதலுக்காக, தமிழில் கதாநாயகன் நடித்த வேடத்தை, ஹிந்தியில் கதாநாயகியை நடிக்க வைத்து, கதையிலும் மாற்றத்தை செய்துள்ளேன்..." என்கிறார்.

✽ 24 மணி நேரத்தில் உருவான "சுயம்வரம்" இந்திய சினிமாவில் சாதனைப் படமாக நிகழ்ந்தது. இப்போது 11 மணி நேரத்தில் உருவாகிய சாதனைப் படமாக தயராகி உள்ளது "தப்பா யோசிக்காதீங்க". காலை 7 மணிக்கு படப்பிடிப்பைத் தொடங்கி மாலை 6 மணிக்கு முழுப் படத்தையே உருவாக்கி விட்டனராம். சுல்தான்ஸ் என்பவர் எழுதி இயக்கியுள்ளார்.

✽ ஜெயம் ரவி, ஹன்சிகா நடிக்கும் "ரோமியோ ஜூலியட்" படத்தின் இயக்குநர் லெக்ஷ்மண் எஸ்.ஜே. சூர்யாவின் உதவியாளர். படத்தில் "ஜெயம்" ரவி டி.ஆரின் தீவிர ரசிகராக வருகிறார். படத்தில் அவர் பாடுவதாக வரும் "டண்டனக்கா... டண்டனக்கா..." என்ற பாடல் பெரிய அளவில் ஹிட் ஆகியிருக்கிறது.

✽ தமிழ், தெலுங்கில் வம்சி இயக்கத்தில் உருவாகும் படத்தில் நாகார்ஜுனா, கார்த்தி இருவரும் முதன் முறையாக இணைந்து நடிக்கின்றனர்.

✽ வெங்கட்பிரபுவின் "மாஸ்" படத்தில் நடித்து வந்த எமி ஜாக்சன், தனக்கான காட்சிகளைக் குறைத்ததற்காக நடிக்க மறுத்து விலகினார். தற்போது அவரது இடத்தில் நயன்தாரா நடித்து வருகிறார்.

✽ "நண்பேன்டா" படத்தைத் தொடர்ந்து "கெத்து", "இதயம் முரளி" என அடுத்தடுத்த படங்களில் நடிக்கிறார் உதயநிதி ஸ்டாலின். காமெடி கதைகளுக்கு மட்டுமே முக்கியத்துவம் தந்து வந்த உதயநிதி "கெத்து" படத்தின் மூலம் ஆக்‌ஷன் அவதாரம் எடுக்கிறார். இப்படத்தை "மான் கராத்தே" திருக்குமரன் இயக்குகிறார். தொடர்ந்து சந்தானத்தை பயன்படுத்தி வந்த உதயநிதி, இப்படத்தில் கருணாகரனுடன் இணைகிறார். எமி ஜாக்சன் ஜோடியாக நடிக்கிறார். "இதயம் முரளி" படத்தை "வாமனன்" இயக்குநர் அஹமது இயக்குகிறார்.

✽ ரஜினி பேசிய வசனங்கள் மற்றும் படத் தலைப்புகளுக்கு தொடர்ந்து மவுசு கூடி வருகிறது. "என் வழி தனி வழி", "போடா ஆண்டவனே நம்ம பக்கம்", "ஒரு தடவை சொன்னா" உள்ளிட்ட அவரின் பிரபல வசனங்கள் படங்களுக்குத் தலைப்பாகி வருகின்றன. தற்போது சுசீந்திரன் இயக்கத்தில் விஷால் நடித்து வரும் படத்துக்கும் "சந்திரமுகி" படத்தில் வரும் வேட்டையன் என்ற பெயர் தேர்வானது. இத்தலைப்பை இயக்குநர் பி.வாசு விட்டுத்தர முன்வரவில்லை. இதையடுத்து தற்போது "பாயும் புலி" என்று தலைப்பிடப்பட்டுள்ளது. 1983 ஆம் ஆண்டு வெளியான இப்படம் ரஜினியின் வெற்றிப் பட பட்டியலில் முக்கியமானது. இத்தலைப்பு உரிமை பல லட்சங்களுக்கு வாங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

# இயற்கை வளங்களை சூறையாடுபவர்களே புனிதர்களாக தோற்றமளிக்க முனைகின்றனர்

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

தமிழ்ச் சமூகத்தின் ஒழுக்க கட்டமைப்பை சிதைப்பவர்களும் இயற்கை வளங்களை சூறையாடுபவர்களும் தேசியம் எனும் திரைக்குப்பின்னால் ஒழிந்து கொண்டு புனிதர்களாக தோற்றமளிக்க முனைகின்றார்கள் என நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக்குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஸ்கந்தபுரம் விநாயகர் குடியிருப்பில் பைந்தமிழ் முன்பள்ளியினைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்.

மக்கள் தமது பிரதிநிதிகளை தெரிவு செய்யும் போது நிதானமாக செயற்பட வேண்டும் மக்களுக்கு சரியாக வழிகாட்டக கூடியவர்களையும் மக்களுக்கு சேவையாற்றக் கூடியவர்களையும் தெரிவுசெய்ய வேண்டும். செயற்பாட்டுத்திறனற்றவர்கள் மக்கள் பிரதிநிதிகளாக வருகின்ற சந்தர்ப்பங்களில் கிராமங்களின் மேம்பாட்டுக்காக கிடைக்கின்ற வாய்ப்புக்கள் அனைத்தும் தவறவிடப்படுகின்றன. இன்று ஒப்பீட்டளவில் பாரிய அபிவிருத்தி கண்டுள்ள கிராமங்கள் அபிவிருத்திக்காக இன்றும் ஏங்கும் பல மக்களுக்கு சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்கின்றன.

அதுமட்டுமன்றி மக்களால் தெரிவு செய்யப்படுகின்ற மக்கள் பிரதிநிதிகள் சமூகத்தின் பாதுகாப்பிற்கும் சமூக கட்டமைப்பிற்கும் பாதுகாப்பாளர்களாகத் திகழ வேண்டும் மாறாக சமூக சீர்கேடுகளில் ஈடுபடுபவர்களையும் இயற்கை வளங்களை சூறையாடுதல் உள்ளிட்ட குற்றச்செயல்களைப்புரிந்து நீதிமன்றால் தடுத்துவைக்கப்படுபவர்களும் தொடர்ந்தும் மக்கள் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்படுவார்களேயானால் அது எமது சமூகக்கட்டமைப்பை சிதைத்துவிடவே வழிவகுக்கும். ஆனாலும் இவ்வாறு குற்றச்செயல்களைப்புரிபவர்கள் தமிழ்த்தேசியம் என்ற போர்வைக்குள் மறைந்துகொண்டு புனிதர்களாக சமூகத்திற்கு தம்மை இனம் காட்ட முனைகின்றார்கள் எனகுறிப்பிட்ட அவர்

மீள்குடியேற்றத்திற்கு பின் கிளிநொச்சி மாவட்டத்தின் உட்கட்டுமான அபிவிருத்தியில் நாம் அதிக கரிசனையுடன் செயற்பட்டோம் அதன் விளைவாக கிராம நகர வேறுபாடின்றி உட்கட்டுமான அபிவிருத்திகளை மேற்கொண்டுள்ளோம். இன்று கிளிநொச்சி மாவட்டத்தின் அனைத்து பகுதிகளுக்கும் மின்சாரத்தினை வழங்கியிருக்கின்றோம் மக்களுக்கு பாதுகாப்பான இருப்பிடங்களை தொடர் முயற்சிகளின் மூலமாக பெற்றுக் கொடுத்திருக்கின்றோம். போக்குவரத்தில் பாரிய சிரமங்களை ஏற்படுத்திய மிகமுக்கிய கிராமிய வீதிகளையும் பாலங்களையும் சீரமைத்திருக்கின்றோம் கிராமப்புற பாடசாலைகளை பாரிய அளவில் நிர்மாணித்தும் தரமுயர்த்தியும் இருக்கின்றோம். வேலைவாய்ப்பற்றிருந்த பல ஆயிரக் கணக்கான இளம் தலைமுறையினருக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கியிருக்கின்றோம் குடிநீர்வசதிகள் விவசாயச் செய்கைகளுக்கான நீர்ப்பாசன வசதிகள் குளங்களின் புனரமைப்பு என அனைத்து வாய்புக்களையும் ஏற்படுத்தியுள்ளோம். ஒவ்வொரு கிராமங்கள் தோறும் அடிப்படை வசதிகளைக்கொண்ட முன்பள்ளிகளையும் பொதுநோக்கு மண்டபங்களையும் கூட அமைத்திருக்கின்றோம் அது மட்டுமன்றி மக்களுக்கான வாழ்வாதார உதவிகள் உட்பட மக்களின் ஒவ்வொரு வாழ்க்கைப்படிநிலைகளின் மேம்பாட்டுக்குமான தேவைகள் அனைத்தையும் நிவர்த்தி செய்வதற்காக எமது செயற்பாடுகள் பரந்துபட்டிருக்கின்றன. எமது மக்களின் வாழ்நிலை மேம்பாடு மற்றும் நிரந்தர அரசியல் தீர்வு என்ற எமது அடிப்படைக் கொள்கையிலிருந்து நாம் அணு அளவேனும் விலகிவிடவில்லை அதற்காக தொடர்ந்தும் நாம் உழைத்துக்கொண்டிருக்கின்றோம். என அவர் மேலும் தெரிவித்தார்.



## பிரதேச செயலர் தரம் I இற்கு பதவி உயர்வு பெற்றோர் விபரம்

(வேலணை)

யாழ். குடாநாட்டில் உள்ள பிரதேச செயலகங்களில் கடமையாற்றிவருகின்ற பல பிரதேச செயலர்கள் தற்போதய பதவியில் இருந்து தரம் ஒன்றுக்கான பதவி உயர்வடைந்துள்ளனர்.

மேலும் தரம் ஒன்றுக்கான பரீட்சையில் சித்தியடைந்துள்ளவர்களின் விபரம் வருமாறு ஊர்காவற்றுறை பிரதேச செயலர் திருமதி எழிலரசி யோகநாயகம், உடுவில் பிரதேச செயலர் எம்.நந்தகோபால், அதே உடுவில் பிரதேச செயலகத்தில் கடமையாற்றிவருகின்ற திருமதி யசோதா உதயன், சங்கானை பிரதேச செயலர் ஏ.சோதிநாதன், வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஷன், காரைநகர் பிரதேச செயலர் ரி.பாபு, கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ, கோப்பாய் பிரதேச செயலர் எம்.பிரதீபன், நெடுந்தீவு பிரதேச செயலர் ஏ.ஸ்ரீ ஆகியோர்களே தற்போதுள்ள பதவியில் தரம் ஒன்றுக்காக நடாத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றன. (05)

## வாழ்வாதாரத்தை உயர்த்த உதவிகள் வழங்கல்

(வேலணை)

வடக்கின் வசந்தம் வாழ்வெளிச்சி திட்டத்தின் கீழ் ஒரு கிராமத்திற்கு 100மில்லியன் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஒவ்வொரு கிராம சேவை அலுவலர் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்டிருந்த பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள் கோழிவளர்ப்பிற்கான கோழிக்கூடுகள் அதனோடு கோழிக்குஞ்சுகள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், சிகை அலங்காரத்தொழிலாளர்களுக்கான உபகரணங்கள் என்பன வேலணை பிரதேச செயலக வளாகத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளன. (05)

## மீனவர் கூட்டுறவுச்சங்க கலந்துரையாடல்



பேசாலை மீனவர் கூட்டுறவு சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினர்களுக்கும் வட்க்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனிஸ்வரனுக்குமான விசேட சந்திப்பு பேசாலை மீனவர் கூட்டுறவு சங்க மண்டபத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 8:30 மணியளவில் இடம்பெற்றது. இவ் விசேட சந்திப்பில் அங்குள்ள மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகள் தொடர்பிலும், மற்றும் மானியங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது, அத்தோடு இந்திய இழுவைப்படகுகள் தொடர்பாகவும் இச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது. (160)

## ஒளி உதவும் கரங்களால் கற்றல் உதவிகள் வழங்கல்

புலம்பெயர்ந்த உறவுகளால் மாணவர்களின் எதிர்காலத்தை மேம்படுத்தும் பொருட்டு ஜெனிவாவிலிருந்து உதவும் கரங்கள் அமைப் பின் உறுப்பினர்களால் கிளிநொச்சி அக்கராயன் கண்ணகைபுரம் கிராமத்தின் மாணவர்களுக்கு புத்தகப்பைகள் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன கரைச்சி பிரதேசபை உறுப்பினர் தயாபரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கண்ணகைபுரம் அ.த.க.பாடசாலை அதிபர் கரைச்சி பிரதேசபை உறுப்பினர்கள் கண்ணகைபுரம் கிராமத்தின் பிரதிநிதிகள் உட்பட பெற்றோர்கள மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர். இங்கு கலந்துகொண்டிருந்த கரைச்சிப்பிரதேசசபை உறுப்பினர் தயாபரன் கருத்து வெளியிடுகையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் பின்தங்கிய பிரதேசங்களில் வாழுகின்ற மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்க இப்படியான உதவிகளும் ஒன்றுகூடல்களும் முக்கியமானவை.மாணவர்களுக்கு இந்த அன்பளிப்புக்களை கொடுத்து உரையாடும்போது அவர்களிடம் இருந்து நல்ல பயன்களைப் பெறக்கூடிய நிலை உண்டு.ஆனந்தமான கற்றலுக்கு அவர்களுக்கு போதிய கற்றல் உபகரணங்கள் தேவையாக இருக்கின்றன. ஏற்றத்தாழ்வுகள் இல்லாது மாணவர்களை வைத்திருப்பதற்கும் இத்தகைய உதவிகள் பெரிதும் உதவுகின்றன.

இன்று பல பெற்றோர்கள் பொருளாதார நிலையில் பின்தங்கியநிலையில் இருப்பதால் தங்கள் பிள்ளைகளுக்கு பொருட்கள் வாங்கிக்கொடுக்க முடியாத துர்ப்பாக்கிய சூழலில் இருக்கின்றனர். அதை போக்குவதற்கு உதவிகள் இப்பொழுதும் தேவையாக இருக்கின்றது.போர் நடந்த மண்ணில் இந்தப்பிரச்சினைகள் பல ஆண்டுகள் தொடர்வது தவிர்க்க முடியாத ஒன்றாகவே இருக்கின்றது. எனினும் புலம்பெயர்ந்த மக்களால் செய்யப்படும் உதவிகளும் .ஒத்தாசைகளும் நம்பிக்கையை பெற்றோர்கள் பிள்ளைகள் மனதில் ஊட்டுகின்றது என்றார். (160)

## முரசின் இன்றைய பலன்

(19.04.2015 ஞாயிற்றுக்கிழமை)

மன்மத வருஷம் சித்திரை மாதம் 06 ஆம் திகதி.
பிரதமை திதி சித்தம் யோகம்
அஸ்வினி நட்சத்திரம் பி.இ.4.21 வரை பின் பரணி । கரிநாள்
இராகுகாலம் 4.32 - 6.02வரை சுபநேரம் 9.02-10.32 வரை



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
நியாயத்தை எடுத்துக்கூறியதால் சந்தேகம் விலகிவிடல்

**ரிஷபம்**
கடன் தொல்லையால் உயிரைப் போக்க முயன்றவேளை மனைவியால் தடுக்கப்படல்

**மிதுனம்**
மஞ்சட்கோட்டினுள்ளும் விபத் தேற்படலாம்.

**கடகம்**
காலநிலையினால் விவசாய உற்பத்திகள் பாதிப்படைதல்

**சிம்மம்**
தொலைந்த பொருள்பற்றி அறியஜோதிடரை நாட முற்படல்

**கன்னி**
ஜாதகத்தில் தில்லு முல்லுச் செய்து நிறைவேற்ற நினைத்ததை பெற்றோர் கண்டு பிடித்துத்தடுத்துவிடல்

**துலாம்**
கியு.முறையை உதாசினஞ செய்தவேளை முரண்பாடு முற்றிக் களேபரம் ஏற்படல்

**விருச்சிகம்**
சொத்துப் பிரச்சினை பிதாவின் சுமூகமான முடிவினால் தீர்த்து வைக்கப்படல்

**தனுசு**
புத்தி நன்றாக இருந்ததினால் புதிய முயற்சியில் கால் பதித்தல்

**மகரம்**
கண்டும் காணாமற் சென்றதினால் பகைவனின் தொல்லை

**கும்பம்**
காவலருக்கு டிமிக்கி கொடுத்த நிலைமையில் வகையாக மாட்டுப்படல்

**மீனம்**
நீதி மன்றத்தில் கையடக்கத் தொலைபேசிச் சம்பாஷனையினால் எச்சரிக்கை செய்யப்படல்

# 427 மில்லியன் ரூபா செலவில் அக்கராயன் வீதிகள் புனரமைப்பு




(கிளிநொச்சி)

கிளிநொச்சி அக்கராயன் பிரதேசத்தில் வீதி அபிவிருத்தித் திணைக்களம் இரு வீதிகளை 427 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கும் வேலைத் திட்டத்தினை தொடங்கியுள்ளது. இதனடிப்படையில் 30 ஆண்டுகளுக்கு மேலாக புனரமைக்கப் படாமல் இருந்த அக்கராயன் பிரதேச மருத்துவமனையின் முன்வீதி தற்போது புனர்மைக்கப் பட்டுள்ளது. இவ்வீதி புனர்மைக்கப்படாத காலங்களில் வீதியால் செல்லும் வாகனங்களினால் எழும் புழுதியினால் மருத்துவமன்னயின் நோயாளர்களும் உத்தியோகத்தர்களும் பெரும் நெருக்கடியினை எதிர்கொண்டு வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (160)

# போக்குவரத்து செய்யமுடியாமல் தாளையடி கடற்கரை வீதி

மருதங்கேணி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட வத்திராயன் கட்டைக்காடு கிராமங்களை ஊடறுத்துச் செல்லும் தாளையடி கடற்கரை வீதி மக்கள் பாவனைக்கு உதவாதவாறு குன்றும் குழியுமாகக் காணப்படுவதாக பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

2004 சுனாமி அழிவுக்குப் பின் அப்பகுதியில் மக்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்கான அடிப்படை வசதிகள் எவையும் ஏற்படுத்தித் தரப்படவில்லை எனவும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

முக்கியமாக, வீதி மோசமாகச் சேதமடைந்துள்ளதால் போக்குவரத்தில் தாம் பல சிக்கல்களை எதிர்நோக்குவதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். நாளொன்றுக்கு காலை - மாலை என இரு தடவைகள் மாத்திரமே அப்பகுதியூடாக பேருந்து சேவை நடாத்தப்படுவதால் மாணவர்கள் உள்ளிட்ட பிரதேசவாசிகள் பல நெருக்கடிகளை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

தமது பிரச்சினைகள் தொடர்பாக பிரதேச செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ள போதிலும், இதுவரை எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவித்துள்ள அப்பகுதி மக்கள், குறித்த விடயம் தொடர்பில் பிரதேச செயலரும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# இலக்கிய குவியத்தின் நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். இலக்கிய குவியத்தின் வருடாந்த நிர்வாகத்தெரிவு அண்மையில் கலாசார உத்தியோகத்தர் முன்னிலையில் இடம் பெற்றது.

இத்தெரிவின் போது தலைவராக வேலணையூர் தாஸ், செயலாளராக ஜெ.வினோத் பொருளாளராக யோகேஸ் தெரிவு செய்யப்பட்டனர். அத்தோடு செயற்குழு உறுப்பினராக ஏ.றொக்சன், எஸ்.சிவா, எஸ்.சிவஷ்கந்தசிறீ ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டதோடு நிர்வாகக் குழு உறுப்பினர்களாக எம்.எல்.லாபிர், ச.பிறைநிலா ச.நிமலன் செ.நேதா, சி.உமாசுதன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (105)

# வடமாகாண புத்தாண்டு விழாவில் "கவிக்கனவுகள்" கவிதை இறுவட்டு வெளியீடு



வடமாகாண புத்தாண்டுப் பெருவிழா இம்முறை முல்லைத்தீவு மாவட்டத்தின் கற்சிலைமடு பாடசாலையில் பிரமாண்டமாக கலை பாரம்பரிய நிகழ்வுகளோடு நடைபெற்றது. இந்நிகழ்வில் வன்னியூர் செந்தூரனின் "கவிக்கனவுகள்" என்னும் கவிதை இறுவட்டு வடமாகாண கல்வி பண்பாட்டு அமைச்சின் செயலாளர் சத்தியசீலனால் வெளியீடு செய்யப்பட்டது, துணுக்காய் வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி மாலினி வெனிற்றன், அமைச்சு அதிகாரிகள், முல்லை மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலாளர்கள், கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், திணைக்களம் சார் உத்தியோகத்தர்கள், கலைஞர்கள், மாணவர்கள், மக்கள் என ஏராளமானோர் கலந்து சிறப்பித்திருந்தனர். (90)

# பதிவிருக்கப் பெட்டகம்

"சுதந்திர தேவியின் சிலை ஒரு கையில் புத்தகமும் இன்னொரு கையில் விளக்கும் ஏன் வைச்சிருக்கு தெரியுமா?"
"தெரியேல்லையே"
"இருட்டு வந்தால் விளக்கு வெளிச்சத்தில படிக்கத்தான்"

*** *** *** ***

"என் மகன் ஒரு கிரிக்கெட் பைத்தியம். எப்ப பாத்தாலும் ஒரே கிரிக்கெட் புராணம்தான். இந்தத் தடவை ஐ.பி.எல் கிண்ணத்தை யார் வெல்வார்கள் என்று கேட்டால் கூட டக்கென்று பதில் சொல்லிவிடுவான்"
"குட்... குட்...தம்பீ...இந்த முறை ஐ.பி.எல். கிண்ணம் யாருக்கு?"
"வெல்லப்போற அணிக்கு அங்கிள்"

*** *** *** ***

"உன் பேர் என்ன?"
"சண்முகவடிவேல் சேர்"
"வீட்டில் எப்படிக் கூப்பிடுவாங்கள்?"
"கிட்ட இருந்தால் மெதுவா..., தூரமா இருந்தால் சத்தமா சேர்..."

*** *** *** ***

"இந்தச் சின்ன வயசிலே இத்தனை நாடுகளை பார்த்திருக்கிறதாய் சொல்றீங்களே! செலவு ஆகியிருக்குமே?"
"நோ..நோ..நோ.. ஒரு உலகப்படம் வாங்க என்ன செலவாகியிடப் போகுது!"

*** *** *** ***

"மாப்பிள்ளைக்கு ஆரணிப்பட்டு பெண்ணுக்கு காஞ்சிபுரம் பட்டு, பனாரஸ் பட்டு, இதையெல்லாம் எப்பிடி வாங்குவீர்கள்?"
"கடன்பட்டு தான்".

*** *** *** ***

**உமா:** மகேஷ் உனக்கு எழுதின லவ் லெட்டருக்கு என்னடி பதில எழுதினாய்?
**கலா:** "உங்கள் கடிதம் தீவிர பரிசீலனையில் இருக்கு' என்று எழுதியிருக்கிறேன்!

*** *** *** ***

"இந்தத் தியேட்டரில் எல்லாருக்கும் இஞ்சி இனிப்புத் தருகிறார்களே ஏன்?"
"கதையை ஜீரணிக்கத்தான்"

*** *** *** ***

"எங்கள் கிராமத்துக்கு போற வழியிலே நிறைய குண்டூசி இருந்தது"
"ரொம்ப பின் தங்கிய கிராமமோ?"

*** *** *** ***

"ஏய்..., நான் இங்கே கழுதை மாதிரி கத்திக்கொண்டிருக்கிறன்.., நீ என்ன செய்யிறாய்?"
"உங்களுக்காக பேப்பர் தேடிக்கொண்டிருந்தேன்"

*** *** *** ***

"நீ புதுசா தொழில் தொடங்கிறதுக்கு எதுக்கு டொக்டரிடம் போய் காசு கேட்டாய்?"
"அவர் முதல் உதவி செய்வார் என்று சொன்னார்கள்"

*** *** *** ***

"பெண்ணைப் பிடிச்சிருந்தால்தான் நாங்கள் கையையே நனைப்போம்"
"நாங்களும் அப்படித்தான். உங்களுக்குப் பெண்ணைப் பிடிச்சிருந்தால்தான் குடிக்க தண்ணியே கொடுப்போம்"

*** *** *** ***

"காய்கறிகளைப் பார்த்து அரிவாள்மனை ஒரு பாட்டு பாடினால், என்ன பாட்டுப் பாடும்?"
"தெரியேல்லையே, நீயே சொல்லு..."
"உன்னைத்தான் நான் அரிவேன்... என்னையன்றி யார் அரிவார்... என்றுதான்."

*** *** *** ***

"வைக்கோல் சாப்பிட்டால் கண்ணுக்கு நல்லதடா..."
"எப்பிடிச் சொல்லுறாய்?"
"எந்த மாடாவது கண்ணுக்கு கண்ணாடி போட்டு இருக்கா பார்.."

*** *** *** ***

"தம்பி, நீ என்ன படிச்சிருக்கிறாய்?"
"பி.ஏ...."
"படிச்சது ரெண்டு எழுத்து, அதையும் தலைகீழா படிச்சிருககிறாயே"

*** *** *** ***

"குடிச்சே செத்துப் போனாரே உன் அப்பா. உனக்கு ஏதாவது வைச்சிட்டுப் போனாரா?"
"ஒரு சொட்டு கூட வைச்சிட்டுப் போகேல்லை"

# முன்னாள் முதலமைச்சர் விக்கியுடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நண்பகல் யாழ்ப்பாணத்தில் வட மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை சுமார் ஒரு மணிநேரம் சந்தித்து உரையாடினார்.

இச்சந்திப்பு யாழ்ப்பாணத்தில் உள்ள வடமாகாண முதலமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது. இலங்கை வந்துள்ள வரதராஜப் பெருமாள் தாம் கட்சி சாராத அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட உத்தேசித்துள்ளார் எனத் தெரிவித்தார்.



வெள்ளிக்கிழமை மாலை நல்லூரில் பொது நிகழ்வு ஒன்றில் அவர் உரையாற்றினார்.

# ஐரோப்பாவில் மீன் விலை உயர்வு இலங்கைக்கு சாதக சூழல் கனிவு

மீன்பிடித்துறை தொடர்பான கரிசனைகளில் இலங்கை ஈடுபாடு காட்டிவரினும் பிரதானமான பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை என ஐரோப்பிய ஒன்றியம் கூறியதாக லண்டனிலுள்ள அண்ட கறண்ட நியூஸ ஏஜென்ஸி கூறியுள்ளது.

மீன்பிடி நிலைமையை முன்னேற்றுவதற்கான அரசியல் நடவடிக்கைகள் இன்னும் அங்கீகரிக்கப்படாதுள்ளது. அத்துடன், படகுகளைக் கண்காணிக்கும் முறைமையும் கைவிடப்பட்டுள்ளது.

இலங்கை, தன் கடப்பாடுகளை நிறைவேற்றவேண்டும். இதன் மூலம் காத்திரமான நல்ல இலக்குகளை அடைய வேண்டும். அதுவரை ஐரோப்பிய ஆணையம் காத்திருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் மீன் ஏற்றுமதி மீதான தடை சில மாதங்களில் முடிவுக்கு வரக்கூடுமென ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறினார்.

இலங்கையிலிருந்து மீன் இறக்குமதி செய்வதற்கு ஐரோப்பிய ஒன்றியம், ஜனவரியில் இருந்து தடை விதித்த பின்னர் மீன விலைகள் அதிகரித்த போதிலும் அவை இப்போது சமநிலைக்கு வந்துள்ளன என மீன் கம்பனிகள் இரண்டு கூறியுள்ளன.

எனினும் ஐரோப்பாவில் முன்னரை விடவும் இப்போது விலைகள் 5 சதவீதத்திலிருந்து 10 சதவீதம் வரையிலும் அதிகரித்துள்ளன என்றும் அவை கூறின.

# பொதுத்தேர்தலை எந்தநேரத்திலும் நடாத்த தயார்

## தேர்தல்கள் திணைக்களம் அறிவிப்பு

நாடாளுமன்றம் கலைக்கப்படும் பட்சத்தில் எந்தவொரு நேரத்திலும் தேர்தலை நடாத்த முடியுமான வகையில் சகல நடவடிக்கைகளையும் முன்னெடுக்க தயார் நிலையில் வைககப்பட்டுள்ளதாக தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலை நடாத்துவது பழைய முறையிலா? அல்லது புதிய தேர்தல் முறையிலா என்பதை அரசாங்கமே முடிவு செய்ய வேண்டும் எனவும் எந்தவொரு தீர்மானத்தையும் நடைமுறைப்படுத்த செயலகம் தயாராகவுள்ளது.

புதிய தேர்தல் முறைமையின் அடிப்படையில் தேர்தல் நடைபெறுவதாயின் மாத்திரம் ஒரு குறுகிய காலம் மேலதிகமாக தேவைப்படும்.

இக்காலப் பகுதியில் காரியாலய ஊழியர்களுக்கு பயிற்சி வழங்கப்பட வேண்டியுள்ளதுடன், பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்தவும் வேண்டியுள்ளது. இது குறித்து அரசாங்கத்துக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாகவும் தேர்தல்கள் செயலக அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

# சபாநாயகர் மீது அஸ்வர் கண்டனம்

சபாநாயகர் தனது பொறுப்புக்களைத் தட்டிக்கழிக்கக்கூடாது என்று ஏ.எச்.எம். அஸ்வர் தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் தொடர்பில் சபாநாயகரின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

சபாநாயகர் சமால் ராஜபக்ஷ தனது அதிகாரங்களை நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரிடம் ஒப்படைப்பது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் தனது பொறுப்புக்களை நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு வழங்கப்படுவது நாடாளுமன்றின் மரபுகளுக்கு பாரிய குந்தகத்தை ஏற்படுத்தக் கூடுமென அவர் குற்றம் சுமத்தியுள்ளார். எதிர்க்கட்சித் தலைவர யார் என்பதனை நிர்ணயிக்குமாறு கட்சிகள் சபாநாயகரிடமே கேட்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

# கூட்டமைப்பின் ஆதரவு 19 ஆம் திருத்தத்துக்கு

## சுரேஷ் எம்.பி.உறுதி

அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கும் என்று அக்கட்சியின் ஊடகப் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பாக அரசு இதுவரையில் தகவல்களை வெளியிடவில்லை. எனவே, அது தொடர்பில் விவரங்கள் வெளியான பின்னரே தமிழ்த தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை வெளியிட முடியும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, இலங்கை விவகாரம் தொடர்பாக தமிழ் மக்களுக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காக ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூன், பாதுகாப்பு சபைக்கு முன்வைத்த அறிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

உள்நாட்டு விசாரணையில் கூட்டமைப்புக்கு நம்பிக்கை இல்லை என்றும், சர்வதேச விசாரணையே தேவை என்றும் அவர் தெரிவித்தார்.

சர்வதேச விசாரணை மூலம் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைபபின் நோக்கமாகும் என்றும் சுரேஷ் எம்.பி. மேலும் கூறினார்.

# மீண்டும் தமிழகம் நோக்கி புலம் பெயர்ந்த குடும்பம்

திருகோணமலையிலிருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் அகதிகளாக படகு மூலம் நேற்று தமிழ்நாட்டை வந்தடைந்தனர்.

சத்தியசீலன், அவரது மனைவி பரமேஸ்வரி, இவர்களின் மகள்களான விடுதலைச்செல்வி, மேரி, அஞ்சலிதேவி ஆகிய ஐவருமே தனுஸ்கோடி, அரிச்சல் முனைக் கடற்கரையை அடைந்தனர். இவர்கள், 1999 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை தமிழ்நாட்டில் அகதி முகாமில் தங்கியிருந்தனர்.

போர் முடிவுக்கு வந்த பின்னர், 2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இவர்கள் மீண்டும் தாயகம் திரும்பிச் சென்றனர்.

எனினும், அங்கு வாழ்க்கை நிலை நல்லதாக இல்லை என்றும், தமக்கென வீடு கூட வழங்கப்படவில்லை என்றும், தமிழ்நாடு பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

## தினமுரசுக்கு வந்த கடிதம்

# வட மாகாணத்தில் சனசமூக நிலையங்கள் ஏன் அழிவடைந்து செல்கின்றன

## சம்பந்தப்பட்ட அனைவரும் ஆராய்ந்து விடைகாண முற்படுவார்களா?...

வடமாகாணத்தில் உள்ளூராட்சி சபைகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களாக இன்றுள்ளவை சனசமூக நிலையங்கள் ஆகும்.

சனசமூக நிலையங்களின் பதிவு என்பது உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் ஆளுகைக்கு உட்பட்டதாகும். கிராம மட்டத்தில் மக்களுக்கான சேவை நிலையமாகவும். கலை. கலாசார மற்றும் கல்வி அபிவிருத்தி சமூக அபிவிருத்தி என்பவற்றை மையமாகக் கொண்டு விளங்கும் நிலையங்களாக சனசமூக நிலையங்கள் (community Centres) முதன்மை பெறுகின்றன.

கடந்த 30 ஆண்டுகால வரலாற்றில் சனசமூக நிலையங்கள ஒவ்வொன்றும் தனது நிர்வாகப் பரப்பில் தனது அங்கத்தவர்களின் துணை கொண்டு பணிகளை ஆற்றி வந்துள்ளன.

குறிப்பாக போர் நடைபெற்ற காலங்களில் தனது இலக்கு - தூர நோக்கு என்ற இரண்டு துருவங்களுக்கு ஏற்ப செயற்பட முடியாத நிலையிலும். ஆகக் குறைந்தது ஒன்று, இரண்டு பத்திரிகைகளாவது நிலையத்திற்கு வைத்து மக்களது வாசிப்புக்கு செய்தி. தகவல் அறிவிப்புக்கான ஊடக நிலையமாக சனசமூக நிலையங்கள் (வாசிகசாலை) காத்திரமான பங்கை இன்றுவரை வழங்கி வருகின்றன.

இந்நிலையில் கடந்த 4. 5 வருடங்களாக சனசமூக நிலையங்களுக்கு வழங்கப்படுகின்ற நன்கொடை நிதி வடமாகாண சபையால் உள்ளூராட்சி சபைகளுக்கு வழங்கப்படவில்லை.

இதனால் உள்ளூராட்சி சபைகள் தனக்குக் கீழ் செயற்படும் பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களுக்கு வழங்கமுடியாத நிலையேற்பட்டுள்ளது.

கடந்த நான்கு. ஐந்து வருட கால சனசமூக நிலைய நன்கொடை நிதி எங்கே? என சமூகமட்ட அமைப்புக்கள் பல கேள்விகளை முன்வைத்து தற்போது போர்க்கொடி தூக்கியுள்ளன.

இந்நிலையில் சனசமூக நிலையங்கள் தமக்கு வழங்கப்பட்ட (A தரம் 5 ஆயிரம். B தரம் 4 ஆயிரத்து 500 ரூபா) நிதியை 5 வருடங்களுக்கும் முழுமையாக சேர்தது வழங்கப்பட வேண்டும் எனக் கோரி வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரனிடம் கடிதங்களாக குவிந்துள்ளன.

இதற்கு செவிசாய்க்கும் வண்ணம் சனசமூக நிலையங்கள் அனைத்துக்கும் (கிளிநொச்சி. யாழ்ப்பாணம். முல்லைத்தீவு. வவுனியா. மன்னார்) நன்கொடை வழங்க மாகாண சபை நிதியைத் திரட்டி வைப்பில் இட்டுள்ளது.

நான் இங்கு குறிப்பிட்டுக் காட்ட விரும்புவது யாதெனில். ஐந்து வருடங்களுக்குப் பின்னர் சனசமூக நிலைய நன்கொடை வழங்கப்படவுள்ளது. இதற்கு வடமாகாண சனசமூக நிலையங்களை பிரமாண அடிப்படையில மிதப்பிடுதல் - 2015 என்ற ஒரு படிவம் வித்துவான்களால் தயாரிக்கப்பட்டு சனசமூக நிலையங்களுக்கு வழங்கப்பட்டு பரிசோதிக்கப்படுகிறது.

இவ்வாறு வித்துவான்களால் தயாரிக்கப்பட்ட படிவங்களை அதற்குப் பொறுப்பான இன்னொரு வித்துவான் கேள்விகளைக் கேட்டு சனசமூக நிலையங்களை வாட்டி வதைக்கின்றன.

உண்மையில் சனசமூக நிலையங்களுக்கு கடந்த 5 வருடங்களுக்கான கொடுப்பனவுகளை வழங்கி அவர்களின் அபிவிருததிகளை செயற்பாடுகளை ஊக்குவித்துவிட்டே படிவங்களை வழங்கி மேலதிக பரிசோதனைகளை மேற்கொள்ளவேண்டும்.

இது தெரியாமல் உள்ளூராட்சி திணைக்களம் ஒரு நடவடிக்கை. வட மாகாண சபை இன்னொரு நடவடிக்கை. அலுவலர்கள் சனசமூக நிலையங்களை ஆட்டிப்படைத்தல் இன்னுமொரு நடவடிக்கை இன்மூன்றுக்கும் மத்தியில் மக்கள் படும்பாடு பெரும் அல்லோலகல்லோலம்.

எனவே வடமாகாண முதல்வர் இவ்வாறான விடயங்களை கீழிறங்கி பார்க்கவேண்டும். அவதானம் செலுத்த வேண்டும் என்பது எனது பணிவான வேண்டுகோள்.

எனவே சனசமூக நிலையங்களுக்கு புத்துணர்ச்சி ஏற்படுத்த முன்வர வேண்டும். பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி (DCB) பிரமாண அடிப்படையிலான மூலதன நிதி (CBG) போன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிதிகளை சனசமூக நிலையங்களுக்கு தானாக வழங்கி அபிவிருத்தி செய்ய முன்வரவேண்டும்.

இன்று வடமாகாண அதிகாரிகள் கௌரவ உறுப்பினர்கள் செய்ய வேண்டியது என்ன கீழ்மட்ட சனசமூக நிலையங்களை பலப்படுத்தவும். வலுப்படுத்தவும் முன்வரவேண்டும்.

அந்நிலையங்களுக்கு ஊடாக மக்களின் தேவைகளை நிறை வேற்ற வேண்டும். ஒரு பத்திரிகையுடன் இயங்கும் சனசமூக நிலையங்களையும் முழுமையாக ஊக்குவிக்க சபைகளின் தவிசாளர்கள். செயலாளர்கள் முன்வரவேண்டும்.

இதற்கு மேலாக பணிபுரிகின்ற சனசமூக அபிவிருத்தி அலுவலர்கள் முன்வரவேண்டும். எனவே காலத்தின் தேவையறிந்து வடமாகாண சபை முதலில் படிவங்கள் நிரப்புவதனை நிறுத்தி வைத்து அனைத்து சனசமூக நிலையங்களின் வங்கிகளுக்கும் இந்த முழு நிதியை அனுப்ப வேண்டும்.

அந்நிதி உரிய சனசமூக நிலையத்திற்கு கிடைத்ததா? என உறுதிப்படுத்த வேண்டும். இவ்வாறு வழங்கிய பின் செயற்படும் சனசமூக நிலையங்களுக்கு சிறு ஊக்குவிப்பினையும் செயற்படாத சனசமூக நிலையங்களுககு முழு ஊக்குவிப்பினையும் வழங்க முன்வரவேண்டும். இது தான் நிலைத்திருக்கும் - நீடித்த அபிவிருத்தியாகும். படிவம் தயாரிப்பது நிரப்புவது அபிவிருத்தியல்ல.

இதனைவிடுத்து இயங்கும் - இயங்கு நிலையில் உள்ள சனசமூக நிலையங்களுக்கு நொந்தரவுகளை கொடுத்து உங்களது திறமைகளை காட்ட முன்வராதீர்கள்.

மத்திய அரசின் கீழ் நேரடியாக கிராம அபிவிருத்தி சங்கங்கள் பல நன்மைகளை அனுபவிக்கும் போது மாகாண சபையின் கீழ் இயங்கும் சனசமூக நிலையங்கள் ஏன் மேல்நோக்கி செல்வதற்கு பதிலாக கீழ் நோக்கி செல்கின்றன. தேர்தல் கூட்டத்திற்கு மட்டும் பயன்படும் சனசமூக நிலையம் தேர்தல் முடிவடைந்தவுடன் என்ன நிறம். எந்த இடம் என்று தெரியாத நிலையே இன்று எல்லோர் முன் உள்ளது.

எனவே சனசமூக நிலையம் வடக்கில் ஓர் உன்னத இடத்தை பெற அனைவரும் ஒருங்கிணைந்து முன்னேற்றுவதற்கு கைகொடுத்து உதவுவோம். பொறுத்து இருப்பதும் அபிவிருத்தியில் ஓர் இலக்கு என தற்போது கூறப்படுகின்றது.

\- நன்றி

தலைவர்

லெனின் ச.ச.நிலையம் - வடமராட்சி

**(13). சரியான விடையின் கீழ் கோடிடுக**

44. பால் குடித்து வளரும் பறவை ஒன்று ....................
(i). ஆந்தை (ii). வெளவால் (iii). கிளி

45. நுளம்பு ஆரம்பப்பருவம் இவ்வாறு அழைக்கப்படும்
(i). குடம்பி (ii). குஞ்சி (iii). முட்டை

46. கடிகாரம் ஒன்றில் அளக்கக்கூடிய மிகச்சிறிய நேரம்
(i). நிமிடம் (ii). மணித்தியாலம் (iii). செக்கன்

47. ஒன்றுக்கும் பத்துக்குமிடையில் எத்தனை 5 மடங்குகள் உள்ளன?
(i). 2 (ii). 19 (iii). 21

48. ஒன்றுக்கும் பத்துக்குமிடையில் எத்தனை ஒற்றை எண்கள் உள்ளன?
(i). 3 (ii). 4 (iii)5

49. உங்கள் ஆடைகள் புத்தாடையை போன்று நீண்டநாட்களுக்கு பளபளப்புடன் காட்சியளிக்கும் என்னும் விளம்பரமானது
(i). விளையாட்டுக்குரியது (ii). கல்விக்குரியது (iii) வியாபாரத்துக்குரியது

50. விமானத்துக்கு விமானி என்பது போல யானைக்கு
(i). சாரதி (ii). பாகன் (iii) மீகாமன்

**(14). 51 தொடக்கம் 55 வரையான வினாக்களுக்கான விடைகளை ஆ பகுதியில் இருந்து தெரிந்து அம்புக்குறிகளினால் இணைக்குக**

| "அ" | "ஆ" |
|---|---|
| 51. வாய் பேசாத மிருகம் | அலெக்ஸாண்டர் கிரகம்பெல் |
| 52. தாஜ்மஹால் | கணவாய் |
| 53. கலாவாவி | இலங்கை |
| 54. கடுகண்ணாவ | இந்தியா |
| 55. தொலைபேசி | ஒட்டகச்சிவிங்கி |

### நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (01). 01.3 | 02.1 | (02). 03.5 | 04.3 | 05.1 | 06.4 | 07.2 |
| (03). 08. நட்சத்திரம் | | 09. பொருட்காட்சி | | 10. தலைப்பாகை | | 11. பிறந்திருக்கலாம் |
| (04). 12. சரி | 13. சரி | 14. பிழை | 15. பிழை | (05). 16. காற்று | | 17. சூரியன் |
| 18. பிளாஸ்ரிக் | 19. பாய் | (06). 20. சமகருத்து | | 21. எதிர் | | 22. சமகருத்து |
| 23. வித்தியாசம் | | (07). 24. பாசி | | 25. வாயு | | 26. குடம் |
| 27. | 28. முட்டைகள் காணப்படும் | | | (08). 29.2, 22 | | 30. 25, 5, 5 |
| (09). 31. 769 | 32. 678 | 33.4 | (10). 34.10 | 35. 1kg | | (11). 36.9 |
| 37. கண்ணாடி | 38. கடவுச்சீட்டு | | 39.5 | (11). 40. A | | 41. C |
| 42. C | 43. B | 44. A | 45. A | 46. C | | 47. C |
| 48. B | 49. C | (12). 50. இலையான் | | 51. தவளை | | 52. கரப்பொத்தான் |
| 53. வண்ணாத்திப்பூச்சி | | 54. ஆமை | | (14). 55. 24 | | 56.1 |

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



## தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை முன்னோடி - 2015

பகுதி - I
1 மணி 15 நிமிடம்



# கல்வி முரசு

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

**(01). பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக**

"தொலைக்காட்சியைக் கண்டுபிடித்தவர் யார்?" என நிசாம் கேட்டான்.
"எனக்குத் தெரியும். "ஜோன்லோகி" என சுனேத்திரா முந்திக்கொண்டு கூறினாள்.
"உனக்கு எப்படித் தெரியும்?" என குமார் அவளிடம் குறுக்குக் கேள்வி கேட்டான்.
"கடந்தவார சிறுவர் சஞ்சிகையில் அவரின் படத்துடன் பெயரும் போடப்பட்டிருந்தது"
"அவரைப் பற்றி இன்னும் தகவல்கள் சொல்லுங்கள" குமாரும் மகேந்திரனும் கேட்டனர்.

01. தொலைக்காட்சிக்கும், கணனிக்கும் இடையில் உள்ள ஒற்றுமை ஒன்று?
(i). மின்பாவனை, திரை ஒன்று காணப்படல்
(ii). பாடல்கேட்டல், நாடகம் பார்த்தல்
(iii). படம் பார்த்தல், விளம்பரம் கேட்டல்



02. வானொலியை விட லோகி பெயர் கண்டு பிடித்த உபகரணத்தில் உள்ள விசேட இயல்பொன்று
(i). ஒலி (ii). சங்கீதம் (iii). படம்




03. இலங்கையில் வசிக்கும் மூவினத்தவரின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. பொருத்தமான பெயரின் கீழ் கோடிடுக
(i). சிங்களம் - குமார் (ii). தமிழ் - சுனேத்திரா (iii). முஸ்லிம் - நிசாம்

04. அன்றாட செய்திகளை அறிந்து கொள்ளக்கூடிய முறையொன்று
(i). பத்திரிகைகள் (ii). கதைப்புத்தகங்கள் (iii). சிறுவர் சஞ்சிகைகள்

05. வான்வெளி செய்திகளை அறிந்து கொள்ள பயன்படுவது
(i). ரொக்கட் (ii). ஆகாயவிமானம் (iii). செயற்கைக்கோள்

**(02). முதலில் தரப்பட்ட படத்துக்குப் பொருத்தமான படத்தை தெரிவு செய்க**

06.  (i)  (ii)  (iii) 

07.  (i)  (ii)  (iii) 

**(03). மாறிக்கிடக்கும் சொற்களை சரியாக ஒழுங்குபடுத்தி எழுதப்பட்டுள்ளதன் கீழ் கோடிடுங்கள்.**

08. வாழலாம், நித்தம், பேணி, சுத்தம்
(i). வாழலாம் நித்தம் பேணி சுத்தம்
(ii). சுத்தம் வாழலாம் பேணி நித்தம்
(iii). சுத்தம் பேணி நித்தம் வாழலாம்

09. கட்டு, கசக்கிக், கந்தையானாலும்
(i). கட்டு கசக்கிக் கந்தையானாலும்
(ii). கசக்கிக் கட்டு கந்தையானாலும்
(iii). கந்தையானாலும் கசக்கிக்கட்டு

**(04).10 - 14 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான வினைச்சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிந்து எழுதுக**

10.நாளை அப்பா .................................................. (வருவார், வருகிறார், வந்தார்)

11.இலங்கையில் ஆதிவாசிகள் .................................... (வாழ்கின்ற, வாழ்வார்கள், வாழ்ந்தனர்)

12.அவர்கள் மின்சாரத்தை கவனமாகப் ................................ (பாவியுங்கள், பாவித்தார், பாவிப்பார்கள்)

13.தேசியகீதத்துக்கு மரியாதை செய்தல்.................................. (கூடாது, வேண்டும், குற்றமாகும்)

14.இலங்கையை இராஜசிங்கன் ............................................ (ஆண்டான், ஆள்கிறான், ஆழ்வான்)

**(05).தடித்த எழுத்தில் தரப்பட்டுள்ள சொற்களுக்குப் பதிலான வேறொரு சொல்லின் கீழ் கீறிடுக**

15.காய்ச்சி ஆறிய நீரையே பருகு
(i)கொதித்து, ஆற்று (ii).கொதித்து,குடி (iii).வடித்து,குடி

16.உப்பு இட்டவரை உள்ள அளவும் நினை
(i)கொடுத்தவரை, மறவாதே (ii).கொடுத்தவரை, மற (iii).தள்ளியவரை, மறவாதே

**(06)."அ" பகுதிக்குப் பொருத்தமான விடைகளை "ஆ" பகுதியில் இருந்து தெரிந்து இணைக்க**

| "அ" | "ஆ" |
|---|---|
| 17. 0.1 | ரூ.25 |
| 18.XXVIII | $2\frac{1}{2}$ m |
| 19.50சதம், 50 | $\frac{1}{10}$ |
| 20.250m | 18.30மணி |
| 21.பி.ப.6.30 | 28 |

**(07).சரியான விடையின் கீழ் கோடிடுங்கள்**

22.எனது வீட்டுத்தோட்டத்தில் ரோசாப்பூக்கள் அதிகமாக உண்டு. அதற்கிணங்க
(i).எனது தோட்டத்தில் ரோசாப்பூக்கள் இல்லை எனலாம்
(ii). வேறு பூக்கள் சிலவும் எனது தோட்டத்தில் உண்டெனலாம்
(iii).எனது வீட்டுத்தோட்டத்தில் ரோசாப்பூக்கள் மட்டுமே உண்டு

23.சதுரத்திற்கு நான்கு பக்கங்கள் உண்டு அதற்கிணங்க
(i).இந்நான்கு பக்கங்களும் ஒன்றுக்கொன்று சமன்
(ii). இந்நான்கு பக்கங்களும் ஒன்றுக்கொன்று சமனில்லை
(iii).இந்நான்கு பக்கங்களும் சில வேளைகளில் ஒன்றுக்கொன்று சமன்

**(08).பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக**

24.சிங்கள தமிழ்ப்புத்தாண்டு கொண்டாடப்படும் மாதத்தை தமிழில் எழுதுக ..............................

25.நுளம்புகள் மூலம் பரவும் நோய் ஒன்றைத் தருக ..............................

26.இலங்கையின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட தலைவர் ஒருவரின் பெயரை தருக ..............................

27.புவி சூரியனைச் சுற்றி வர எவ்வளவு நாட்கள் செல்லும்? ..............................

28.இரவில் நீர் வானில் காணும் இரண்டு விடயங்களைத் தருக? ..............................

29.சூரியனைச் சுற்றி வர சந்திரனுக்கு எத்தனை நாட்கள் எடுக்கும்? ..............................

30.பூமி தன்னைத் தானே சுற்றிவர எவ்வளவு காலம் எடுக்கும்? ..............................


**(09).கண்ணாடிப் பூக்களினால் எமக்குக் கிடைக்கும்**


31.நன்மை ஒன்று .............................. 32.தீமை ஒன்று..............................



**(10).பொருத்தமற்ற பொருளைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக**

33. 
(i).கதிரை (ii).பிலெண்டர் (iii).கீற்றர்

34. 
(i).அம்மா (ii).குடை (iii).குழந்தை

35. 
(i).பூனை (ii).மனிதன் (iii).தும்பி

**(11).36 - 40 வரையான வினாத்தாளில் நான்கு சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றில் சரியான விடையைத் தெரிவு செய்க**

36.(i).பாடனூள் (ii).பாடநூல் (iii).பாடநூள் (iv).பாடனூல்


37.(i).வேடுவர்கள் (ii).வேடர்கள் (iii).வேடர்கல் (iv).வேடுவர்கல்


38.(i).உறையாடல்கள் (ii).உரையாடள்கள் (iii).உரையாடல்கள் (iv).உறையாடல்கள்


39.(i).பளாப்பழம் (ii).பலாப்பழம் (iii).பழாப்பழம் (iv).பலாப்பளம்

40.(i).பறிசோதனை (ii).பரிசோதனை (iii).பரிசோதணை (iv).பறிசோதனை

**(12).முதலாம்படத்துடன் பொருந்தாத படத்தின் கீழ் கோடிடுங்கள்**

41 
(i) (ii) (iii)

42. 
(i) (ii) (iii)

43. 
(i) (ii) (iii)

# இடமாற்றம் பெற்றுச் செல்லும் இணைந்த சேவை உத்தியோகத்தர்கள்

வடமாகாணத்தில் கடமையாற்றும் இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கான இடமாற்றப்பட்டியல் வெளியிடப் பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 20ஆம் திகதி முதல் இந்த இட மாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமெனவும், இடமாற்றம் பெற்றுள்ளவர்களுக்கு 2015 ஆம் ஆண்டு மே மாதக் கொடுப்பனவை தற்போதைய திணைக்களங்களில் வழங்க வேண்டாமெனவும் திணைக்களத்தலைவர்களுக்கு வடமாகாண பிரதம செயலாளர் ஆர்.எஸ். துரைராஜா சுற்று நிருபத்தின் மூலம் அறிவித்துள்ளார். (நேற்றைய தொடர்)

| தொ.இல | முழுப்பெயர் | வகுப்பு | தற்போதைய சேவை நிலையம் | இடமாற்றம் வழங்கப்பட்ட நிலையம் | இடமாற்ற சபையின் சிபார்சு / இடமாற்றம் வழங்கும் சேவை நிலையம் |
|---|---|---|---|---|---|
| சாரதி சேவை | | | | | |
| 11 | திரு. மாசிலாமணி தேவனேசன் | II | உதவிப் பணிப்பாளர் பணிமனை, கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், வவுனியா | பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, வவுனியா | மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டுள்ளது |
| 12 | அகமட் கலீல் மசாறிக் | II | பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, வவுனியா | உதவிப் பணிப்பாளர் பணிமனை, கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், வவுனியா | நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம், வவுனியா |
| 13 | திரு.பேரின்பநாயகம் சதீஸ்வரன் | III | பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, வவுனியா | நீர்ப்பாசன பொறியிலாளர் அலுவலகம், செட்டிகுளம் பிரிவு | மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டுள்ளது |
| 14 | திரு.ஆறுமுகம் மதனராஜன் | III | பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, வவுனியா | நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம், வவுனியா | இடமாற்றம் இரத்துச்செய்யப்பட்டுள்ளது |
| 15 | திரு.இராசதுரை நந்தபாலன் | II | வலயக்கல்வி அலுவலகம், வவுனியா, தெற்கு | நிறைவேற்று எந்திரி அலுவலகம், (கட்டடங்கள் ), வவுனியா | மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டுள்ளது |
| 16 | திரு.தெய்வேந்திரநாதன் தவக்குமார் | III | நீர்ப்பாசன பொறியிலாளர் அலுவலகம், செட்டிக்குளம் பிரிவு | பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, வவுனியா | மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டுள்ளது |
| 17 | திரு.காடியல் வெலிகமகே ரஞ்சித் விக்கிரமசிங்க | II | நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம், வவுனியா | பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, வவுனியா | பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், வவுனியா |
| 18 | திரு.யேசுதாசன் ஜெயதாசன் | III | பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகம், வவுனியா | பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், வவுனியா | பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, வவுனியா |
| 19 | திரு.சிவலிங்கம் தர்மலிங்கம் | III | பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், வவுனியா | பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகம், வவுனியா | மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டுள்ளது |
| அலுவலகப் பணியாளர் | | | | | |
| 1 | திரு.வேலுப்பிள்ளை சந்திரகுமார் | I | தொழிற்துறைத் திணைக்களம், வடமாகாணம் | கிராம அபிவிருத்தி திணைக்களம், வடமாகாணம் | இடமாற்றம் இரத்துச்செய்யப்பட்டுள்ளது |
| 2 | மாணிக்கராசா ரகுநாதன் | II | தொழிற்துறைத் திணைக்களம், வடமாகாணம் | கிராம அபிவிருத்தி திணைக்களம், வடமாகாணம் | இடமாற்றம் இரத்துச்செய்யப்பட்டுள்ளது |
| 3 | திரு.வேல்முருகு ஆனந்தராஜா | I | கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம் | மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம் | இடமாற்றம் இரத்துச்செய்யப்பட்டுள்ளது |
| 4 | திரு.பேரம்பலம் சக்திவேல் | II | வலயக்கல்வி அலுவலம் ,வடமராட்சி | மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம் | கல்வி அமைச்சு, வட மாகாணம் |
| 5 | திரு.சொக்கநாதன் நவிந்திரா விஜந்திரம் | II | மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம் | கட்டடங்கள் திணைக்களம், வட மாகாணம் | இடமாற்றம் இரத்துச்செய்யப்பட்டுள்ளது |
| 6 | திரு. எலியாஸ் விமலதாஸ் | II | வலயக்கல்வி அலுவலகம்,கிளிநொச்சி | நீர்ப்பாசனத் திணைக்களம், வடமாகாணம் | கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்,கிளிநொச்சி |
| 7 | திரு.சிவசேகரம் கோசலவன் | II | நீர்ப்பாசனத் திணைக்களம், வடமாகாணம் | வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி | இடமாற்றம் இரத்துச்செய்யப்பட்டுள்ளது |
| 8 | திரு.தம்பு ஜெயக்குமார் | II | வலயக்கல்வி அலுவலகம், துணுக்காய் | பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு | இடமாற்றம் இரத்துச்செய்யப்பட்டுள்ளது |
| 9 | திரு.குணசிங்கம் சசிகரன் | III | பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு | வலயக் கல்வி அலுவலகம், துணுக்காய். | வலயக் கல்வி அலுவலகம், முல்லைத்தீவு |
| 10 | திரு. அல்பிரட் கொன்றளைன் | III | நிறைவேற்று எந்திரி அலுவலகம் (கட்டடங்கள்), வவுனியா | மாகாண கூட்டுறவுப் பயிற்சி நிறுவனம், வவுனியா | வலயக் கல்வி அலுவலகம், வவுனியா தெற்கு |
| 11 | திரு.செல்லத்துரை கதிர்காமநாதன் முகமட் ஹிசைன் | III | பிரதம எந்திரி அலுவலகம், (கட்டடங்கள்), வவுனியா | வலயக் கல்வி அலுவலகம், வவுனியா தெற்கு | கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம், மன்னார் |
| 12 | திரு. சின்னத்தம்பி பரமேஸ்வரன் | I | வலயக் கல்வி அலுவலகம், வவுனியா தெற்கு | பிரதம எந்திரி அலுவலகம், (கட்டடங்கள்), வவுனியா | பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு |
| 13 | திரு.பாலச்சந்திரன் பாலாஸ்வரன் | II | நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம், செட்டிக்குளம் | வலயக் கல்வி அலுவலகம், வவுனியா தெற்கு | இடமாற்றம் இரத்துச்செய்யப்பட்டுள்ளது |
| 14 | திரு.சேகு முகம்மது நூபார் | III | நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம், முருங்கன் | கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்,மன்னார் | பிதம பொறியியலாளர் அலுவலகம், (கட்டடங்கள்) வவுனியா |

(முற்றும்)

# விவசாய உற்பத்திகளுக்கான சந்தைப்படுத்தல் பொறிமுறை தப்புக்கணக்காகிப்போனது ஏன்?

விற்பனைக்காக விவசாயிகளால் எடுத்துவரப்பட்டிருந்த 10இலட்சம் கிலோ மரக்கறிகளை சந்தைப்படுத்த முடியாத நிலையில் அவற்றை அப்படியே சந்தையில் கைவிட்டுச் சென்ற அவலம் தம்புள்ள மத்திய சந்தையில் இடம்பெற்றிருக்கிறது.

இந்த மரக்கறிகள் பழுதடைந்து துர்நாற்றம் வீசிய நிலையில் இவற்றை தம்புள்ள திகம்பதான பிரதேச காட்டு யானைகளுக்கு உணவாக்குவதற்காக அவற்றை எடுத்துச் செல்வதில் பொருளாதார மத்திய நிலை ஊழியர்கள் பெரும் சிரமங்களையும் செலவினங்களையும் எதிர்கொண்டதாகவும் மத்திய நிலைய வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

இதற்கு முன்னரும் இவ்வாறான நெருக்கடிகளை விவசாயிகள் எதிர்கொண்ட போதும் இவ்வளவுக்கு கூடுதலான மரக்கறிகளை அப்படியே கைவிட்டுச் செல்லும் நிலை இவ்வருடத்திலேயே நிகழ்ந்திருப்பதாக தம்புள்ள பொருளாதார மத்திய நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சந்தைப்படுத்த முடியாத இவ்வாறான மரக்கறிகள் தம்புள்ள மத்திய சந்தையிலிருந்து வெளிநிலவரங்களைப் பொறுத்து அவ்வப்போது அவை உடனுக்குடன் வெளிமாவட்ட சந்தைகளுக்கு அனுப்பிவைக்கப்படுவது வழமை.

இருந்தும் இம்முறை பெருந்தொகை மரக்கறிகளை சந்தைப்படுத்த முடியாத நிலையில் ஏனைய மாவட்டங் களுக்கு தமது உற்பத்திகளை அனுப்பிவைக்க முடியாத ஒரு அவல நிலைக்கு விவசாயிகள் எதிர்கொண்டதாக தம்புள்ள பிரதேச சந்தைப்படுத்தல் அதிகாரிகள் தெரிவித திருக்கிறார்கள்.

பரவலாக அனைத்து மாவட்ட சந்தைகளுக்கும் விநியோகிப்பதற்கான ஒரு முன் ஏற்பாட்டை தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தின் சந்தைப்படுத்தல் பிரிவு திட்டமிட்டிருந்தால் இவ்வளவு சேதத்தை தவிர்த்திருக்க முடியுமென்ற ஒரு கருத்தும் விவசாயிகளால் இப்போது சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

இந்த மரக்கறிகளை அப்புறப்படுத்த 4இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான தொகையை பொருளாதார மத்திய நிலையம் செலவிட வேண்டி இருந்த நிலையில் இவ்வாறானதொரு நிலை மீண்டும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்பதில் சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் முன்னெச்சரிக்கையாக நடந்து கொள்ள பொறுப்பான அதிகாரிகள் அறிவுறுத்தியிருப்பதாகவும் தெரிய வருகிறது.

இதேவேளை மரக்கறிகளை சந்தைப்படுத்துவதில் ஏற்பட்டிருக்கும் இந்த நெருக்கடியை உப உணவு உற்பத்தியில் நாடு தன்னிறைவு கண்டிருப்பதாக யாரும் கருதிவிடக்கூடாதென்பதை சுட்டிக்காட்டியுள்ள விவசாயிகள் நகர்ப்புற சந்தைகளில் கூடுதலான விலைக்கு மரக்கறிகள் விற்பனையாவதை சம்பந்தப்பட்ட நிறுவனங்களும் . அதிகாரிகளும் கவனத்தில் கொள்ள வேண்டுமெனவும் விவசாயிகள் கருத்து வெளியிட்டிருக்கிறார்கள்.

இலங்கையின் சில உப உணவு உற்பத்திகளுக்கு நாட்டுக்கு வெளியே பல மடங்கு கூடுதல் விலைகள் கிடைத்து வரும் நிலையில் இந்த உற்பத்திகளை ஏற்றுமதி தரத்துக்கு அமைவாக அறுவடைசெய்து அவற்றை வெளிநாடுகளில் சந்தைப்படுத்துவதற்கான ஏற்பாட்டுக்கு துறைசார் தொழிற் சங்கங்கள் அரசுக்கும் விவசாயத்துறைசார்ந்த நிறுவனங் களுக்கும் அழுத்தம் கொடுக்க வேண்டுமென்ற கருத்தையும் இத்துறைசார் முதலீட்டாளர்கள், உற்பத்தியாளர்கள் முன்வைத் திருப்பதாகவும் தெரிய வருகிறது.

# காங்கோவில் நடைபெறும் கடத்தல்களால் தீவிரமடைந்துவருகிறது உள் நாட்டுப்போர்

## எச்சரிக்கை விடுத்துள்ளது ஐ.நா.சபை

காங்கோவில் தங்கம், வைரம், தந்தம் கடத்தலால் அந்த நாட்டில் உள்நாட்டுப் போர் தீவிரமடைந்து வருகிறது என்று ஐ.நா. சபை அறிக்கையில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மத்திய ஆபிரிக்க நாடான காங்கோவில் சுமார் 49 இற்கும் மேற்பட்ட கிளர்ச்சிக் குழுக்கள் செயற்பட்டு வருகின்றன. இந்தக் குழுக்கள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதால் உள் நாட்டுப் போர் நாளுக்கு நாள தீவிரமடைந்து வருகிறது.

தங்கம், வைரம், செம்பு, இரும்பு, வனவளம் என எல்லா இயற்கை வளங்களையும் காங்கோ கொண்டுள்ளது. அங்கு சட்ட விரோதமாக தங்கம், வைரங்கள் வெட்டியெடுக்கப்பட்டு கடத்தப் படுகின்றன. மேலும் யானைகள் கொல்லப்பட்டு அவற்றின் தந்தங்களும் வெளிநாடுகளுக்கு கடத்தப் படுகின்றன.

காங்கோவின் கிழக்குப் பகுதியில் கடத்தல் தொழில் கொடி கட்டிப்பறக்கிறது அங்கு ஆண்டுக்கு ரூ.7800 கோடி அளவுக்கு கடத்தல் பணம் புரள்வதாக தெரிவிக்கப்படுவதுடன் அரசுப் படைகளுக்கும் கிளர்ச்சிப் படைகளுக்கும் இடையே அடிக்கடி மோதல்கள் ஏற்படுகின்றன. சில நேரங்களில் கிளர்ச்சிப் படைகளுக்குள்ளேயே சண்டைகள் நடைபெறுகின்றன. குழப்பங்கள் நிறைந்த அந்த நாட்டில் அமைதிப் பணியை மேற்கொள்ள 20 ஆயிரம் ஐ.நா. வீரர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அனைத்து வளங்கள் இருந்தும் உலகின் வறுமையான நாடுகள் பட்டியலில் காங்கோ தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. குறிப்பிடத்தக்கது.

# ஆப்கானிஸ்தான் இரட்டை குண்டு வெடிப்பில் 33 பேர் உயிரிழப்பு; 100 பேர் படுகாயம்

ஆப்கானிஸ்தானின் ஜலாலாபாத் நகரில் நடாத்தப்பட்ட பயங்கர இரட்டை குண்டுவெடிப்பில் சிக்கி 33 பேர் உயிரிழந்ததாகவும் சுமார 100 பேர் வரை காயமடைந்ததாகவும் தெரியவந்துள்ளது.

ஆப்கானிஸ்தானின் நங்கஹர் மாகாணத்தில் நடத்தப்பட்ட இரட்டை குண்டுவெடிப்பு தாக்குதலில் சுமார் 33 பேர் பலியாகியுள்ளனர். மேலும் 100 பேர் படுகாயம் அடைந்தனர். பலரது நிலை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என்ற அச்சம் நிலவுகிறது.

குண்டுவெடிப்பு தனியார் வங்கிக்கு அருகே நடந்ததாக மாகாண காவல் ஆணையர் ஃபசல் அகமது தெரிவித்தார். தாக்குதலில் சிக்கிய அனைவரும் வங்கிக்கு வந்தவர்கள் அல்லது சாலையில் சென்று கொண்டிருந்தவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

# அமெரிக்க எல்லை அருகே ஐ.எஸ்.ஐ.எஸ். முகாம்

(வோஷிங்டன்)

அமெரிக்க எல்லையில் இருந்து, எட்டு மைல் (12 கி.மீ.) தொலைவில், கிழக்கு மெக்சிக்கோவின் சிஹுவாஹுவா பகுதியில், ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள், தங்களுடைய பயிற்சி முகாமை அமைத்து உள்ளனர். இது தொடர்பாக மெக்சிக்கோ இராணுவ அதிகாரி கூறியதாவது:

அமெரிக்காவின் டெக்சாஸ் நகருக்கு, எட்டு மைல் தொலைவில் தங்களுடைய பயிற்சி முகாமை, ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் அமைத்துள்ளனர். நியூ மெக்சிக்கோ நகரான, சாண்டா தெரேசா மற்றும் சன்லேண்டு பூங்காவிற்கும் இடையில், அமெரிக்க எல்லையில், தீவிரவாதிகள் பாதுகாப்பாக நுழைவதற்கு யூதர்களின் கூட்டமைப்பு உதவுகிறது. என அவர் தெரிவித்தார்.

தீவிரவாதிகளின் பயிற்சி முகாமினால், நியூ மெக்சிக்கோவின் சாண்டா தெரேசா நகரின் ரயில் மற்றும் விமான போக்குவரத்து பாதிக்கப்படுவதாக, மெக்சிக்கோ உளவுத்துறை தெரிவித்துள்ளது.

உலகச் செய்திகள்

# கடலுக்கடியில் மறைந்திருந்த புதையல் கண்டு பிடிப்பு



கடந்த 1942ஆம் ஆண்டு மும்பாயிலிருந்து - பிரித்தானிய நோக்கி சிட்டி ஒப் கய்ரோ என்ற கப்பலில் பயணித்துக் கொண்டிருந்தபோது திடீரென ஜேர்மன் டொபிடோ தாக்குதல் நடாத்தியது. இதனால் இந்தக் கப்பல் சேதமடைந்தது.

ஆனால் தற்போது இந்தக் கப்பலில் இருந்த 50 மில்லியன் டொலர் பெறுமதியான வெள்ளி காசுகள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

சுமார் 100 டன் அளவிலான குறித்த வெள்ளிக் காசு தொகை கடலுக்கு அடியில் உள்ள கப்பலில் இருந்து கடந்த 2013ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் மீட்கப்பட்டது.

மேலும் மீட்கப்பட்ட வெள்ளிக்காசுகள் உருக்கப்பட்டு பிரித்தானிய அரச நாணய சுற்றோட்டத்துடன் சேர்க்கப்பட்ட போதும், அந்த சம்பவத்தை வெளிப்படுத்துவதற்கு இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

யுத்த சூழ்நிலையின் போது நிதிப் பற்றாக்குறை காரணமாக வெள்ளிக் காசுகள் இந்தியாவிலிருந்து, பிரித்தானியாவை நோக்கி எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

1942ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6ஆம் திகதி ஜேர்மன் டொபிடோ தாக்குதல்கள் காரணமாக சேதமடைந்த கப்பலின் இடிபாடுகள் 73 வருடங்களின் பின்னர் அட்லாண்டிக் சமுத்திர பிராந்தியத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

# விமான விபத்தில் பலியானவர்களுக்கு கண்ணீர்பொங்க பிரார்த்தனை

## சோகத்தில் மூழ்கியது ஜேர்மனி



ஜேர்மன் விங்ஸ் விமான விபத்தில் இறந்தவர்களுக்கு தேவாலயம் ஒன்றில் சிறப்பு பிரார்த்தனை நடைபெற்றது.

கடந்த மாதம் 24ஆம் திகதி பிரான்சின் ஆல்பஸ் மலையில் விழுந்து நொறுங்கிய ஜேர்மன் விங்ஸ் விமானத்தில், அதில் பயணித்த 150 பேரும் பலியாகியுள்ளனர்.

இந்நிலையில் விபத்தில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், ஜேர்மனின் கோலோன நகர தேவாலயத்தில் சிறப்புப் பிரார்த்தனை நடைபெற்றது.

இதில் ஜேர்மன் ஜனாதிபதி ஏஞ்சலா ஏஞ்சலா மெர்கல் ஸ்பெயின் உள்துறை அமைச்சர் ஜோர்ஜ் பெர்னான்டஸ் பிரான்ஸ் மற்றும் ஸ்பெயின் போக்குவரத்து அமைச்சர்கள் கலந்து கொண்டனர்.

மேலும் விபத்தில் இறந்தவர்களின் உறவினர்கள், நண்பர்கள், மீட்புப்பணியில் ஈடுபட்டவர்கள், லூப்தான்சா மற்றும் ஜேர்மன் விங்ஸ் அதிகாரிகள், ஊழியர்கள் என மொத்தம் 1,400 பேர் கலந்து கொண்டனர்.

பலியான பயணிகளை நினைவுகூறும் வகையில், 150 மெழுகுவர்த்திகள் தேவாலயத்துக்குள் எரியவைக்கப்பட்டிருந்தன.

இதனைத் தொடர்ந்து விமானத்தை விபத்துக்குள்ளாக்கிய துணை விமானி ஆண்டிரியாஸ் லுபிட்ஸ்காகவும் மெழுகுவர்த்தி வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிகழ்ச்சியை ஒட்டி ஜேர்மனி முழுவதும் அந்நாட்டு கொடி அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் குண்டு வெடிப்பில் ஐ.எஸ்.ஐ.எஸ். தலைவர் பலி

பாகிஸ்தானில் நடந்த குண்டுவெடிப்பில் ஐ.எஸ்.ஐ.எஸ் தலைவர் மற்றும் அவரது கூட்டாளிகள் இருவர் பலியாகியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தான் தலிபான் இயக்கத்தில் முக்கிய தலைவராக இருந்தவர் ஹபீஸ் முகமது சயீத் கடந்த ஒக்ரோபர் மாதம், தலிபான் இயக்கத்தில் இருந்து விலகிய இவர், ஐ.எஸ். ஐ.எஸ் இயக்கத்தில் இணைந்தார்.

அதன் பின்னர் அவர் அந்த இயக்கத்தின் பாகிஸ்தான் பிரிவு தலைவராக நியமிக்கப்பட்டார். இந்த தகவலை ஐ.எஸ்.ஐஎஸ். அமைப்பும் அதி காரப்பூர்வமாக அறிவித்திருந்தது.

இந்நிலையில் அங்கு கைபர் பழங்குடியினர் பகுதியில் அமைந்துள்ள டைரா பள்ளத்தாக்கில், டூர் டாரா என்ற இடத்தில் நேற்று முன்தினம் சாலையோரத்தில் அவர் குண்டு வைத்தார்.

அப்போது எதிர்பாராதவிதத்தில், அது பயங்கர சத்தத்துடன் வெடித்ததால் அவர் சம்பவ இடத்திலேயே பலியானார்.

வாழ்க வளமுடன்

பெயர் : ரா.யதுனந்த்
முகவரி: நுனாவில் மேற்கு சாவகச்சேரி



அகவை 01 இல்
பல்லாண்டு காலம்
வாழ்கவென
வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................
முகவரி :- ..............................
பிறந்த ஆண்டு :- ..............................
கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................
பெற்றோர் கையொப்பம்

இந்த அளவு விளம்பரத்திற்கு

1000/= ரூபா மட்டுமே

# கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு நிரந்தர அதிபர் நியமனம் வழங்குங்கள்

## மத்திய கல்வி அமைச்சிடம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள்

பாடசாலைகளில் ஏற்பட்ட அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆசிரியர்களில் இருந்து பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து வலயக் கல்வித் திணைக்களங்கள் நியமித்துள்ள கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு மத்திய கல்வி அமைச்சிடம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சங்கம் கல்வி அமைச்சிடம் விடுத்துள்ள வேண்டுகோளில்...

நாட்டில் ஏற்பட்டுள்ள பாடசாலை அதிபர்களுக்கான வெற்றிடங்களை நிரப்பி மாணவர்களின தொடர்கல்வியை உறுதி செய்வதற்காக பொருத்தமான மற்றும் தகுதியானவர்களைத் தெரிந்தெடுத்து கடமைமை நிறைவேற்று அதிபர்களாக வலயக் கல்வித் திணைக்களங்கள் நியமனம் செய்துள்ளன. அவர்களில் பலர் கடமைநிறைவேற்று அதிபர்களாக நீண்டகாலம் கடமையாற்றுகின்றனர். அதிலும் பலர் அதிகஸ்ட, கஸ்ட பாடசாலைகளில் கடமையாற்றுகின்றனர். இவர்கள் அதிபர்களுக்கான எந்த வித சலுகைகளும் இல்லாமல் ஆசிரிய வேதனத்துடன் தமது கடமைகளைச் சிறப்பாகச் செய்கின்றனர்.

தற்போது அதிபர் சேவை III றக்கான பரீட்சைக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. ஏற்கனவே பலர் வயது முதிர்ந்தவர்களாகவும், சேவைமூப்புப் கூடியவர்களாகவும் கடமைநிறைவேற்றும் பணியில் உள்ளனர். அவர்களின் வெற்றிடம் மற்றவர்களால் நிரப்பப்படும்போது அவர்கள் செய்த பணிக்கும், கடமைக்கும் எந்தவிதமான மதிப்பும், பெறுமானமும் இல்லாமல் போய்விடும். அத்தோடு நெருக்கடியான காலங்களில் அவர்கள் செய்த சேவைக்கு கல்வி அமைசசும், கல்வித் திணைக்களமும் என்ன வெகுமதி கொடுத்தது என்ற கேள்வியும் எழும்.

எனவே கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு நிரந்தர நியமனத்தை மத்திய கல்வி அமைச்சு தாமதமில்லாமல் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம்.

# சோமவன்சவின் விலகல் ஜே.வி.பி.க்கு நன்மையே

## என்கிறார் அமைச்சர் ஜோன்



சோமவன்ச அமரசிங்க ஜே.வி.பி.யை விட்டு விலகியது அந்தக் கட்சிக்கு நன்மையையே ஏற்படுத்தும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், அமைச்சருமான ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார். சோமவன்ச அமரசிங்க சட்சியை விட்டு விலகியமை கட்சியின் அபிவிருத்திக்கு வழியமைக்கும். பாரியளவில் பிரச்சினைகள் வன்முறைகள் நிலவிய காலப் பகுதியில் சோமவன்ச அமரசிங்க என்ன செய்தார் என்ன நடந்தது என்பதனை சற்றே சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அன்று ஜே.வி.பி.யின் தலைவர் ரோஹன விஜேவீரவின் தலைமையில் ஜே.வி.பி.எவ்வாறு செயற்பட்டது என்பதனை நினைத்துப் பார்க்க வேண்டும். அன்று அரச சொத்துக்கள் அழிக்கப்பட்டன. பொலிஸார், படையினர் மற்றும் அப்பாவிப் பொதுமக்கள் பாரியளவில் கொலை செய்யப்பட்டனர். அந்த நினைவுகள் மக்களை விட்டு இன்னமும் நீங்கவில்லை.

சோமவன்ச அமரசிங்க இன்றைய ஜே.வி.பி.யின் கொள்கைகளை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றார். தற்போதைய ஜே.வி.பி ஜனநாயக நெறிமுறையில் பயணம் செய்கின்றது. இந்த நெறிமுறை சோமவன்ச அமரசிங்கவிற்கு பிடிக்கவில்லையா?. சோமவன்ச அமரசிங்க கட்சியை விட்டு விலகியமை தற்போதைய ஜே.வி.பி. கட்சிக்கு நன்மையானதே என அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

# ஆயுர்வேத வைத்தியசாலை அமைக்கத் தீர்மானம்

மன்னார் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பேசாலையில் ஆயுர்வேத வைத்தியசாலை ஒன்றை அமைக்க வேண்டும் என மன்னார் பிரதேச சபை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு கடந்த புதன்கிழமை மன்னார் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதன் போதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மன்னார் சபைத் தலைவர் எஸ். மாட்டீன் டயஸ் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஆயுர்வேத வைத்தியசாலையின் அவசியம் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

பேசாலைப் பகுதியில் ஆயுர்வேத வைத்தியசாலை ஒன்றை அமைக்குமாறு தலைமன்னார் பேசாலை மக்கள் விடுத்த கோரிக்கைக்கிணங்கவே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக வட மாகாண சுதேச வைத்திய அமைச்சருடனும் மன்னார் சுதேச ஆயுர்வேத வைத்திய சங்கத்திடமும் கலந்துரையாடி பேசாலையில் ஒரு ஆயுர்வேத வைத்தியசாலையை நிர்மாணிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

# ஜே.வி.பி.யில் மீளவும் இணையமாட்டேன்

## திடமாகக் கூறும் சோமவன்ச



கடந்த வியாழக்கிழமை ஜே.வி.பி.யிலிருந்து விலகிய சோமவன்ச அமரசிங்க தான் மீண்டும் அக்கட்சியில் இணையப்போவதில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஜே.வி.பி.யில் அவரை மீள இணைத்துக் கொள்ள ஜே.வி.பி. தலைவர்கள் முயல்வதாக அறிக்கைகள் வெளியாகியுள்ளமை குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தான் மீண்டும் ஜே.வி.பி.யில் சேரப்போவதில்லை என குறிப்பிட்டுள்ள அவர் கிடைக்கின்ற முதல்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி புதிய கட்சியொன்றை ஆரம்பிக்கப்போவதாக குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் எதிர்வரும் பொதுத தேர்தலில் போட்டியிடவுள்ளதாகவும் தெரிவித்தார்.

மக்களுக்கு விசுவாசமுள்ள அரசாங்கமொன்றை அமைக்கத் தாம் செயற்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

சகல இன மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு தார்மீகப் பொறுப்புடைய அரசாங்கத்தை உருவாக்குவதே தமது இலக்காகும் என்றும் அவர் கூறினார்.

தம்மால் ஸ்தாபிக்கப்படவுள்ள புதிய கட்சியின் பெயர் மற்றும் தலைமைத்துவம் குறித்து எதிர்காலத்தில் நடைபெறவுள்ள சம்மேளனக் கூட்டத்தின் பின்னர் அறிவிக்கவுள்ளதாக சோமவன்ச குறிப்பிட்டார்.

ஆயினும், நாட்டிலுள்ள பிரதான கட்சிகளுக்கு எந்த வகையிலும் தம்மால் ஸ்தாபிக்கப்படவுள்ள கட்சி ஆதரவு தெரிவிக்காது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

இந்த நிலைமையின் கீழ் மக்கள் விடுதலை முன்னணியுடன் மோதலில் ஈடுபடும் எண்ணம் எதுவும் தனக்கில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சுயாதீன ஆணைக்குழு சட்டமூலம் எம்.பி.க்கள் ஆதரவளிக்கவேண்டும்

## சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

19ஆவது அரசியல் சட்ட திருத்தத்தின் கீழ் முன்வைக்கப்பட்டுள்ள சுயாதீன ஆணைக்குழுக்கள் தொடர்பான சட்ட மூலத்தை நிறைவேற்றுவதற்கு இலங்கையின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் முயற்சி எடுக்க வேண்டுமென இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தினால் நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ள அரசியல் யாப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் அரச சேவை, நீதிமன்றம், காவல்துறை, ஊழல் விசாரணை ஆகிய துறைகளுக்காக சுயாதின ஆணைக்குளுக்களை அமைப்பதற்கான சட்ட மூலமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சுயாதீன ஆணைக்குழுக்கள் தொடர்பான சட்ட மூலத்தை மூன்றில் இரண்டு பங்கு வாக்குகள் இருந்தால் நிறைவேற்ற முடியும் என இலங்கை உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள நிலையில், அதை செய்துமுடிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றுபட வேண்டும் என சட்டத்தரணிகள் சங்கத்தின் உப தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்த சட்ட மூலத்தை நிறைவேற்றுவது தொடர்பில் அரசியல் கட்சிகள் ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துகளை வெளியிட்டு வருவதாகவும், இதனால் சுயாதீன குழுக்கள் தொடர்பாக வழக்கறிஞர்களும் மக்களும் வைத்துள்ள நம்பிக்கை பிளவுபடும் அபாயம் எழுந்துள்ளதாகவும் பீரிஸ் தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரங்கள் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பது மற்றும் தேர்தல் முறை சீர்திருத்தம் போன்ற விடயங்கள் தொடர்பில் ஒருவருக்கொருவர் வாதாடிக்கொண்டிருப்பதை நாடாளுமன்ற உறுப்பினர்கள் தவிர்த்துவிட்டு, ஜனநாயகத்தை மீளக் கட்டியெழுப்ப கிடைத்துள்ள கடைசி சந்தர்ப்பத்தை அவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

### அரசியலுக்கு...

கப்பட்டன். இதனால் இவருக்கு எதிராக கடுவெல நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்தது.

ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ச தோல்வியடைந்ததைத் தொடர்ந்து இவர் அமெரிக்காவிற்கு மனைவியுடன் சென்றிருந்தார். இந்நிலையில் எதிர்வரும் 21ஆம் திகதி மீண்டும் நாட்டுக்கு திரும்புகின்றார்.

நாட்டுக்கு திரும்பும் பசில் ராஜபக்ச தனக்கு மீண்டும் அரசியலுக்கு வரும் எண்ணம் இல்லை என அச்செவ்வியில் தெரிவித்துள்ளார்.

### இரட்டைப்...

பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் புதிய விண்ணப்பங்களும் ஆய்வு செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரட்டைப் பிரஜாவுரிமையை வழங்குவதற்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பிரஜாவுரிமை, குடிவரவுத்துறை அமைச் சின் காரியாலயத்தில் விசேட நிகழ்வொன்று ஒழுங்கு செய்து வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### குடிநீர்..

இதுகுறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்த நிலையில் கடந்த பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதி நேரம் ஒதுக்குவதாக முதலமைச்சரின் செயலாளர் எமக்கு அறிவித்தார். ஆனால் நாம் இந்தியப் பிரதமர் வரும் நிலையில் இது சாத்தியப்படுமா என்று கேள்வி எழுப்பிய போது, அது சாத்தியப்படும் என செயலாளர் தெரிவித்தார். இறுதி நிமிடத்தில் அந்தச் சந்திப்பையும் இரத்துச் செய்தனர். நாம் இன்றுவரை இந்தக் கலந்துரையாடலுக்கான நேரம் ஒதுக்கி தரப்படும் என எதிர்பார்த்து இருக்கின்றோம். எனத் தெரிவித்தார்.

### நிபுணர்..

சீலனை செய்வதுடன் இவர்களுடன் முன் அனுபவம் கொண்ட வெளிநாட்டு நிபுணர்களையும் இணைப்பதன் மூலம் இங்குள்ளவர்களும் அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள முடியுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### ஹெலி...

ணங்கள் செலுத்தப்படாவிட்டால், ஹெலிகொப்டர்களை பெற்றுக்கொண்டவர்களிடம் அறவீடு செய்யுமாறு சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

சொந்தச் செலவிலேயே மஹிந்த ராஜபக்ஸ ஹெலிகொப்டர்களை பயன்படுத்தி தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கடிதமொன்றுக்கு விமானப் படையினர் விமானங்களை வழங்கியிருக்க மாட்டார்கள்.

எனவே ஹெலிகொப்டர்களை பெற்றுக்கொண்டவர்களேதான் அந்தச் செலவுகளை ஈடு செய்ய வேண்டுமென சுசில் பிரேமஜயந்த மேலும் தெரிவித்துள்ளார்.

### இந்தியா...


ஆலயத்திற்கு சென்றார்.

அங்கு இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளில் கலந்து கொண்ட பிரதமர், தனது எடைக்கு ஏற்ப 77 கிலோ சந்தனக் கட்டைகளை தட்சனையாக கொடுத்து வழிபட்டார். குறித்த சந்தனக் கட்டைகளின் பெறுமதி கிட்டத்தட்ட எட்டு இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. குறித்த சுற்றுப் பயணத்தில் பிரதமர் ரணிலுடன் மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதனும் இணைந்திருந்தார்.

மீனவர்கள் குறித்து ரணில் வெளியிட்ட சர்ச்சைக்குரிய கருத்துக்களால், அவருக்கு எதிராகப் போராட்டங்கள் வெடிக்கலாம் என்று மத்திய, மாநிலப் புலனாய்வுப் பிரிவுகள் எச்சரிக்கை விடுத்திருந்தன. இந்த நிலையில் பாதுகாப்புக்களும் பலப்படுத்தப்பட்டிருந்தன. இதனிடையே குருவாயூரில் வழிபாடுகளை முடித்தபின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ரணில், இந்தியாவுக்கோ, சீனாவுக்கோ சார்பானவன் அல்ல. இலங்கையின் நலன்களை உறுதிப்படுத்த வேண்டிய ஒரு பிரதமராகவே இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

# தேசிய இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வின் மூலமே தீர்வு

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டிலுள்ள தேசிய இனப் பிரச்சினைக்கு அதிகாரப்பகிர் வின் மூலமே தீர்வுகாண முடியு மென சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கல்முனையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது.

நாட்டில் இரண்டாம் தரப் பிரஜைகள் என எவரும் இல்லை தேசிய கீதத்தை தமிழில இசைப்பதற்கு அனுமதியளிக் கப்பட்டுள்ளது எனவும் இதன் மூலம் நாட்டில் இரண்டாம் தரப் பிரஜைகள் எவரும் கிடையாது என்பது புலனாகியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் சிறுபான்மை மக்கள் இரண்டாம் தரப் பிரஜைகளாக கருதப்பட் டனர் எனவும் தற்போது அந்த நிலைமை மாறி அனைவரும் சகோதரர்களாக வாழ்ந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய அரசாங்கம் நல்லி ணக்கம் மற்றும் சமத்துவம் போன்றவற்றை ஏற்படுத்துவதில் ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிவித்துள்ளார். தேசிய இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வே தீர்வு என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 80 இலங்கை பணிப்பெண்கள் குவைத்திலிருந்து நாடு திரும்பினர்

குவைத்தில் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கிய 80 இலங்கை பணிப்பெண்கள் நேற்று நாடு திரும்பியுள்ளனர்.

தற்காலிக கடவுச்சீட்டுகள் மூலம் அவர்களை நாட்டிற்கு அழைத்துவந்ததாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இந்தப் பணிப்பெண்கள் குவைத்திற்கான இலங்கை தூதரகத்தில் தஞ்சமடைந்திருந்த நிலையில், அவர்களை நாட்டிற்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டது.

80 பணிப்பெண்களும் நாடு திரும்ப வேண்டும் என்ற ஒரே நிலைப்பாட்டில் குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகத்தில் தஞ் சமடைந்திருந்ததாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் குறிப்பிட்டது.

இதன்பின்னர் இந்தப் பெண்கள் பணிபுரிந்த இடங்க ளின் எஜமானர்களுடன் பேச்சு வார்த்தைகளை நடத்தி, தொழில் ஒப் பந்தங்கள் தொடர் பில் காணப்பட்ட சட்டரீதியான தடைகளை சமாளித்து மிகுந்த சிரமத்திற்கு மத்தியில் அவர் களை நாட்டிற்கு அழைத்து வந்துள்ளதாக பணியகம் மேலும் தெரிவித்தது.

## மூன்று மாதத்தில்


# 60 எயிட்ஸ் நோயாளர்; 7 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

இவ்வருடத்தின் ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரையிலான மூன்று மாத காலப் பகுதியில் நாட்டில் எச்.ஐ.வி. தொற்றிய நோயா ளர்கள் 60 பேர் இனங்காணப்பட் டுள்ளதாகவும், இவர்களில் 7 பேர் இக்காலப் பகுதியிலேயே உயிரிழந்துள்ளதாகவும் தெரி விக்கப்படுகின்றது.

தேசிய பாலியல் நோய் மற்றும் எய்ட்ஸ் தடுப்பு செயற் திட்டத்தின் பணிப்பாளர் டாக்டர் சிசிர லியனகே இந்த தகவலை வெளியிட்டுள்ளார்

# தாமரைக் கோபுர நிர்மானம் தொடர்ந்தும் முன்னெடுப்பு



சீன உதவியுடன் முன்னெடுக் கப்பட்டு வரும் தாமரைக் கோபுரத்தின் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைத் தொலை தொடர்பு கட்டுப்பாட்டு ஆணைக் குழு, நகர அபிவிருத்திச் சபை மற்றும் இலங்கை துறைமுக அபிவிருத்தி அதிகார சபை ஆகியன கூடி ஆராய்ந்து குறித்த காணியின் உரிமை தொடர்பிலான பிரச்சினைக்கு இணக்கம் கண்டுள்ளன.

எதிர்வரும் மூன்று மாத காலப் பகுதிக்குள் காணி உரிமை தொடர்பிலான பிரச்சினைக ளுக்கு தீர்வு காணப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக்காணி இலங்கை துறைமுக அபிவிருத்திச் சபைக்கு சொந்தமானது எனவும், அபிவிருத்தித் திட்டத்திற்கு வழங்கப்பட்டமைக்கான எந்த விதமான ஆவணங்களும் கிடையாது எனவும் துறைமுக அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்திருந்தார்.

தாமரைக் கோபுரம் அமைக் கும் பணிகள் பூர்த்தியாகும் நிலையை அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தக் கோபுரம் தெற்காசிய வலத்தின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தியுள்ளதாக இந்தியா அண்மையில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இ.போ.ச.விற்கு 84 மில்லியன் இலாபம்

கடந்த புத்தாண்டு தினங்க ளில் மேற்கொள்ளப்பட்ட விசேட போக்குவரத்து பஸ் சேவையினால் 84 மில்லியன் ரூபா வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் ரமால் சிறிவர்தன தெரிவித்துள்ளார்.

புத்தாண்டு தினங்களில் 3482 பஸ்கள் சேவையில் ஈடுபடுத் தப்பட்டதாகவும் சபையின் தலைவர் மேலும் கூறியுள்ளார்.

# இலத்திரனியல் அ.அட்டை ஓய்வூதியர்களுக்கு அறிமுகம்

ஓய்வு பெற்றவர்களுக்கான இலத்திரனியல் அடையாள அட்டை அரசாங்கத்தினால் அறி முகப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது நடைமுறை யிலுள்ள அடையாள அட்டைகள் 1960 ஆம் ஆண்டிலிருந்து பாவ னையில் உள்ளன.


ஓய்வூதியம் உள்ளிட்ட கொடுக்கல் வாங்கல்களை இலகுபடுத்துவதற்காக, நவீன தொழில்நுட்பத்துடனான புதிய அடையாள அட்டை அறிமுகப்ப டுத்தப்பட்டுள்ளது.

மின்சாரக் கட்டணம், காப் புறுதி தவணைக் கட்டணங்கள் உள்ளிட்ட கட்டணங்களை எதிர்காலத்தில் இலத்திரனியல் அடையாள அட்டையின் மூலம் செலுத்த முடியும் என ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம் சுட்டிக் காட்டினார்.

ஓய்வூதியம் மாத்திரமன்றி, விதவைகள் மற்றும் தபுதாரர் கொடுப்பனவுகள் உட்பட சகல நவீன கொடுக்கல் வாங்கல் வசதிகளையும் இலத்திரனியல் அடையாள அட்டையின் மூலம் பெற்றுக்கொள்ள முடியுமென அவர் கூறினார்.

## ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர்

# டில்லி அணி "திரில்" வெற்றி




(விசாகப்பட்டினம்)

ஹைதராப்பாத் அணிக்கு எதிரான ஐ.பி.எல்.,லீக் போட் டியில் டில்லி அணி 4 ரன்கள் வித்தியாசத்தில் "திரில்" வெற்றி பெற்றது.

விசாகப்பட்டினத்தில் நேற்று மாலை நடந்த லீக் போட்டியில் டில்லி, ஹைதராபாத் அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற டில்லி அணியின் கப்டன் டுமினி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். ஹைதராபாத் அணி யில் போல்ட் நீக்கப்பட்டு, ஸ்ரெய்ன் வாய்ப்பு பெற்றார்.

டில்லி அணிக்கு அகர்வால் (1) ஏமாற்றினார். சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஸ்ரேயாஸ் அரைச் சதம் அடித் தார். இவர் 60 ரன்களில் அவுட் டானார். தன் பங்கிற்கு டுமினி (54) அரைச்சதம் எட்டினார். யுவ ராஜ் (9) நிலைக்கவில்லை. டில்லி அணி 20 ஓவரில் 4 விக் கெட்டுக்கு 167 ரன்கள் எடுத்தது. மத்யூஸ் (15), கேதர் ஜாதவ் (19) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் பிரவீன்குமார், புவனேஸ்குமார், ஸ்ரெய்ன், ஆஷிஸ்ரெட்டி தலா ஒரு விக் கெட்டை கைப்பற்றினர்.

தொடர்ந்து 168 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலை யில் ஹைத ராபாத் அணிக்கு வோர்னர், தவான ஜோடி தொடக்கம் தந்தது. இவர்கள் சிறப்பாக செயற்பட்ட போதும், டுமினி தொல்லை தந்தார். இவரின் "சுழலில்" வோர்னர் (28), தவான் (18) ஓட்டங்களால் ஆட்டமிழந்தனர். லோகேஷ் ராகுல் (24), நமன் ஓஜா (12) நிலைக் கவில்லை. போபரா 41 ரன்கள் எடுத்தார். ஆஷிஸ் ரெட்டி (15), கரண் சர்மா (19) வெகு நேரம் நிலைக்கவில்லை. ஹைத ராபாத் அணி 20 ஓவரில் 8 விக் கெட்டுக்கு 163 ரன்கள் மட்டும் எடுத்து தோல்வியடைந்தது.

பந்துவீச்சில் டுமினி 4விக்கெட் டுக்களை கைப்பற்றியதுடன் ஆட்டநாயகனாகவும் அவரே தெரிவானார்

# ரசலின் அதிரடியால் வென்றது கொல்கத்தா

கொல்கத்தாவின் சகலதுறை வீரர் ரசலின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியை 4 விக்கெட்டுக்களால் வீழ்த்தியது கொல்கத்தா நைட் றைடர்ஸ்.

புனேயில் நேற்று நடை பெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற கொல்கத்தா நைட் றைடர்ஸ் களத்தடுப்பை தெரிவு செய்தது. இதனையடுத்து துடுப்பெடுத் தாடிய கிங்ஸ்லெவன் பஞ்சாப் பிற்கு முரளி விஜய், சேவாக் ஆரம்ப வீரர்களாக களமிறங் கினர். எனினும் வந்த வேகத்தி லேயே விஜய் நடையைக் கட்டினார்.

இதனையடுத்து வந்த வீரர்க ளும் வெளியேற அவ்வணியின் சார்பில் பெய்லி (60), மைக்ஸ்வெல் (33) ஓட்டங்க ளைப் பெற அவ்வணி 20 ஓவர் கள் நிறைவில் 9 விக்கெட் டுக்களை இழந்து 155 ஓட்டங் களைப் பெற்றது.

பந்து வீச்சில் உமேஷ்யாதவ் 3, மோர்கல், ரசல் இருவரும் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

இதனையடுத்து 156 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கொல்கத்தா அணி 60 ஓட்டங்க ளைப் பெறுவதற்குள் 5 விக்கெட் டுக்களை இழந்து தடுமாறியது.

எனினும் யூசுப்பதானுடன் இணைந்த ரசல் வானவே டிக்கை நிகழ்த்தினார் அவரின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் கொல்கத்தா அணி 17.5 ஓவரில் 6 விக்கெட்டுக்களை இழந்து 159 ஓட்டங்களைப் பெற்று 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

பந்துவீச்சில் சந்தீப்சர்மா 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி னார். ஆட்டநாயகனாக ரசல் தெரிவானார்.

# மரண அறிவித்தல்



## சிவசுப்பிரமணியம் பவானந்தன்

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் மாத் கலை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணி யம் பவானந்தன் நேற்று முன்தினம் (17.04.2015) வெள்ளிக கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசுப் பிரமணியம்-தெய்வநாயகி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வீரசிங்கம் மற்றும் சரஸ்வதி (கனடா) தம்பதியினரின் அன்பு மருமகனும், சரோஜா தேவியின் அன்புக் கணவரும், பார்த்தீபன், கோபிகா (உயர்தர மாணவி, கொக்குவில் இந்துக்கல்லூரி), ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற பாலசந்திரன் மற்றும் பானுமதி பத்மநாதன் (வனிக்கா மெடிக்கல்) பவானி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கோபால சிங்கம் நாகேஸ்வரி, சோமசேகரம், காலஞ்சென்றவர்களான கைலாசபதி, பேரின்பநாதன் தர்மேந்திரன் ஆகியோரின் மைத்து ணரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது தாயாரின் இல்லத்தில் (மூன்றி லுப்பை ஏழாலை மேற்கு) நடைபெற்று, பூதவுடன் தகனக் கிரியை களுக்காக ஏழாலை மேற்கு உசத்தியாவோடை இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு**

**தகவல்** — **பார்த்தீபன் (மகன்) 0774717118**

**மனைவி, பிள்ளைகள்** (இ) — **ஜெயசிங்கம் 0774045572**

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 ஏப்ரல் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.